# 4. கைத்தொழில்


## 4.1 பொதுவான போக்குகள்


2000ஆம் ஆண்டில் பொதுவாக, கைத்தொழில்துறை பன்னாட்டுப் பொருளாதார சூழலில் ஏற்பட்ட ஆரோக்கியமான அபிவிருத்திகள், சாதகமான உள்நாட்டுப் பொருளாதார நிலைமைகள் மற்றும் கொள்கைகள், தகவல் தொழில் நுட்பத்திலேற்பட்ட முன்னேற்றங்கள், வினைத்திறன்மிக்க முகாமைத்துவ தொழில்நுட்பம் என்பனவற்றின் மூலம் நன்மைகளைப் பெற்றது. தொழிற்சாலைக் கைத்தொழில்களின் வெளியீடாக அளவிடப்பட்ட பொதுவான, கைத்தொழில் வெளியீடு 1999இன் 4.5 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2000ஆம் ஆண்டில் 11 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தது. தொழிற்சாலைக் கைத்தொழில்களின் வெளியீடு தயாரிப்புத் துறையில் 81 சதவீதத்திற்கு வகைகூறியதுடன் 2000ஆம் ஆண்டின் பொதுவான பொருளாதார வளர்ச்சிக்கு 23 சதவீதம் பங்களித்தது. ஆண்டின் முதல் மூன்று காலாண்டு களிலும் கைத்தொழில் வெளியீட்டின் வளர்ச்சி 12.5 சதவீதமாக இருந்ததெனினும், இறுதிக் காலாண்டில் 6.7 சதவீதத்திற்கு மிதமடைந்தது. 2000ஆம் ஆண்டில் கைத்தொழில் துறையின் உற்பத்தி இயலளவு 4.6 சதவீதத்தினால் அதிகரித்தது. முதலீட்டுச்சபை மற்றும் கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சு என்பனவற்றின் கீழ் பதிவு செய்யப்பட்ட 131 புதிய தொழில் முயற்சிகள் இவ்வாண்டில் வர்த்தகத் தொழிற்பாட்டினைத் தொடங்கின.

ஆரோக்கியமான கைத்தொழில் வளர்ச்சிக்கான முக்கிய பங்களிப்பாளராக ஆடை மற்றும் புடவைக் கைத்தொழினால் வழி நடத்தப்பட்ட ஏற்றுமதிசார்ந்த கைத்தொழில்கள் விளங்கின. ஏற்றுமதி சார்ந்த கைத்தொழில்களில் பாரிய துணைத்துறையாகவுள்ள ஆடைகள் மற்றும் புடவைகள்துறை அளவு நியதிகளில் 16.2 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்ததுடன் 2000ஆம் ஆண்டின் கைத்தொழில் வளர்ச்சியில் 59 சதவீதத்திற்கு பங்களித்தது. இலங்கையில் ஏற்றுமதி செய்யப்பட்ட ஆடைகளின் பன்னாட்டு விலைகளும் இவ்வாண்டில் 5.3 சதவீதத்தினால் அதிகரித்தன. 2000ஆம் ஆண்டில் உயர்ந்த வளர்ச்சியைப் பதிவு செய்த ஏனைய ஏற்றுமதி சார்ந்த கைத்தொழில்களாக தயாரிக்கப்பட்ட இறப்பர், பிளாத்திக்கு, பொறிகள், பதனிடப்பட்ட வைரம், மின்னியல் பாகங்கள் மற்றும் பதனிடப்பட்ட தேயிலை என்பன காணப்பட்டன.

உள்நாட்டுச் சந்தைக்குப் பொருட்களை வழங்குகின்ற கைத்தொழில்கள் பொதுவாக கலப்பான செயலாற்றத்தைக் காட்டின. குளிர்பானங்கள், பால் உற்பத்திகள், பதனிடப்பட்ட இறைச்சி, விசுக்கோத்து, வெறியக்குடிவகை, பெற்றோலிய உற்பத்திகள், இரசாயனங்கள், உருவமைக்கப்பட்ட உலோகங்கள், கட்டட மூலப் பொருட்கள் சவர்க்காரம் மற்றும் அழுக்கு நீக்கிகள் ஆகியவற்றைக் கொண்ட கைத்தொழில்கள் உயர்ந்தமட்ட வெளியீட்டைக் கொண்டிருந்தன. அவ்வுற்பத்திகளுக்கான உள்நாட்டுக் கேள்வி அதிகரித்தமைக்கு விளம்பரங்கள் மேம்பட்ட விநியோக முறைகள், கவர்ச்சிகரமான பொதியிடல், மேம்பட்ட தரம், என்பனவே காரணமாகும். பியர், புகையிலை உற்பத்தி, சீனி, பி.வி.சி உற்பத்திகள், மின்கலங்கள் மற்றும் உலோக உற்பத்தி ஆகிய கைத்தொழில்களின் வெளியீடு இவ்வாண்டில் வீழ்ச்சியடைந்தன.

**வரைபடம் 4.1**
**கைத்தொழில் உற்பத்திகளின் வளர்ச்சியும் உள்ளமைப்பும்**



2000ஆம் ஆண்டில் ஐக்கிய அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகளில் காணப்பட்ட ஆரோக்கியமான வளர்ச்சி முக்கிய ஏற்றுமதி விடயங்களுக்கான கேள்வியைத் தூண்டியமையின் காரணமாக ஏற்றுமதிக் கைத்தொழில்கள் நன்மையடைந்தன. கிழக்காசிய நாடுகளின் விரைவான மீட்சியும் அதனைத் தொடர்ந்து அவற்றின் நாணயங்கள் உயர்வடைந்தமையும் இலங்கை ஏற்றுமதிகள் பன்னாட்டுப் போட்டித்தன்மையை மீண்டும் பெறுவதற்கு உதவின. தாழ்ந்த பணவீக்கம், குறைந்த வட்டிவீதங்கள் தொழிலாளர் உற்பத்தியாக்கத்தில் காணப்பட்ட மேம்பாடு என்பனவற்றுடன் 2000ஆம் ஆண்டின் தொடக்கப்பகுதியில் நிலவிய சாதகமான உள்நாட்டுப் பொருளாதார சூழலும் சேர்ந்து இலங்கை ஏற்றுமதிகளின் பன்னாட்டுப் போட்டித்தன்மை மேம்பட உதவின.

தகவல் தொழில்நுட்பத்தில் ஏற்பட்ட முன்னேற்றம், நவீன சாதனங்களின் பயன்பாடு என்பனவற்றின் காரணமாக ஏற்றுமதி சார்ந்த கைத்தொழில்கள் அதிகரித்த அளவில் பன்னாட்டுச் சந்தைக்குள் நுழையக் கூடியனவாக இருந்தன. நவீன தொழில்நுட்ப வலையமைப்பானது தயாரிப்பாளர்கள் வெளிநாடுகளிலுள்ள அவர்களது வர்த்தகப் பிரதிநிதிகளிடமிருந்து சந்தைத் தகவல்களை விரைவாக பெற்றுக்கொள்ள உதவியமையின் மூலம் உயர்ந்த கேள்விகளைக் கொண்ட உற்பத்திப் பொருட்களை தாமதமின்றி வழங்குவதற்கு அவர்களை இயலச் செய்தது. பல நிறுவனங்கள் 2000ஆம் ஆண்டில் புதிய தொழில்நுட்பங்களைப் பெற்றுக் கொள்வதற்கும் நவீன சாதனங்களை நிறுவுவதற்கும் நோக்கம் கொண்டுள்ளன. முன்னேற்றம் கண்ட தொழில்நுட்ப நிகழ்ச்சித் திட்டங்களின் கீழ் வழங்கப்பட்ட இறை ஊக்குவிப்புக்களும் கைத்தொழிலதிபர்கள் தமது உற்பத்திச் செய்முறைகளை நவீனப்படுத்த ஊக்குவித்தன. இந் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 2000ஆம் ஆண்டு திசெம்பர் இறுதிவரை 409 தயாரிப்பாளர்கள்

**அட்டவணை 4.1**
கைத்தொழில் உற்பத்திகளின் பெறுமதி
(1990 நிலையான விலைகளில்)

| வகை | ரூபா மில்லியன் | | | | | சதவீத மாற்றம் | |
|---|---|---|---|---|---|---|---|
| | 1996 | 1997 | 1998 | 1999 | 2000(அ) | 1999 | 2000(அ) |
| 1. உணவு, குடிபானங்கள், புகையிலை | 35,908 | 37,146 | 40,756 | 41,742 | 44,241 | 2.4 | 6.0 |
| உணவு, ஏனையவை | 21,314 | 22,343 | 24,910 | 26,330 | 28,094 | 5.7 | 6.7 |
| வெறியக் குடிவகை | 3,027 | 2,961 | 3,458 | 3,327 | 3,397 | -3.8 | 2.1 |
| குடிபானம் | 5,104 | 6,032 | 6,590 | 6,432 | 7,210 | -2.4 | 12.1 |
| புகையிலை | 6,463 | 5,810 | 5,798 | 5,653 | 5,540 | -2.5 | -2.0 |
| 2. புடவைகள், அணியும் ஆடைகள், தோல் உற்பத்திகள் | 58,832 | 69,769 | 72,943 | 78,282 | 90,715 | 7.3 | 15.9 |
| அணியும் ஆடைகள் | 49,792 | 59,780 | 62,602 | 67,861 | 79,126 | 8.4 | 16.6 |
| புடவைகள் | 6,299 | 6,926 | 7,226 | 7,197 | 8,140 | -0.4 | 13.1 |
| தோல் | 2,741 | 3,063 | 3,115 | 3,224 | 3,450 | 3.5 | 7.0 |
| 3. மர, மர உற்பத்திகள் | 1,321 | 1,334 | 1,378 | 1,423 | 1,544 | 3.3 | 8.5 |
| 4. தாளும் தாள் உற்பத்திகளும் | 3,550 | 3,561 | 3,446 | 3,412 | 3,624 | -1.0 | 6.2 |
| 5. இரசாயனம், பெற்றோலியம், இறப்பர், பிளாத்திக்கு உற்பத்திகள் | 30,635 | 32,082 | 36,223 | 36,281 | 41,140 | 0.2 | 13.4 |
| இரசாயனம், தீந்தை, வளமாக்கி | 4,091 | 4,584 | 5,182 | 5,571 | 6,379 | 7.5 | 14.5 |
| இறப்பர் | 4,660 | 5,539 | 6,015 | 6,082 | 6,824 | 1.1 | 12.2 |
| பிளாத்திக்கு மற்றும் பிவிசி | 3,113 | 3,584 | 3,874 | 4,292 | 4,571 | 10.8 | 6.5 |
| மருந்தாக்கல் பொருட்கள், சுத்தமாக்கிகள், ஏனையவை | 7,784 | 8,797 | 9,853 | 10,336 | 10,956 | 4.9 | 6.0 |
| பெற்றோலியம் | 10,987 | 9,578 | 11,299 | 10,000 | 12,410 | -11.5 | 24.1 |
| 6. உலோகமல்லாக் கனிப்பொருள் உற்பத்திகள் | 13,360 | 13,914 | 14,619 | 15,740 | 16,092 | 7.7 | 2.2 |
| வைரம் பதனிடல் | 4,842 | 4,753 | 4,360 | 5,049 | 5,175 | 15.8 | 2.5 |
| மட்பாண்ட உற்பத்திகள் | 1,838 | 1,926 | 1,991 | 2,029 | 2,053 | 1.9 | 1.2 |
| சீமெந்து | 3,607 | 3,896 | 4,628 | 4,785 | 4,823 | 3.4 | 0.8 |
| கட்டடப் பொருட்களும் ஏனையவையும் | 3,073 | 3,339 | 3,640 | 3,877 | 4,040 | 6.5 | 4.2 |
| 7. அடிப்படை உலோக உற்பத்திகள் | 1,636 | 1,671 | 1,856 | 1,917 | 2,024 | 3.3 | 5.6 |
| 8. உருவமைக்கப்பட்ட உலோக உற்பத்திகள் | 6,252 | 7,437 | 8,235 | 8,680 | 9,071 | 5.4 | 4.5 |
| 9. வேறு எங்கும் குறிப்பிடப்படாத உற்பத்திகள் | 3,443 | 3,904 | 4,093 | 4,375 | 4,559 | 6.9 | 4.2 |
| மொத்தம் | 154,937 | 170,818 | 183,549 | 191,852 | 213,010 | 4.5 | 11.0 |

(அ) தற்காலிகமானவை.

மூலங்கள்: இலங்கை மத்திய வங்கி.
இலங்கை முதலீட்டுச் சபை.

ரூ.11.4 பில்லியன் பெறுமதியான பொறிகளை இறக்குமதி செய்துள்ளனர். மனித தவறுகளை வெகுவாகக் குறைத்துவிட்ட புதிய தொழில்நுட்பமும், தன்னியக்கப்படுத்தப்பட்ட முறைகளும் தொடர்ச்சியாக சீரான தரத்தைப் பேணி, உயர்ந்த உற்பத்தியாக்கத்தை உறுதிப்படுத்தியதுடன் தொழிலாளர் ஊக்கத்தையும் உயர்த்தியது. முன்னணிப் பன்னாட்டு வாங்குனர்களுடனான நெருங்கிய உறவும் இணைந்த தொழில் முயற்சிகள் நிறுவப்பட்டமையும் கூடியளவு ஏற்றுமதிக் கட்டளைகளைப் பெறுவதனை இயலச்செய்தன.

உள்நாட்டுக் கொள்கையைப் பொறுத்தவரையில், தனியார்துறையினால் வழி நடத்தப்படும் ஏற்றுமதிசார்ந்த கொள்கைகளையே அரசாங்கம் தொடர்ந்தும் பின்பற்றிய வேளையில் பன்னாட்டு வர்த்தகத்திற்கு வசதிகளை வழங்குவதிலும் தீவிரமான பங்கொன்றினை வகித்தது. 2000ஆம் ஆண்டு மார்ச்சில் அரசாங்கம் இந்திய - இலங்கை சுதந்திர வர்த்தக உடன்படிக்கையை நடைமுறைப்படுத்தியது. ஆண்டின் பிற்பகுதியில் அரசாங்கம் ஐரோப்பிய ஒன்றியத்துடன் உடன்படிக்கையொன்றில் கையெழுத்திட்டமையானது அனுமதிப் பங்கு கட்டுப்பாடு எதுவுமின்றி இலங்கையின் ஏற்றுமதியாளர்கள் ஐரோப்பிய சந்தையில் நுழைவதனை இயலச் செய்தது. இது 2001ஆம் ஆண்டு சனவரி 1ஆம் நாளிலிருந்து நடைமுறைக்கு வரும். பன்னாட்டு வர்த்தகத்தில் வர்த்தக அடையாளச் சந்தைப்படுத்தலானது முக்கியமானதொரு அம்சமாக மாறியுள்ளமையினால், இலங்கை முதலீட்டுச்சபையும் ஏற்றுமதி அபிவிருத்திச் சபையும் புதிய வாய்ப்புக்களை தேடிக் கொள்வதற்காகவும் புகழ்மிக்க வர்த்தக அடையாளங்களைக் கொண்ட தயாரிப்பாளர்களுடன் தொடர்புகளை நிறுவிக் கொள்வதற்காகவும் இலங்கையில் கொள்வனவு நிலையங்களை ஏற்படுத்த அவர்களை ஊக்குவிப்பதற்குமாக பல வர்த்தகப் பயணங்களை ஒழுங்கு செய்தன. இது மூன்றாவது தரப்பினரின் தலையீடுகளின் அளவினைக் குறைக்க உதவியதுடன் முன்னணிப் பன்னாட்டு வாங்குனர்களுடன் நெருங்கிய உறவுகளையும் ஏற்படுத்தியது.

பொறிகள் மற்றும் மூலப் பொருட்களின் இறக்குமதிக்காக தொடர்ச்சியாக வரவு செலவுத் திட்டங்களில் அறிமுகப்படுத்தப்பட்ட பல்வேறு ஊக்குவிப்புக்கள், தீர்வை மற்றும் வரிச் சலுகைகள், கைத்தொழில் பூங்காவிலும் பிரதேச ஏற்றுமதிப் பதனிடல் வலயங்களிலும் குறித்துரைக்கப்பட்ட உட்கட்டமைப்பு வசதிகளின் அபிவிருத்தி மற்றும் ஆடை அனுமதிப்பங்கு நிருவாகத்தில் மேம்பாடு என்பன கைத்தொழில் துறையின் அபிவிருத்தி மீது நன்மை பயக்கும் தாக்கங்களை ஏற்படுத்தியுள்ளன. இலங்கைத் தயாரிப்பாளர்களை பிராந்திய மற்றும் உலகளாவிய போட்டிகளுக்கு வெளிக்கொண்டுவருவதற்கு கைத்தொழில் உற்பத்திகளை மீளவடிவமைப்பதற்காக யப்பான் பன்னாட்டு ஒத்துழைப்பு முகவர் மற்றும் ஐக்கிய நாடுகள் கைத்தொழில் அபிவிருத்தி அமைப்பு என்பனவற்றின் ஒத்துழைப்புடன் கைத்தொழில் மயமாக்கல் மற்றும் முதலீட்டு ஊக்குவிப்புக்களுக்காக அரசாங்கம் முதன்மைத் திட்டமொன்றினை வகுத்திருக்கிறது. இம் முதன்மைத் திட்டத்தின் கீழ், ஆறு எதிர்கால மேம்பாட்டிற்காக ஆறு கைத்தொழில்கள் இனங் காணப்பட்டுள்ளதுடன் இக் கைத்தொழில்களை அபிவிருத்தி செய்வதற்கு குறிப்பிட்ட உபாயங்கள் வடிவமைக்கப்பட்டிருக்கின்றன. முதலீட்டு ஊக்குவிப்புக்களை ஒழுங்கு முறைப்படுத்த வேண்டியதன் தேவை 2000ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்ட முன் மொழிவுகளில் வலியுறுத்தப்பட்டிருந்தன. இதன் கீழ், முதலீட்டுச்சபையினால் வழங்கப்பட்ட சில சலுகைகளை ஒழுங்கு முறைப்படுத்துவதற்கு குறித்துரைக்கப்பட்ட முன்மொழிவு அறிமுகப்படுத்தப்பட்டது. முதலீட்டுச் சபையல்லாக் கைத்தொழில்களின் எதிர்கால வளர்ச்சிக்கான உள்ளார்ந்த வளத்தினை நேரிய முறையில் பயன்படுத்திக் கொள்ளவும் வசதி வாய்ப்புக்களிலுள்ள ஒழுங்கீனங்களை அகற்றிக் கொள்வதற்குமாக முதலீட்டுச்சபை மற்றும் முதலீட்டுச்சபையல்லா நிறுவனங்களுக்கும் இதே ஊக்குவிப்புக்களையும் வசதிகளையும் வழங்குவதற்காக 2001 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டம் முன்மொழிந்தது.

தயாரிப்பாளர்கள் உற்பத்திச் செலவினைக் குறைத்துக் கொள்வதற்காக துணை ஒப்பந்தங்கள், வெளியிலிருந்து பொருட்களை உற்பத்தி செய்தல், தொழிற்படு மூலதனத்தின் வினைத்திறன் அதிகரிப்பு, விரயங்களின் குறைப்பு , கழிவுப் பொருட்களை மீண்டும் பயன்படுத்தல், வலுச் சேமிப்புப் போன்ற பல்வேறு வழிமுறைகளை அறிமுகப் படுத்தியிருக்கின்றனர். எனினும், 2000ஆம் ஆண்டின் பிற்பகுதியில் செலவு உயர்வடைந்தமைக்கு இறக்குமதி செய்யப்பட்ட மூலப்பொருட்கள், எரிபொருள், மின்வலு, தொலைபேசி, துறைமுகக் கட்டணங்கள் மற்றும் கப்பற் கட்டணங்கள் என்பன வழிவகுத்து கைத்தொழில்துறையின் மீது பழுவைச் சுமத்தியமையே காரணமாகும்.


கைத்தொழில்துறை நடவடிக்கைகள் நாட்டின் தொலைத் தொடர்பூட்டல், மின்வலு உருவாக்கத்தின் விரிவாக்கம், துறைமுக வசதிகள், சுங்கத் தாமதங்கள் குறைக்கப்பட்டமை போன்ற அடிப்படைக் கைத்தொழில் உட்கட்டமைப்புக்களில் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்ட மேம்பாடுகளினால் நன்மைகளைப் பெற்றுக் கொண்டன. எனினும் வீதி மற்றும் போக்குவரத்து வலையமைப்பு முன்னேற்றம் இன்னமும் போதியதாக இல்லாமையானது கைத்தொழில்துறையின்

வளர்ச்சிக்கு தடையாகக் காணப்படுகிறது. வேலை நிறுத்தங்கள் மற்றும் தொழிலாளர் தகராறுகள் குறைந்தளவில் இடம்பெற்ற ஆண்டாகவும் தொழிலாளர் உறவுமுறை மேம்பட்ட ஆண்டாகவும் இவ்வாண்டு குறிக்கப்படுகிறது. தொழிலமைவிடங்களில் கைத்தொழில் அமைதியைப் பேணும்பொருட்டு பல நிறுவனங்கள் தொழிற் சங்கங்களுடன் கூட்டு உடன்படிக்கைகளில் கையெழுத்திட்டுள்ளன. குறிப்பாக ஆண்டின் தொடக்கப் பகுதியில் நிலவிய குறைந்த பணவீக்கத்தின் முக்கிய காரணமாக கூலி அதிகரிப்புக்களுக்கான அழுத்தம் குறைவாகக் காணப்பட்டது.

பல பாரிய கம்பனிகள் மிகப் பிந்திய தொழில் நுட்பங்கள் தொடர்பான அறிவினை வளர்க்கும் பொருட்டு உற்பத்தியின் ஒவ்வொரு மட்டத்திலும் அனைத்தையும் உள்ளடக்கிய உள்ளகப் பயிற்சிகளை வழங்கின. எனினும் கைத்தொழில் நடவடிக்கைகளின் விரைவான வளர்ச்சிக்கு தேர்ச்சி அபிவிருத்தியில் மேலும் முன்னேற்றங்கள் அடைவது அவசியமாகவுள்ளது. தேர்ச்சி பெற்ற மற்றும் தேர்ச்சியற்ற இரு வகை தொழிலாளர்களினதும் பற்றாக்குறையும் முக்கியமானதொரு தடையாக தோற்றம் பெற்று வருகின்றது. கைத்தொழில் துறையில் எதிர்காலத் தொழிலாளர் தேவைகளை நிறைவு செய்வதற்காக, சுதந்திரமான சந்தைப் பொருளாதாரக் கொள்கைகளுடன் இசைந்து செல்லலும் நெகிழ்ச்சியுற்ற தொழிலாளர் சந்தையை உறுதிப்படுத்துவதற்கு தொழிலாளர் கொள்கையை மீளாய்வு செய்வது இன்றியமையாததாகவுள்ளது.

முறிவடைந்த கைத்தொழில்களை இலகுவாகவும், விரைவாகவும் ஒடுக்கிவிடுவதற்கு அல்லது மீள அமைப்பதற்கும் குறிப்பாக இறப்பர், பிளாத்திக்கு, உலோகம், மரம் மற்றும் உணவு பதனிடல் கைத்தொழில்களினால் தோற்றுவிக்கப்படும் கைத்தொழில் கழிவுகளினால் உருவாகும் சூழல் மாசடைதலை தடுப்பதற்கும் பொருத்தமான சட்ட ஏற்பாடுகள் போதுமானதாக இல்லாமை கடும்

**வரைபடம் 4.2**
**முக்கிய கைத்தொழில் துணைத் துறைகளின் செயலாற்றம்**
**(1990 நிலையான விலைகளில்)**




விசனத்திற்குரியதொரு விடயமாக மாறியுள்ளது. இறப்பர் தயாரிப்புக் கைத்தொழில்களிலுள்ள சில கம்பனிகள் மாசடைதலை மிகக் குறைப்பதற்கும் கழிவு உருவாக்கங்களில் வினைத்திறன் மிக்க முகாமைத்துவத்தை அதிகரிப்பதற்குமாக நீர் சுத்தப்படுத்தல் காற்றினைத் தூய்மைப்படுத்தும் முறைகள், கழிவு நீர் அகற்றும் முறைகள் கழிவுப் பொருட்களை மீண்டும் பயன்படுத்தல் போன்ற சுற்றாடல் மாசுபடலைக் கட்டுப்படுத்தும் முறைகளில் முதலீடு செய்திருக்கின்றன.

## 4.2 உற்பத்தி

2000ஆம் ஆண்டில் தொழிற்சாலைக் கைத்தொழில்களின் வளர்ச்சியானது, முதலீட்டுச் சபையின், அதிகாரத்திற்கு வெளியேயுள்ள 480 கைத்தொழில் முயற்சிகளை உள்ளடக்கிய மத்திய வங்கியின் 2000ஆம் ஆண்டிற்கான கைத்தொழில் உற்பத்தி அளவீடு, அரசதுறைக் கைத்தொழில்களின் கைத்தொழில் உற்பத்தி மற்றும் முதலீட்டுச்சபைத் தொழில் முயற்சிகளின் ஏற்றுமதித் தரவுகள் என்பனவற்றின் அடிப்படையில் மதிப்பீடு செய்யப்பட்டது. மதிப்பீடுகள் தயாரிப்புத்துறையின் ஒரு கூறினை மட்டும் அதாவது தேயிலை, இறப்பர், மற்றும் தெங்கு பதனிடல் மற்றும் சிறு கைத்தொழில் ஆகிய இரு துறைகளையும் உள்ளடக்காத தொழிற்சாலை வெளியீடுகளை மட்டுமே உள்ளடக்குகிறது. தொழிற்சாலைக் கைத்தொழில்களின் வெளியீடு உண்மை நியதிகளில் 11 சதவீதத்தினாலும் பெயரளவு நியதிகளில் 16.8 சதவீதத்தினாலும் வளர்ச்சியடைந்தமையானது 2000ஆம் ஆண்டில் தொழிற்சாலைக் கைத்தொழில்களுக்காக 5.2 சதவீத உட்கிடை விலைச்சுருக்கியை தோற்றுவித்தது.

இவ்வாண்டில், அரசதுறைக் கைத்தொழில்கள் 24.1 சதவீத வளர்ச்சியைப் பதிவு செய்தவேளையில் தனியார்துறைக் கைத்தொழில்கள் 10.5 சதவீத வளர்ச்சியைப் பதிவு செய்தன. கைத்தொழில் வெளியீட்டிற்காக அரசதுறைப் பங்களிப்பு 12 சதவீதமாகவும் தனியார்துறைப் பங்களிப்பு 88 சதவீதமாகவும் இருந்ததுடன் இதில் முதலீட்டுச்சபை 65 சதவீதத்திற்கும் முதலீட்டுச்சபையல்லா முயற்சிகள் 23 சதவீதத்திற்கும் வகைகூறின. 2000ஆம் ஆண்டில் ஒன்பது கைத்தொழில் வகைகளில் புடவைகள் ஆடைகளும் தோல் உற்பத்திகளும், இரசாயனம் பெற்றோலியம், இறப்பர் மற்றும் பிளாத்திக்கு உற்பத்திகள், உணவு குடிபானம் மற்றும் புகையிலை உற்பத்திகள், உருவமைக்கப்பட்ட உலோக உற்பத்திகள் தாள் மற்றும் தாள் உற்பத்திகள் ஆகிய ஐந்து வகைகளிலிருந்தே 2000ஆம் ஆண்டிற்கான கைத்தொழில் வெளியீட்டில் ஏற்பட்ட வளர்ச்சிக்குத் தூண்டுதல் கிடைத்தது. 2000ஆம் ஆண்டில்

கைத்தொழில் துறையில் ஏற்பட்ட வளர்ச்சியில் 94 சதவீதத்திற்கு இவ்வளவுகள் வகைகூறின.

## தனியார் துறைக் கைத்தொழில்கள்

2000ஆம் ஆண்டில் தனியார் துறைக் கைத்தொழில்களின் வெளியீடு 1999இன் 5.3 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 10.5 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தது. 2000ஆம் ஆண்டின் கைத்தொழில் உற்பத்தியில் தனியார்துறைக் கைத்தொழில்கள் 94 சதவீதத்திற்கு வகைகூறின. முதலீட்டுச் சபைக் கைத்தொழில்களின் வெளியீட்டு வளர்ச்சி முன்னைய ஆண்டின் 5.7 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2000ஆம் ஆண்டில் 14 சதவீதமாக மதிப்பிடப்பட்டது. 1999இன் 5.0 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் முதலீட்டுச் சபையல்லாத் துறையின் வெளியீடு 6.2 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தது. இலங்கை மத்திய வங்கியின் கைத்தொழில் உற்பத்தி அளவீடு - 2000 முதலீட்டுச் சபையல்லாத் துறையின் உற்பத்தி இயலளவு 4.6 சதவீதத்தினால் விரிவடைந்தமையை எடுத்துக் காட்டியது. 2000ஆம் ஆண்டில் புடவைகள் ஆடைகள், விலங்குத்தீன், உணவு பதனிடல், இறப்பரை அடிப்படையாகக் கொண்ட உற்பத்திகள், மருந்துப் பொருட்கள் மற்றும் மருந்துகள், இரசாயனங்கள் மற்றும் பிளாத்திக்கு கைத்தொழில் என்பனவற்றின் உற்பத்தி இயலளவு விரிவடைந்தது. 2000ஆம் ஆண்டில் இயலளவுப் பயன்பாட்டு வீதம் முன்னைய ஆண்டின் 83 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 85 சதவீதத்திற்கு அதிகரித்தது. புடவை அணியும் ஆடைகள் மற்றும் தோல் உற்பத்திகள், இரசாயனம் இறப்பர் மற்றும் பிளாத்திக்கு உற்பத்திகள், உணவு குடிபானம் மற்றும் புகையிலை, மற்றும் உருவமைக்கப்பட்ட உலோக உற்பத்திகள் ஆகியவற்றைக் கொண்ட கைத்தொழில் வகைகளின் இயலளவுப் பயன்பாடு அதிகரித்தது. முதலீட்டுச்சபை மற்றும் முதலீட்டுச் சபையல்லா கைத்தொழில் துறைகளின் தொழில்நிலை முறையே 12.5 சதவீதத்தினாலும் 2.9 சதவீதத்தினாலும் அதிகரித்தன.

**அட்டவணை 4.2**

**தனியார்துறைக் கைத்தொழில் உற்பத்திச் சுட்டெண்**

1990=100

| வகை | ரூபா மில்லியன் | | | | | சதவீத மாற்றம் | |
|---|---|---|---|---|---|---|---|
| | 1996 | 1997 | 1998 | 1999 | 2000(அ) | 1999 | 2000(அ) |
| 1. உணவு, குடிபானங்கள், புகையிலை | 166 | 171 | 188 | 193 | 205 | 2.4 | 6.1 |
| உணவு, ஏனையவை | 166 | 176 | 196 | 207 | 218 | 5.8 | 5.1 |
| வெறியக் குடிவகை | 183 | 177 | 207 | 199 | 207 | -3.8 | 2.1 |
| குடிபானம் | 180 | 207 | 226 | 221 | 250 | -2.4 | 12.1 |
| புகையிலை | 135 | 121 | 121 | 118 | 115 | -2.5 | -2.0 |
| 2. புடவைகள், அணியும் ஆடைகள், தோல் உற்பத்திகள் | 217 | 258 | 269 | 289 | 334 | 7.3 | 15.9 |
| அணியும் ஆடைகள் | 235 | 284 | 297 | 322 | 376 | 8.4 | 16.6 |
| புடவைகள் | 174 | 191 | 199 | 198 | 226 | -0.4 | 13.1 |
| தோல் | 172 | 193 | 196 | 203 | 221 | 3.5 | 7.1 |
| 3. மர, மர உற்பத்திகள் | 165 | 165 | 163 | 168 | 178 | 3.3 | 5.8 |
| 4. தாளும் தாள் உற்பத்திகளும் | 279 | 287 | 289 | 286 | 314 | 1.0 | 7.7 |
| 5. இரசாயனம், பெற்றோலியம், இறப்பர், பிளாத்திக்கு உற்பத்திகள் | 224 | 257 | 286 | 299 | 326 | 4.6 | 9.1 |
| இரசாயனம், தீந்தை, வளமாக்கி | 183 | 212 | 240 | 258 | 292 | 7.5 | 13.1 |
| இறப்பர் | 213 | 253 | 274 | 279 | 313 | 1.8 | 12.1 |
| பிளாத்திக்கு மற்றும் பிவிசி | 182 | 210 | 227 | 252 | 270 | 10.8 | 6.5 |
| மருந்தாக்கல் பொருட்கள், சுத்தமாக்கிகள், ஏனையவை | 235 | 265 | 297 | 312 | 330 | 4.9 | 6.0 |
| 6. உலோகமல்லாக் கனிப்பொருள் உற்பத்திகள் | 243 | 254 | 267 | 288 | 294 | 7.7 | 2.2 |
| வைரம் பதனிடல் | 270 | 260 | 237 | 274 | 281 | 15.8 | 2.5 |
| மட்பாண்ட உற்பத்திகள் | 181 | 189 | 195 | 199 | 202 | 1.9 | 1.2 |
| சீமெந்து | 212 | 232 | 276 | 285 | 286 | 3.4 | 0.8 |
| கட்டடப் பொருட்களும் ஏனையவையும் | 204 | 221 | 241 | 257 | 276 | 6.5 | 4.2 |
| 7. அடிப்படை உலோக உற்பத்திகள் | 351 | 359 | 399 | 412 | 429 | 3.3 | 5.6 |
| 8. உருவமைக்கப்பட்ட உலோக உற்பத்திகள் | 150 | 178 | 197 | 208 | 217 | 5.4 | 4.5 |
| 9. வேறு எங்கும் குறிப்பிடப்படாத உற்பத்திகள் | 221 | 250 | 262 | 280 | 290 | 6.9 | 4.2 |
| அனைத்து வகைகளும் | 205 | 230 | 246 | 259 | 286 | 5.3 | 10.5 |

(அ) தற்காலிகமானவை.

மூலங்கள்: இலங்கை மத்திய வங்கி.
இலங்கை முதலீட்டுச் சபை.

சிறப்புக்குறிப்பு 5

## கைத்தொழில் மீளமைப்பும் இயலச்செய்யும் வசதிப்படுத்தலும்

### அறிமுகம்

இயக்கவிசை கொண்ட சந்தைப் பொருளாதாரமொன்றில் வாணிபம் முறிவடைதல் என்பது பொதுவான தோற்றப்பாடு ஒன்றாகும். வெளிநாட்டு மற்றும் உள்நாட்டுக் காரணிகளால் நிறுவனங்கள் முறிவடைகின்றன. மிக முக்கிய வெளிநாட்டுக் காரணி தொழில்நுட்ப கண்டு பிடிப்புக்கள் ஆவதோடு சம்பெடர் (1934) மற்றும் ஹோவிட் (1992 ஆகியோரினால் விவரிக்கப்பட்டவாறு அது "ஆக்கபூர்வ அழிவை" விளைவிக்கின்றது. புதிய பண்டங்கள், பணிகள் மற்றும் நுட்பங்கள்[1] என்பவற்றின் சார்பாக பழைய பொருட்களையும் பணிகளையும் தொழில் நுட்பங்களையும் கைவிட்டு விடுவதனால் பழமையான நிறுவனங்கள் புதிய நிறுவனங்களால் மாற்றீடு செய்யப்படுகின்றன. உதாரணமாக தொழில்நுட்ப கண்டுபிடிப்புக்களின் வரலாற்றில் தொழில்நுட்பம் குறைந்த கைத்தொழில் தொழில்நுட்பம் மிக்க கைத்தொழிலினால் மாற்றீடு செய்யப்பட்டது. ஏனைய வெளிநாட்டுக் காரணிகளாவன அதிகரித்த போட்டி, உள்ளீடுகளின் சார்பு ரீதியான செலவு தொழிலாளர் சந்தையில் நெகிழ்ச்சி மற்றும் அரசாங்க கொள்கை மாற்றங்கள் போன்ற சந்தை நிகழ்வுகளாகும். உள்நாட்டுக் காரணிகளாக முகாமைத்துவ தேர்ச்சி இன்மை மற்றும் தொழிலாளர் பிணக்குகள் என்பன காணப்படுகின்றன. வாணிப முறிவுகள் நிறுவனத்தின் கட்டுப்பாட்டுக்கு அப்பாற்பட்டதும் நியாயமான காலப்பகுதியொன்றினுள் சரிசெய்ய முடியாததுமாகக் காணப்படின் சட்டமுறைமையானது அத்தகைய தொழிற் முயற்சிகளுள் முடக்கி வைக்கப்பட்டுள்ள மூலதனத்தினை உற்பத்தியாக்க நடவடிக்கைகளுக்கு மாற்றுவதற்கு இயலச் செய்தல் வேண்டும். எனினும், முறிவுக்கான காரணங்கள் தற்காலிகமானவையாகவும் வெளியிலுள்ள நிறுவனங்களின் உதவியுடன் சரிசெய்யக்கூடியனதாகவும் காணப்படுமாயின் இந்த நிறுவனங்களுக்கு தம்மை மீள ஒழுங்குபடுத்திக் கொள்ளுவதற்கான சந்தர்ப்பங்கள் வழங்கப்படல் வேண்டும்.

இந்த விடயங்களைக் கருத்திற் கொள்ளுவதற்காக நிதியியல் இடருக்குள்ளான நிறுவனங்களுக்கு விரைந்தும் இலகுவானதுமான சீராக்கங்களுக்கும் மீள ஒழுங்குபடுத்தல்களுக்கும் வசதி செய்து கொடுக்கும் வகையில் குறித்துரைக்கப்பட்ட சட்ட வரைச் சட்டங்களையும் சில நாடுகள் அறிமுகப்படுத்தியுள்ளன. முக்கிய உதாரணங்களாக ஐக்கிய அமெரிக்க நாடுகளின் கடன் தீர்ப்புத் தகைமையின்மைச் சட்டவிதி இந்தியாவின் 1985 ஆம் ஆண்டின் நலிவுற்ற கைத்தொழில் கம்பனிகள் (விசேட ஏற்பாடுகள்) சட்டம் என்பன விளங்குகின்றன. இந்த நடவடிக்கைகள் முறிவடைந்த செயற்றிட்டங்களில் முடக்கி வைக்கப்பட்டுள்ள மூலதனத்தினை ஆற்றல் மிக்க செயற்றிட்டங்களில் மீள முதலீடு செய்வதற்கு தொழில் முயற்சிகளுக்கு உதவுகின்றன.

### மீள ஒழுங்குபடுத்தி மீளமைப்பதற்காக இலங்கையில் காணப்படும் சட்டரீதியான தடைகள்

இலங்கையில் ஏற்கனவேயுள்ள சட்டவாக்கங்கள் வாணிபங்களின் சுமுகமான மீள ஒழுங்குபடுத்தல்களுக்கும் மீளமைப்பிற்கும் தடையாக உள்ளன. ஏற்கனவேயுள்ள தொழில் சட்டங்கள் மேலதிக வேலையாட்களின் குறைப்பினை அனுமதிக்காததோடு தொழில் முயற்சிகள் மீள நிறுவப்படுவதையும் ஊக்கமிழக்கச் செய்கின்றன. உதாரணமாக 1971இன் 45ஆம் இலக்கச் தொழிலாளர்களின் வேலையை முடிவுக்குக் கொண்டுவரல் சட்டமானது செயல்திறன் இன்மை மற்றும் தேர்ச்சிகள் இன்மை[2] போன்ற காரணங்களுக்காக கூட 15 இற்கு மேற்பட்ட ஊழியர்களைக் கொண்ட நிறுவனங்களில் வேலையை முடிவுக்குக் கொண்டுவருவதற்கு அனுமதிப்பதில்லை. வங்கிகளினால் கடன்களை அறவிடுவதற்கான(விசேட ஏற்பாடுகள்) சட்டம், இலங்கையில் வங்கிகளை நிறுவுதல் அல்லது ஒழுங்கிணைத்தல் தொடர்பான நியதிச் சட்டங்களின் கடன் அறவிடலுக்கான ஏற்பாடுகள் ஆகியன நலிவுற்ற கைத்தொழில்களின்[3] மீள் ஒழுங்குபடுத்தல்களுக்கான வசதிகளை வழங்குவது போதுமான அளவு தெளிவான ஏற்பாடுகளைக் கொண்டிருக்கவில்லை. இச் சட்டத்தின்படி கடன்வழங்கும் வங்கிகளின் பணிப்பாளர் சபைக்கு கடன், வட்டிக் கொடுப்பனவுகள் மற்றும் ஏனைய

1. சும்பீற்றர், யோசேப் ஏ (1934) பொருளாதார அபிவிருததிக் கோட்பாடு, கேம்பிரிஜ், எம்.ஏ. ஹவார்ட் யூனியவர்சிற்றி பிறெஸ் அசியொன் பிலிப்பே மற்றும் பீற்றர் ஹெவிற் (1992) அழிவையேற்படுத்துவதினூடான வளர்ச்சியின் மாதிரி எக்கனோ மெற்றிகா 60.2 மாச்சு, பக்கம் 323-351

2. குறைப்பொன்றுக்கான நிலைமையில் இச்சட்டத்தின் ஏற்பாடுகள் முடிவுறுத்தலுக்காக தொழில் தருநரொருவர் ஊழியரின் அல்லது தொழில் ஆணையாளரின் இசைவினைப் பெற்றுக் கொள்ள வேண்டிய தேவையை ஏற்படுத்துவதுடன் அத்தகைய முடிவுறுத்தல் நடைமுறைகள் மேற்கொள்ளப்படுவதற்கு குறிப்பிடத்தக்க காலமும் தேவைப்படுகிறது.

3. பாராளுமன்ற நியதிச் சட்டத்தின்கீழ் நிறுவப்பட்ட வங்கிகளான, அரசாட்டு முதலீட்டு வங்கி, தேசிய சேமிப்பு வங்கி, இலங்கை வங்கி, மக்கள் வங்கி, தேசிய அபிவிருத்தி வங்கி மற்றும் அபிவிருத்திக் கூட்டுத்தாபன வங்கி என்பவாகும்.

## சிறப்புக்குறிப்பு (தொடர்ச்சி)

செலவுகளை மீட்டுக்கொள்ளுவதற்காக பிணையாக ஈடு வைக்கப்பட்ட சொத்தினை பொது ஏலத்தில் விற்பனை செய்ய இயலும். "பராடே நிறைவேற்று" அதிகாரமானது பிணையின் மூலம் வழங்கப்பட்ட கடனை மீட்பதற்காக ஈடுவைக்கப்பட்ட சொத்தினை நீதிமன்ற உத்தரவு இன்றியே பொது ஏலத்தில் விற்பனை செய்வதற்கு வங்கிகளை அனுமதிக்கின்றது.

### மீளமைப்பு மற்றும் மீள் ஒழுங்குபடுத்தல் தொடர்பாக பன்னாட்டு நடவடிக்கைகள் ஐக்கிய அமெரிக்க நடவடிக்கைகள்

ஐக்கிய அமெரிக்க நாடுகளின் கடன்தீர்ப்பனவுத் தகைமையின்மை சட்டத்தொகுதி ஒடுக்கிவிடல் (அத்தியாயம் 7), மீள ஒழுங்குபடுத்தல் (அத்தியாயம் 11) [4] ஆகிய இரண்டு வகையான நிவாரணங்களை வழங்குகின்றது. ஐக்கி அமெரிக்க நாடுகளில் கடன் தீர்ப்பனவுத் தகைமை இன்மை தொடர்பான பெரும்பாலான வழக்குகள் கடன் தீர்ப்பனவுத் தகைமை இன்மை சட்டத்தொகுதியின் அத்தியாயம் 7 இனால் ஆளுமைப்படுத்தப்படுகின்றன. அத்தியாயம் 7 ஆனது ஐக்கிய அமெரிகக நம்பிக்கைப் பொறுப்பாளருக்கு கடன்பாட்டாளரின் விலக்களிக்கப்படாத சொத்துக்களின் (கடன்பாட்டாளர் ஒருவர் தடுத்து வைத்துக்கொள்ள அனுமதிக்கப்படாத சொத்துக்கள்) விற்பனை செய்வதற்கும் அவற்றினை காசாக மாற்றுவதற்கும் அனுமதி வழங்குகின்றது. அதன் பின்னர் நம்பிக்கைப் பொறுப்பாளர் கடன் தீர்ப்பனவுத் தகைமை இன்மை சட்டத்தொகுதியில் விவரிக்கப்பட்டவாறான முன்னுரிமையின்படி பெறப்பட்ட நிதியங்களை கடன் வழங்கியோருக் கிடையில் பகிர்ந்தளிப்பர். கடன் தீர்ப்பனவுத் தகைமையை இழந்த கடன்பாட்டாளரிடமிருந்து தமக்குச் சேரவேண்டிய தொகையில் பாகமொன்றினையே கடன் வழங்கியோர் பெறுவர். சில சமயங்களில் எத்தகைய தொகையினையும் அவர்கள் பெறுவதில்லை.

மீள் ஒழுங்குபடுத்தும் திட்டமொன்றின் கீழ் தனது வாணிபத் தொழிற்பாடுகளைத் தொடருவதற்கு ஐக்கிய அமெரிக்க நாடுகளின் கடன்தீர்ப்பனவுத் தகைமை இன்மைச் சட்டத்தொகுதியின் அத்தியாயம் 11 கடன்பாட்டாளரை அனுமதிக்கின்றது. எனவே அது நிறுவனம் ஒன்றின் நிதியங்களை மீளமைப்பதற்கும் அதன் மூலம் தொழிற்பாடுகளைத் தொடர்ந்து மேற்கொள்வதற்கும் கடனை மீளச்செலுத்தவும் அதனது பங்குடமையாளர்களுக்கு இலாபமொன்றை உருவாக்கவும் நிறுவனமொன்றுக்கு சந்தர்ப்பமொன்றினை வழங்குகின்றது. ஒடுக்கிவிடும் திட்டெமான்றிற்கும் அது அனுமதியளிப்பதோடு பெரும்பாலான சந்தர்ப்பங்களில் அத்தியாயம் 7 இன் கீழான ஒடுக்கிவிடலை விட பொருளாதார ரீதியில் பெருமளவு அனுகூலமான நிலைமைகளின் கீழ் வாணிபமொன்றினை ஒடுக்கிவிடுவதற்கும் அது அனுமதி வழங்குகின்றது. சொத்துக்களின் ஒடுக்கிவிடலை ஒழுங்குபடுத்துவதில் கடன் வழங்கியோர் சுறுசுறுப்பான பங்கினை வகிப்பதற்கும் அத்தியாயம் 7 இன் கீழ் பெறுகைகளைப் பகிர்ந்தளிப்பதற்கும் அது அனுமதியளிக்கன்றது. அத்தியாயம் 11 சிறிய வாணிபங்கள் தொடர்பான சிறப்பு ஏற்பாடுகளையும் கொண்டுள்ளது. சிறிய வாணிபங்கள் சம்பந்தப்பட்ட வழக்குகள் அத்தியாயம் 11 இன் கீழான வழமையான வழக்குகளை விட "விரைந்த கதியில்" விசாரிக்கப்படுவதோடு மாறுபட்ட முறையில் நடாத்தப்படுகின்றன.

அத்தியாயம் 11இன் கீழ் மீள் ஒழுங்குபடுத்தலுக்கான வெளிப்படுத்தம் கூற்று ஒன்றும் நீதிமன்றத்துக்கு சமர்ப்பிக்கப்படல் வேண்டும். வெளிப்படுத்தும் கூற்றானது சொத்துக்கள், பொறுப்புக்கள் மற்றும் நிறுவனத்தின் அலுவல்கள் என்பன தொடர்பாக கடன்வழங்கியோருக்கு திட்டம் சம்பந்தமான தீர்மானத்தை மேற்கொள்ள இயலச் செய்யும் ஆவணமொன்றாகும். வெளிப்படுத்தும் கூற்றுக்கு ஒப்புதல் வழங்கப்பட்ட பின்னர் தனது திட்டத்தினை ஏற்றுக்கொள்ளும் நிறுவனமும் அதனை நிராகரிக்கும் படி கடன் வழங்கியோரும் கோரி நிற்கலாம்.

ஏதேனும் தரப்பினர் தமக்கும் நலவுரித்துக்கள் உள்ளன எனக் கருதும் பட்சத்தில் திட்டமொன்றின் உறுதிப்படுத்தலுக்கு மறுப்புத் தெரிவிக்கலாம். அறிவித்தல் வழங்கப்பட்ட பின்னர் சட்டத்தின் உறுதிப்படுத்தல் சம்பந்தமாக விசாரணை ஒன்றை மேற்கொள்ளுமாறு கடன் தீர்ப்பனவுத் தகைமையின்மை சட்டத்தொகுதி நீதிமன்றத்தினைத் தேவைப் படுத்தியுள்ளது. உறுதிப்படுத்தலுக்காக மறுப்புத் தெரிவிக்கப்படாவிட்டால் திட்டமானது நன்நம்பிக்கையிலும் சட்டத்திற்கு ஏற்பவும் முன்மொழியப்பட்டுள்ளது என நீதிமன்றம் தீர்மானிக்கலாம். திட்டம் உறுதிப்படுத்திப்படுத்தப்பட்ட பின்னர் மீள் ஒழுங்குபடுத்தல் திட்டத்தின் ஏற்பாடுகளினால் கடன்பாட்டாளர் பிணிக்கப்படுவர். உறுதிப்படுத்தப்பட்ட திட்டமானது கடன் தீர்ப்பனவுக் தகைமை இழப்புக்கு முன்னான ஒப்பந்தங்களை மாற்றீடு செய்து அல்லது ஒதுக்கி விட்டு புதிய ஒப்பந்த உரிமைகளை உருவாக்குகின்றது.

நிறுவனத்தின் வாணிப தொழிற்பாட்டினைக் கண்காணித்தல் தொழிற்பாட்டு அறிக்கைகள் மற்றும்

4. www4.law.cornell.edu/uscode/11

## சிறப்புக்குறிப்பு (தொடர்ச்சி)

கட்டணம் என்பனவற்றினைச் சமர்ப்பித்தல் இழப்பீடு மற்றும் செலவீடு என்பவற்றுக்கான விண்ணப்பங்கள் திட்டங்கள் மற்றும் வெளிப்படுத்தும் கூற்று, கடன்வழங்கியோரின் குழுக்கள் என்பனவற்றுக்கு ஐக்கிய அமெரிக்க நாடுகளின் நம்பிக்கைப் பொறுப்பாளர் பொறுப்புடையவராவர். அதனது மாதாந்த வருமானம் மற்றும் தொழிற்பாட்டுச் செலவுகள் புதிய வங்கிக் கணக்குகளை நிறுவுவதில், தற்போதைய ஊழியர்களின் தடுத்து வைக்கும் வரி மற்றும் ஏனைய வரிகளின் கொடுப்பனவுகள் போன்ற விடயங்கள் தொடர்பான சில தேவைப்பாடுகளை ஐக்கிய நாடுகளின் நம்பிக்கைப் பொறுப்பாளர் நிறுவனத்தின் மீது விதிக்கின்றார். திட்டமொன்று உறுதிப்படுத்தப்படும் வரை அல்லது வழக்கொன்ற மாற்றல் செய்யப்படும் வரை அல்லது தள்ளுபடி செய்யப்படும் வரை சட்டத்தின் படி நிறுவனமானமொன்று ஒவ்வொரு காலாண்டுக்கும் ஐக்கிய நாடுகள் நம்பிக்கைப் பொறுப்பாளருக்கு கட்டணமொன்றைச் செலுத்த வேண்டும் தற்பொழுது ஐ.அ.டொலர் 250 இற்கும் ஐ.அ.டொலர் 500இற்கும் இடையிலான வீச்சில் காணப்படும் இந்தக் கட்டணத்தொகை ஒவ்வொரு காலாண்டிலும் பகிர்ந்தளிக்கப்படும் தொகையில் தங்கியுள்ளது. ஐக்கிய நாடுகளின் நம்பிக்கைப் பொறுப்பாளரின் அறிக்கையிடல் தேவைப்பாடுகள் அல்லது கடன் தீர்ப்பனவு தகைமையின்மை நீதிமன்றத்தின் கட்டணங்கள் ஆகியவற்றுக்கு நிறுவனமொன்று இசைந்து ஒழுகாவிட்டால் அல்லது வழக்கினை உறுதிப்படுத்துவதற்கும் பொருத்தமான நடவடிக்கைகளை மேற்கொள்ளத் தவறினால் கடன்பட்டவரின் அத்தியாயம் 11 இனாலான வழக்கு சட்டத்தொகுதியின் இன்னொமொரு அத்தியாயத்தின் கீழான வழக்காக மாற்றப்படலாம் அல்லது வழக்கு தள்ளுபடி செய்யப்படலாம்.

### இந்திய நடவடிக்கைகள்

நலிவுற்ற அல்லது நலிவடையக்கூடிய வாய்ப்புக்களைக் கொண்டுள்ள கைத்தொழில் கம்பனிகளை உரிய நேரத்தில் இனங்கண்டு நிலைத்து நிற்கக்கூடிய வாய்ப்புக்களைக் கொண்ட அலகுகளின் மீள் வலுப்படுத்தலையும் நிலைத்து நிற்கக் கூடிய வாய்ப்புக்கள் அற்ற அலகுகளின் மூடிவிடலையும் உறுதி செய்து கொள்ளும் குறிக்கோள்களுடன் 1985இன் நலிவுற்ற கைத்தொழில் கம்பனிகளின் (சிறப்பு ஏற்பாடுகள்) சட்டத்தின் வடிவில் இந்திய நடவடிக்கைகள் தொடக்கி வைக்கப்பட்டன. இந்தச் சட்டத்தின் கீழ் நலிவுற்ற கைத்தொழில் கம்பனிகள்[5] தொடர்பான தடுக்கும்முறை, நிவாரணம் வழங்குதல் மற்றும் ஏனைய வழிமுறைகளின் வலுப்படுத்தலை தீர்மானிப்பதற்காக வேண்டி 1987 சனவரியில் வல்லுநர்கள் குழுவொன்றை உள்ளடக்கிய கைத்தொழில் மற்றும் நிதியியல் மீள் நிருமான சபை நிறுவப்பட்டது. சிறிய அளவிலான கைத்தொழில்கள் மற்றும் துணைக் கைத்தொழில்கள் நீங்கலான அரசதுறை மற்றும் தனியார் துறையின் கைத்தொழில் கம்பனிகள் தொடர்பாக கைத்தொழில் மற்றும் நிதியியல் மீள் நிருமாணசபையின் அதிகாரங்கள் பிரயோகிக்கப்படும்.

கம்பனியொன்றின் ஒன்று சேர்ந்த இழப்புக்கள் அதனது தேறிய பெறுமதிக்குச் சமமாக (செலுத்தப்பட்ட மூலதனம் மற்றும் சுயாதீன ஒதுக்குகள்) அல்லது அதனைவிட கூடுதலாகக் காணப்படுமாயின் கைத்தொழில் கம்பனியொன்று "நலிவுற்ற" கம்பனியொன்றாகக் கருதப்படும். கைத்தொழில் மற்றும் நிதியியல் மீளமைப்புச் சபையின் வசதிகளைப் பெற்றுக்கொள்வதற்கு தகுதி பெறுவதற்கு கம்பனிகள் சட்டத்தினால் ஒடுக்கிணைக்கப்பட்ட பின்னர் கம்பனி குறைந்தபட்சம் ஐந்து ஆண்டுகளாவது தொழிற்பாட்டில் இருக்கவேண்டிய நலிவுற்றமை கோரப்பட்ட நிதியாண்டின் இறுதிக்கு முன்னைய 12 மாதங்களில் ஆகக்குறைந்த 50 தொழிலாளர்களையும் தொழிற்சாலைக்கான உரிமப்பத்திரத்தையும் கொண்டிருத்தல் வேண்டும்.

கைத்தொழில் கம்பனியொன்று நலிவுற்ற கைத்தொழில் கம்பனியொன்றாக மாற்றமடையும் போது கம்பனியின் பணிப்பாளர் சபை கம்பனி தொடர்பாக மேற்கொள்ள வேண்டிய வழிமுறைகளைத் தீர்மானிப்பதற்காக கைத்தொழில் மற்றும் நிதியியல் மீள் நிருமாணசபைக்கு தெரியப்படுத்தக்கூடிய ஏனைய தரப்பினர்களாக மத்திய அரசாங்கம், இந்திய ரிசர்வ் வங்கி, மாநில அரசாங்கம் அரசாங்க நிதியியல் நிறுவனமொன்று மாநில மட்ட நிறுவனமொன்று மற்றும் செடூல் வங்கி என்பன விளங்குகின்றன.

அத்தகைய தகவல்களைப் பெற்றுக்கொண்ட பின் கைத்தொழில் கம்பனியொன்று நலிவுற்ற கைத்தொழில் கம்பனியொன்றாக மாறியுள்ளதா என்பதை தீர்மானிப்பதற்கு கைத்தொழில் மற்றும் நிதியியல் மீள் நிருமாண சபை விசாரணையொன்றை மேற்கொள்ளலாம். கம்பனியின் நிதியியல் மற்றும் ஏனைய நலவுரித்துக்களைப் பாதுகாப்பதற்காக கைத்தொழில் மற்றும் நிதியியல் மீளமைப்புச் சபையினால் கம்பனியின் பணிப்பாளர் சபைக்கு ஒரு ஆளை அல்லது அதற்கு மேற்பட்டோரை நியமிக்கலாம்.

விசாரணைகளை மேற்கொண்ட பின்னர் கம்பனி நலிவடைந்துள்ளது என கம்பனி மற்றம் நிதியியல் மீளமைப்புச் சபை திருப்திப்பட்டால் நியாயமான காலப்பகுதியொன்றில் அதனது ஒன்று சேர்ந்த இழப்புக்களுக்கு மேலாக தேறிய பெறுமதியினை

4. www.bifr.nic.in/

## சிறப்புக்குறிப்பு (தொடர்ச்சி)

அதிகரிப்பதற்கு கம்பனிக்கு இயலும் என தீர்மானித்து அல்லது தேறிய பெறுமதியை அதிகரிப்பதற்கு கம்பனிக்கு போதுமான காலமொன்றினை அனுமதிக்கின்றது. அதனது ஒன்று சேர்ந்த இழப்புக்களுக்கு மேலாக தேறிய பெறுமதியினை அதிகரிப்பது சாத்தியமாகாது என கம்பனிகள் மற்றும் நிதியியல் மீள் நிருமாணசபை தீர்மானித்தால் நலிவுற்ற கைத்தொழில் கம்பனியின் நிதியியல் மீளமைப்பு, நலிவுற்ற கைத்தொழில் கம்பனியின் முகாமைத்துவத்தில் மாற்றம், நலிவுற்ற கைத்தொழில் கம்பனியை வேறு ஏதேனும் கம்பனியுடன் ஒருங்கிணைத்தல், நலிவுற்ற கைத்தொழில் கம்பனியின் பாகமொன்றை அல்லது அதனை முழுமையாக விற்பனை செய்தல் அல்லது குத்தகைக்கு விடல், முகாமைத்துவ ஆளணி மேற்பார்வை அலுவலர்கள் மற்றும் தொழிலாளர்களை சட்டப்படி ஒழுங்குபடுத்தல் மற்றும் வேறு ஏதேனும் பொருத்தமான தடுப்பு, செம்மைப்படுத்தல் மற்றும் நிவாரண வழிமுறைகள் போன்ற வழிமுறைகளை மேற்கொள்ளும்.

நலிவுற்ற கைத்தொழில் கம்பனி தொடர்பான திட்டம் தடுப்பு, செம்மைப்படுத்தல் மற்றும் நிவாரண வழிமுறைகளுடன் சம்பந்தப்பட்டிருந்தால் கடன்கள் முற்பணங்கள் அல்லது மத்திய அரசாங்கம் மாநில அரசாங்கம், ஏதேனும் வங்கியொன்று, அரசாங்க நிதியியல் நிறுவனமொன்று அல்லது மாநில மட்ட நிறுவனம் அல்லது ஏதேனும் நிறுவனத்தினால் வழங்கப்பட்ட உத்தரவாதங்கள் என்பனவற்றின் வடிவில் இத்திட்டம் நிதியியல் வசதிகளை வழங்கலாம்.

### இலங்கையில் கைத்தொழில் மீள் ஒழுங்குபடுத்தலுக்கான வழிகாட்டல்கள்

தொழில் முயற்சியின் பெறுமதியை உச்சப்படுத்தக்கூடிய வகையில் அல்லது பொருத்தமானவிடத்து அவற்றினது சொத்துக்களின் முறையான ஒடுக்கலுக்கு இடமளிக்கக்கூடிய வகையில் தொழில் முயற்சிகள் தமது வாணிபங்களை மீளமைக்கக்கூடிய வரைச்சட்டமொன்றை வழங்குவதன் மூலம் மூலவளங்களின் செயல்திறன் மிக்க ஒதுக்கீட்டை ஏற்படுத்துவதற்காக கடன் தீர்ப்பனவு தகைமை இன்மைக்கான சட்டத்தொகுப்பு சந்தையின் தொழிற்பாட்டை வலுப்படுத்த வேண்டும். முறிவடையும் தொழில் முயற்சிகளின் மீளமைப்பு/மீள் ஒழுங்குபடுத்தல் என்பனவற்றுக்குச் சாதகமாக சட்ட வரைச்சட்டம் எத்தகைய எடுகோள்களையோ, வெளிப்படுத்துகையையோ உருவாக்கக் கூடாது. தொழில்முயற்சிகள் நீண்ட காலத்தில் நிலைத்திருப்பதை சட்டவரைச்சட்டம் உறுதி செய்தல் வேண்டும்.

நிதியியல் நெருக்கடிகளைக் கொண்ட நலிவுற்ற கைத்தொழில்களின்[6] மீள் ஒழுங்குபடுத்தலுக்கு வசதியளிக்கும் எத்தகைய பொறிமுறையும் தற்போது இலங்கையில் இல்லை. அதற்கும் மேலதிகமாக தற்போதைய தொழிற்சட்டங்களும் பராடே நிறைவேற்று அதிகாரங்களும் நிதியியல் நெருக்கடிக்கு உட்பட்ட தொழில்முயற்சிகளை மீள் ஒழுங்குபடுத்தி வாணிபத்தைத் தொடருவதை அனுமதிப்பதில்லை. ஆனால் அவற்றின் மூடிவிடலுக்கே இட்டுச்செல்கின்றன. வெளியீடு மற்றும் தொழில் என்பனவற்றின் இழப்பின் ஊடாக தொழில் முயற்சிகளை மூடிவிடுவதானது பொருளாதாரத்துக்கு பெரும் இழப்பினை ஏற்படுத்துவதனால் கடன்வழங்கியோருக்கு செலுத்தத் தவறுகின்றமையும் தொழில் முயற்சியாளர்களுக்கு தாழ்ந்த வருமானத்தினதும் காரணமாக நலிவடையும் தொழில் முயற்சிகளுக்கு அவற்றினது பிரச்சனைகளிலிருந்து விடுபடுவதற்கான உதவிகளை வழங்குவது அத்தியவசியமாகும். எனினும் இந்த தொழில் முயற்சிகள் வர்த்தகரீதியில் செயற்படக்கூடியதாகவும் பிரச்சனைகள் தற்காலிகமானதாகவும் இருத்தல் வேண்டும்.

பொருளாதார ரீதியில் நிலைத்திருக்கக் கூடியதாக மாற்றத்தக்க சிறிய, நடுத்தர மற்றும் பாரிய அளவிலான தொழில முயற்சிகளின் கிரமமான மீள் ஒழுங்குபடுத்தலுக்காக சட்டங்களை இயற்றுவதற்கு அரசாங்கம் கருத்திற் கொள்ள வேண்டும். சட்டவாக்கமானது அத்தகைய கடன்களின் மீது வட்டியின்றி கடன் வழங்கியோருக்கு கடனைச் செலுத்துவதற்கான கால அவகாசத்தினை வழங்குதல் வேண்டும். அதேபோன்று செயல்திறன் இன்மைக்காக குறுகிய காலத்தில் வேலையை முடிவுக்குக் கொண்டு வருவதற்கும் மீள் ஒழுங்குபடுத்தலுக்காக நியாயமான இழப்பீட்டுடன் நிறுவனத்தின் அளவைக் குறைத்தல், விரைந்த மீளமைப்பு நடவடிக்கை முறைகள் மற்றும் நிலைத்து நிற்க முடியாத வாணிபங்களை கிரமமாக ஒடுக்கிவிடுவதற்கான ஏற்பாடுகள் என்பவற்றையும் சட்டவாக்கம் கொண்டிருக்க வேண்டும். போட்டியாளர்களையும் வரி செலுத்துவோரையும் உள்ளடக்கி அனைத்து தரப்பினருக்கும் நியாயாமான

6. எனினும், 1982இன் எண் 17 கொண்ட கம்பனிகள் சட்டமானது, இச் சட்டத்தின்கீழ் இலங்கையில் பதிவு செய்யப்பட்ட கம்பனிகளை, நீதிமன்றத்துக்கு விண்ணப்பமொன்றை மேற்கொள்வதன் மூலம் கடன்கொடுத்தோர் மற்றும் பங்குதாரர்களைக் கட்டுப்படுத்தக்கூடிய ஒழுங்குகளினூடாக, கம்பனியொன்றை மீளமைப்பதற்கான செய்முறையை ஆரம்பிப்பதற்கு அனுமதிக்கிறது. இச் சட்டம், கம்பனிகள் நீதிமன்றமொன்றின் கட்டளையின்படி அல்லது தாமாகவே கலைக்கப்படுவதையும் அல்லது நீதிமன்றத்தின் மேற்பார்வைக்குட்பட்டுக் கலைக்கப்படுவதையும் அனுமதிக்கிறது.

**சிறப்புக்குறிப்பு (தொடர்ச்சி)**

வகையில் தொழில் முயற்சியாளரின் உடனடித் தேவைகளுக்கு விரைந்து பதிலிறுத்தல், அதனது தொழிற்பாடுகளின் புறப்பாட்டுத்தன்மை, அதனைப் பயன்படுத்துவோர் அதனை எளிதாகப் பெற்றுக்கொள்ளல் மற்றும் உரிய நேரத்தில் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு தொழில் முயற்சியாளர்கள் அல்லது முகாமையாளர்களை ஊக்குவித்தல் என்பதையும் சட்டவாக்கம் உறுதி செய்ய வேண்டும். கடன்வழங்கியோருக்கான இலாபங்கள் உச்சப்படுத்தப்படுவதையும் நீண்டகாலத்தில் நிலைத்து நிற்கக்கூடிய வாணிபங்கள் ஒடுக்கப்படாமையையும் அது உறுதி செய்தல் வேண்டும்.

செயல்திறன் அற்ற முகாமைத்துவத்தின் காரணமாக நிதியியல் நலிவு ஏற்பட்டிருத்தால் அந்த தொழில் முயற்சியின் மீளமைத்தலை நிருவகிக்கும் மேலாண்மைக்கு அதன் முகாமைத்துவத்தினைக் கையேற்று அந்த தொழில் முயற்சி மீண்டும் ஆற்றல் பெறும்வரை சில காலத்துக்கு பொருத்தமானதும் தகைமை வாய்ந்ததுமான முகாமைத்துவம் ஒன்றை நியமிப்பதற்கும் சட்டவாக்கத்தின் ஏற்பாடுகள் அதிகாரமளித்தல் வேண்டும்.

தொழில் முயற்சிகளின் மீள் ஒழுங்குபடுத்தலை நிருவகிக்கவும் மேற்பார்வை செய்வதற்காகவும் தனியார்துறை அரசதுறை ஆகிய இரண்டினதும் நிபுணர்களை உள்ளடக்கிய பெருமளவு அதிகாரங்களைக் கொண்ட ஆயமொன்று நிறுவப்படல் வேண்டும். தொழிற்பாட்டுச் செலவுகளை உள்ளடக்குவதற்காக இந்த ஆயத்தினால் வழங்கப்படும் பணிகளுக்கு தொழில் முயற்சியாளரிகளிடமிருந்து நியாயமான கட்டணமொன்றை அறவிடலாம்.

முதலீட்டுச் சபையல்லாக் கைத்தொழில்களின் தொழிலாளர் உற்பத்தியாக்கம் இவ்வாண்டுக் காலத்தில் 3.6 சதவீதத்தினால் அதிகரித்தது.

## முக்கிய கைத்தொழில்துறைகளின் செயலாற்றம்

### புடவை அணியும் ஆடைகள் மற்றும் தோல் உற்பத்திகள்

தொழிற்சாலைக் கைத்தொழில்களில் பாரிய துணைத்துறையான புடவை, அணியும் ஆடைகள் மற்றும் தோல் உற்பத்திகள் வகை 1999இன் 7.3 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2000ஆம் ஆண்டில் 15.9 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தது. 2000ஆம் ஆண்டில் இத் துணைத்துறை தனியார்துறைக் கைத்தொழில்களின் வளர்ச்சியில் 66 சதவீதத்திற்கு பங்களித்தது. இவ்வகையில் 2000ஆம் ஆண்டில் புடவைத் துணைத்துறை 13.1 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்த வேளையில் தோல் உற்பத்திகள் 7.0 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தன.

ஆடைத் துறையின் ஆரோக்கியமான வளர்ச்சி, ஐக்கிய அமெரிக்காவில் சந்தை நிலைமைகள் வலுவடைந்தமையினாலும் ஐரோப்பிய ஒன்றியத்தில் உயர் சந்தை மற்றும் அனுமதிப் பங்கு அல்லா விடயங்கள் விரிவடைந்தமையினாலுமே ஏற்பட்டது. உரிய நேரத்தில் பொருட்கள் வழங்கப்பட்டமை, நவீன பாணியிலான பொருட்களின் உற்பத்தி, உற்பத்தித்தரத்துடன் ஒப்பிடுகையில் போட்டி விலைகளில் பொருட்களின் வழங்கல், மற்றும் புதிய சிறிய சந்தைகளில் நுழைந்து கொண்டமை என்பன ஐரோப்பிய ஒன்றிய சந்தை விரிவடைய உதவின. இதற்குப் பன்னாட்டுச் சந்தைகளில் இலங்கையின் ஆடைகளை மிகப் போட்டித்தன்மைக்குரியதாக்கிய பல கிழக்காசிய நாடுகளின் நாணயங்களில் ஏற்பட்ட பெறுமதி உயர்வும் உதவியாக இருந்தது. விரைவாக முன்னேற்றம் கண்டுவரும் தகவல் தொழில்நுட்பம் மற்றும் முக்கிய சந்தைகளிலுள்ள வர்த்தக பிரதிநிதிகளுடனான நெருங்கிய தொடர்பு என்பன சந்தைகளிலும் தொழில்நுட்பத்திலும் காணப்படும் பிந்திய அபிவிருத்திகள் மீதான தகவல்களைப் பெற்றுக்கொள்ள உதவியதன் மூலம் இம் மாற்றங்களுக்கேற்ப தயாரிப்பாளர்கள் தம்மை மாற்றிக் கொள்வதற்குப் போதுமான நேரத்தை வழங்கியது. ஏற்றுமதிக் கட்டளைகள் தாய்க் கம்பனிகள் அல்லது முக்கிய சந்தைகளிலுள்ள பங்காளர்களூடாகவும் உள்நாட்டுக் கொள்வனவு நிலையங்களூடாகவும் பெற்றுக் கொள்ளப்பட்டன. பன்னாட்டுச் சந்தைகளில் வர்த்தக அடையாளச் சந்தைப்படுத்தலின் பிரபல்யம் வளர்ந்து செல்லும் தன்மைபோன்று, பன்னாட்டுச் சந்தைகளில் பேர் பெற்ற வர்த்தக அடையாளச் சின்னங்களின் உடைமையாளர்களுக்கு அவர்களின் உற்பத்திகளை வழங்குவதற்கு இலங்கைத் தயாரிப்பாளர்களை ஊக்குவித்தது. இலங்கையிலிருந்து கூடியளவு கொள்வனவுகளைச் செய்யும் பொருட்டு முக்கிய தயாரிப்பாளர்களுடன் ஒப்பந்தங்களை நிறுவிக் கொள்வதற்காக 2000ஆம் ஆண்டில் ஐக்கிய அமெரிக்கா, வர்த்தக அடையாளச் சின்னங்களைக் கொண்ட 10 உயர் நிறுவனங்கள் இலங்கைக்கு வருகை தந்தன. உற்பத்தித் தரத்தினையும் கூட்டப்பட்ட பெறுமதியையும் மேம்படுத்தும் பொருட்டு முக்கிய ஆடைத் தயாரிப்பாளர்கள் தொழில்நுட்பத்தினை தரமுயர்த்துவதற்காக பாரிய அளவு நிகழ்ச்சித் திட்டமொன்றினைத் தொடங்கியுள்ளனர். இந் நிகழ்ச்சித் திட்டமானது வடிவமைத்தல் மற்றும் தரம் பிரித்தல்

சித்திரத் தையல் வேலைப்பாடு, எந்திரங்கள் மூலமாக துணிகளை சுருக்குதல், மடித்தல், திரை வர்ணமூட்டல் போன்றவற்றிற்கான தன்னியக்கமாக்கப்பட்ட முறைகளை உள்ளடக்கியிருந்தது. மையப்படுத்தப்பட்ட துணிவெட்டும் பொறிகள் வெட்டுகின்ற வினைத்திறனை மேம்படுத்தி மனித தவறுகளை நீக்கிவிடுகின்றன. எனினும், ஐரோப்பிய சந்தையில் கைகளினால் துணிகளைச் சுருக்கி செய்யப்படும் உற்பத்திகளுக்கு கேள்வி அதிகரித்து வருவதனைக் கருத்திற்கொண்டு தயாரிப்பாளர்கள் மரபுரீதியான முறைகளுக்கும் திருப்பியிருக்கிறார்கள். சில தயாரிப்பாளர்கள் துணை உற்பத்திகளையும் பணிகளையும் பெரும் எண்ணிக்கையில் உற்பத்தி செய்கிறார்கள். இவை செலவினைக் குறைப்பதுடன் ஏற்றுமதிக் கட்டளைகளை நேரத்திற்கு வழங்கவும் உதவுகின்றன. இவை நிரம்பல் பணிகளின் வலையமைப்புடன் சேர்ந்து செய்முறைக்கான நேரத்தைக் குறைப்பதற்கும் அவசரமான ஏற்றுமதிக் கட்டளைகளை நிறைவேற்றவும் அவர்களை இயலச் செய்தமையின் மூலம் வெளிநாடுகளிலுள்ள முக்கிய வழங்குனர்களினால் கட்டுப்படுத்தப்படும் நிரம்பல் சங்கிலி வெற்றிகரமாக ஒருங்கிணைக்கப்படுகிறது.

2000ஆம் ஆண்டில் ஐக்கிய அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் மற்றும் கனடா என்பனவற்றிலிருந்து கிடைக்கத்தக்கதாகவுள்ள அனுமதிப்பங்கு 435.6 மில்லியன் துண்டுகளுக்கு 12.2 சதவீதத்தினால் அதிகரித்தது. இவ்வதிகரிப்பு ஐக்கிய அமெரிக்கச் சந்தையில் 11.3 சதவீதமாகவும், ஐரோப்பிய ஒன்றிய நாடுகளில் 16.1 சதவீதமாகவும், கனடாவில் 19.6 சதவீதமாகவும் காணப்பட்டது. தற்பொழுது அச் சந்தைகளுக்கு இலங்கை அனுமதிப்பங்குக் கட்டுப்பாட்டின்கீழ் 50 வேறுபட்ட ஆடைகளையும் புடவைகளையும் ஏற்றுமதி செய்கின்றது. பின்னப்பட்ட ஆண் பெண் மேல் சட்டைகள் பின்னப்படாத ஆண் பெண் மேல் சட்டைகள், அணியும் பாவாடைகள், உள்ளாடைகள், சடைத்துணி மற்றும் மென் மயிர்த் துவாய்கள் சமையலறைத் துவாய்கள், மேலங்கிகள், குளிருக்கான அங்கிகள் போன்றவற்றிற்கு ஐக்கிய அமெரிக்க நாடுகளில் கிடைக்கத்தக்கதாகவிருந்த அனுமதிப் பங்கு 10 சதவீதத்திற்கும் கூடுதலாக அதிகரித்தது. எனினும் 2000ஆம் ஆண்டில் ஐக்கிய அமெரிக்கச் சந்தையில் தலைக்கவிகையுடனான ஆடைகள் மற்றும் தளர்ந்த ஆடைகள் பொப்ளின் துணி/ ஆடவர்களுக்கான கம்பளித்துணி, தலையணை உறைகள், நூற்கப்பட்ட- நெய்யப்பட்ட இரவு ஆடைகள், குளிராடைகள் மற்றும் அணியும் ஆடைகள் என்பன தொடர்பாக கிடைக்கத்தக்கதாகவுள்ள அனுமதிப்பங்கு வீழ்ச்சியடைந்தது. 2000ஆம் ஆண்டில் ஐரோப்பிய ஒன்றிய சந்தையில் நெய்யப்பட்ட மேலங்கிகள், எஸ்கிமோவர் அணியும் ஆடைகள், தலைக்கவிகையுடன் கூடிய துருவ ஆடைகள் மற்றும் அரைக்காற்சட்டைகள் என்பன தொடர்பாக கிடைக்கத்தக்கதாக இருந்த அனுமதிப்பங்கு 10 சதவீதத்திற்கும் கூடுதலாக அதிகரித்தது. தடித்த மேலங்கிகள், வெப்பக்காப்பு மேலங்கிகள், மழைத்தடுப்பு அங்கிகள், நீண்ட காற்சட்டைகள், நீண்ட தளர்ந்த மற்றும் குறுங் காற்சட்டைகள், ரிசேட்டுக்கள், விளையாட்டு ஆடைகள், உள்ளாடைகள், நித்திரை ஆடைகள், குளியலறை ஆடைகள், குளிராடைகள், நீச்சலுடைகள், குழந்தைகளுக்கான ஆடைகள் மற்றும் படுக்கை

**அட்டவணை 4.3**

**கைத்தொழில் உற்பத்திகளின் பெறுமதி (அ)**

| வகை | ரூபா மில்லியன் | | | | | சதவீத மாற்றம் | |
|---|---|---|---|---|---|---|---|
| | 1996 | 1997 | 1998 | 1999 | 2000(ஆ) | 1999 | 2000(ஆ) |
| 1. உணவு, குடிபானங்கள், புகையிலை | 68,209 | 75,713 | 86,994 | 94,687 | 105,671 | 8.8 | 11.6 |
| 2. புடவைகள், அணியும் ஆடைகள், தோல் உற்பத்திகள் | 127,539 | 156,500 | 175,443 | 188,844 | 215,686 | 7.6 | 20.6 |
| 3. மர, மர உற்பத்திகள் | 2,171 | 2,299 | 2,511 | 2,715 | 3,084 | 8.1 | 13.6 |
| 4. தாளும் தாள் உற்பத்திகளும் | 5,069 | 5,462 | 5,593 | 5,854 | 6,516 | 4.7 | 11.3 |
| 5. இரசாயனம், பெற்றோலியம், இறப்பர், பிளாத்திக்கு உற்பத்திகள் | 46,936 | 50,682 | 59,724 | 62,590 | 74,670 | 4.8 | 19.3 |
| 6. உலோகமல்லாக் கனிப்பொருள் உற்பத்திகள் | 18,997 | 21,403 | 23,830 | 26,830 | 28,198 | 12.6 | 5.1 |
| 7. அடிப்படை உலோக உற்பத்திகள் | 2,248 | 2,439 | 2,841 | 3,046 | 3,378 | 7.2 | 10.9 |
| 8. உருவமைக்கப்பட்ட உலோக உற்பத்திகள் பொறிகளும் போக்குவரத்துக் கருவிகளும் | 8,807 | 11,327 | 13,241 | 14,305 | 15,678 | 8.0 | 9.6 |
| 9. வேறு எங்கும் குறிப்பிடப்படாத தயாரிப்பு உற்பத்திகள் | 6,183 | 7,324 | 8,137 | 9,002 | 9,839 | 10.6 | 9.3 |
| மொத்தம் | 286,159 | 333,149 | 378,314 | 407,873 | 462,720 | 7.8 | 16.3 |

(அ) உற்பத்திகளின் பெறுமதி, உற்பத்திகளின் தொழிற்சாலைப் பெறுமதியின் அடிப்படையில் மதிப்பிடப்பட்டது.
(ஆ) தற்காலிகமானவை.

மூலங்கள்: இலங்கை மத்திய வங்கி.
இலங்கை முதலீட்டுச் சபை.

விரிப்புக்கள் போன்ற ஆடை வகைகளுக்கு கனடாவில் கிடைக்கத்தக்கதாகவிருந்த அனுமதிப்பங்கு 15 சதவீதத்திற்கும் மேலாக அதிகரித்தது. 2000 ஆம் ஆண்டில் கனடாச் சந்தையில் தடித்த மேலங்கிகள் மற்றும் நேர்த்தியான ஆடைகள் போன்ற விடயங்களுக்கு கிடைக்கத்தக்கதான அனுமதிப்பங்கு 12 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தமைக்கு முன்னைய ஆண்டுகளில் அவ்வனுமதிப்பங்குகள் குறைவாகப் பயன்படுத்தப்பட்டமையே காரணமாகும்.


இலங்கை அதன் புடவை மற்றும் ஆடை ஏற்றுமதிகளில் ஏறத்தாழ 56 சதவீதத்தினை ஐக்கிய அமெரிக்காவிற்கு ஏற்றுமதி செய்தது. இது அந்த நாட்டின் மொத்தப் புடவை மற்றும் ஆடை இறக்குமதிகளில் 2.3 சதவீதத்திற்கு வகைகூறியது. 2000ஆம் ஆண்டில் ஐக்கிய அமெரிக்காவிற்கான மொத்தப்புடவை மற்றும் ஆடை ஏற்றுமதிகள் 1999இன் 560 மில்லியன் ச.மீற்றருக்கு சமனான அளவிலிருந்து 2000ஆம் ஆண்டு 655.5 மில்லியன் ச.மீ. சமமான அளவிற்கு 17.1 சதவீதத்தினால் அதிகரித்தது. பெறுமதி நியதிகளில் இது தொடர்பான அதிகரிப்பு 14.1 சதவீதமாக அமைந்து 2000ஆம் ஆண்டில் 3.0 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்து விலைகளில் வீழ்ச்சியை எடுத்துக்காட்டியது. ஐக்கிய அமெரிக்காவிலிருந்தான முன்னுரிமைத் தீர்வைகளையும் சந்தை நுழைவு வசதிகளையும் கொண்டிருந்த நாடுகளுடன் இலங்கை போட்டியிட வேண்டியிருந்த உண்மையைக் கருத்திற் கொள்கையில் இது ஒரு குறிப்பிடத்தக்க அபிவிருத்தியாகும். 2000ஆம் ஆண்டில் மற்றைய அனைத்து நாடுகளிலிருந்தும் ஐக்கிய அமெரிக்காவிற்கு இறக்குமதி செய்யப்பட்ட புடவைகள் மற்றும் ஆடைகளின் விலைகள் 2.3 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தன. ஐக்கிய அமெரிக்காவிற்கான ஆடை ஏற்றுமதிகள் 2000ஆம் ஆண்டில் 408.6 மில்லியன் ச.மீற்றருக்குச் சமமான அளவிற்கு 21.2 சதவீதத்தினால் குறிப்பிடத்தக்களவிற்கு அதிகரித்தது. இதில் 71 சதவீதம் ஆடை அனுமதிப் பங்கின்கீழ் ஏற்றுமதி செய்யப்பட்டது. 2000ஆம் ஆண்டில் அனுமதிப்பங்கு அற்ற ஏற்றுமதி விடயங்கள் 46.4 சதவீதமான குறிப்பிடத்தக்க வளர்ச்சியினைப் பதிவு செய்தவேளையில் அனுமதிப் பங்கு விடயங்கள் 13.3 சதவீதத்தினால் அதிகரித்தன. உயர் பெறுமதி கூட்டப்பட்ட அனுமதிப்பங்கற்ற ஏற்றுமதி விடயங்கள் உயர்ந்த போட்டிச் சந்தைச் சூழலைக் கொண்ட ஐக்கிய அமெரிக்கச் சந்தையில், ஒப்பீட்டு ரீதியில் உயர்ந்த விலைகளைப் பெற்றன. ஐக்கிய அமெரிக்கச் சந்தைக்கான மற்றைய புடவை விடயங்களின் ஏற்றுமதிகளும் 1999இன் 222.9 மில்லியன் ச.மீற்றருக்கு சமமான அளவிலிருந்து 2000ஆம் ஆண்டில் 246.8 மில்லியன் ச.மீற்றருக்கு சமமான அளவிற்கு அதிகரித்து 10.8 சதவீதமான அதிகரிப்பினைப்பதிவு செய்ததுடன் 2000ஆம் ஆண்டின் அனுமதிப்பங்கற்ற வகையில் 95 சதவீதத்திற்கு மேற்பட்ட அளவிற்கும் வகைகூறியது.

அனுமதிப்பங்கு நடைமுறைகள் ஒழுங்கு முறைப்படுத்தப்பட்டமையும் 1999இல் மின்னியல் விசா தகவல் முறை அறிமுகப்படுத்தப்பட்டமையும் இவ்வாண்டில் அதியுயர் 80 சதவீத பயன்பாட்டு வீதத்தை எய்துவதற்கு உதவின. மின்னியல் விசா முறையானது ஏற்கனவே இருந்த கைவினை முறையை மாற்றீடு செய்து விரைவானதும் துல்லியமானதுமான தரவுகளை அனுப்புதல், ஏற்றுமதி ஆவணங்கள் இலகுவாக்கியமை மற்றும் ஐக்கிய அமெரிக்காவில் இறக்குமதிகளை விரைவாக அகற்றிக் கொள்வதற்கான நடைமுறை என்பனவற்றினூடாக அனுமதிப்பங்கு நிருவாகத்தின் வினைத்திறனை மேம்படுத்தவும் உதவியது. ஐக்கிய அமெரிக்கச் சந்தையில் 23 அனுமதிப் பங்கு விடயங்களின் பயன்பாட்டு வீதம் 2000ஆம் ஆண்டில் 85 சதவீதத்திற்கும் கூடுதலான அளவை அடைந்தது. உடைகள், பின்னப்பட்ட ஆண், பெண் மேலங்கிகள் , குளிராடைகள், நீண்ட காற்சட்டைகள், தலையணை உறைகள், மகளிர் மற்றும் பெண் பிள்ளைகளுக்கான முழுமையான ஆடைகள் என்பன தொடர்பான அனுமதிப்பங்கு விடயங்கள் இவ்வாண்டில் ஐக்கிய அமெரிக்காவில் முழுமையாகப் பயன்படுத்தப்பட்டன. கையுறைகள், பின்னப்படாத ஆண்களுக்கான மேலங்கிகள், பாவாடைகள், பெண்களுக்கான முழு ஆடைகள், மென்மையான பூ மற்றும் சடைத்துவாய்கள், தடித்த மேலங்கிகள், பின்னப்பட்ட ஆண்களுக்கான மேலங்கிகள், என்பன தொடர்பாக ஐக்கிய அமெரிக்கச் சந்தையில் பயன்பாட்டு வீதம் 90 சதவீதத்திற்கும் கூடுதலாகக் காணப்பட்டது. ஐரோப்பிய ஒன்றியச் சந்தையில் ஆண்கள் மற்றும் சிறுவர்களுக்கான நீண்ட காற்சட்டைகள், குறுகிய மற்றும் உல்லாசச் சட்டைகள், பின்னப்பட்ட பெண்களுக்கான மேலங்கிகள் என்பன தொடர்பாக அனுமதிப்பங்குப் பயன்பாட்டு வீதங்கள் மிக உயர்வாக இருந்தன. எனினும் முன்னைய ஆண்டுகளைப் போன்றே, 2000ஆம் ஆண்டிலும் தடித்த முழுமையான மேலங்கிகள், எஸ்கிமோவர் ஆடைகள் மற்றும் துருவ ஆடைகள், வேட்டை ஆடைகள், உள்ளங்கிகள், காலணிகள், குளியலாடைகள், நீச்சலுடைகள் ஆகிய விடயங்களைக் கொண்ட அனுமதிப் பங்குகளின் பயன்பாடு 30 சதவீதத்திற்கும் குறைவாகவே காணப்பட்டன. கனடியச் சந்தையில் மிகப்பிரபல்யம் பெற்ற அனுமதிப்பங்கு விடயங்களாக குளிர்கால வெளியாடைகள், நீளக்காற்சட்டைகள், பெண்களின் தளர்த்தியான மேலாடை, கட்டைக்காற்சட்டைகள், மற்றும் குழந்தைகளின் ஆடைகள் என்பன காணப்பட்டன. பொப்ளின் துணி/ ஆடவர் கம்பளி ஆடைகள், தடித்த மேலங்கிகள், முழுஆடைகள் அல்லாதவை, வெதுவெதுப்பான ஆடைகள், மழைக்கால ஆடைகள்,

ரிசேட்டுக்கள், விளையாட்டு ஆடைகள், சாப்பாட்டு மேசைத் துவாய்கள், குளிராடைகள் என்பன தொடர்பான அனுமதிப்பத்திரப் பயன்பாடு 30 சதவீதத்திற்கும் குறைவாக இருந்தமைக்கு தேவைப்பட்ட தரத்தில் இவ்வுற்பத்திகளை வழங்குவதற்கு தயாரிப்பாளர்களால் இயலாமல் இருந்தமையே காரணமாகும்.

ஆடை உற்பத்திகளுக்கான பன்னாட்டுச் சந்தையில் அறைகூவல்களை எதிர் கொள்வதற்கு உற்பத்தித் தரங்களில் மேலும் முன்னேற்றங்கள், செலவுக் குறைப்பு, விரைவான விநியோகம், மற்றும் கப்பற்படுத்தல் என்பன இன்றியமையாதனவாகும். சட்டைப்பைகளைத் தைத்தல், தெறிகளுக்கான துவாரமிடல், படுக்கை விரிப்புக்களைத் தைத்தல், தெறிகளை இணைத்தல், போன்ற கூடியளவு நேரத்தை எடுக்கக்கூடிய பணிகளை தன்னியக்கப்படுத்துவது உயர்ந்த தரத்திலான ஆடைகளை செலவுச் சிக்கன முறையில் தயாரிப்பதற்கு அத்தியாவசியமாகும். பல்நூலிழை உடன்படிக்கையின்கீழ் 2005 ஆம் ஆண்டளவில் அனுமதிப்பங்கு முறையை முற்றாக ஒழித்துவிடுவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளமை முன்னுரிமை வர்த்தகத்தின் வளர்ந்து செல்லும் பிரபல்யம், மின் வர்த்தகப்புரட்சி, குறைந்த செலவுடனான தயாரிப்பாளர்களின் தோற்றம் போன்ற காரணிகள் பன்னாட்டுச் சந்தைகளில் எதிர்காலப் போட்டியை மேலும் அதிகரிக்கும். சீனா உலக வர்த்தக அமைப்பில் முழு உறுப்பினராக மாறக்கூடிய சாத்தியம், மெச்சிக்கோ புவியியல் ரீதியாக ஐக்கிய அமெரிக்காவிற்கு அணித்தாகவுள்ளமையும் அது வட அத்திலாந்திக் சுதந்திர வர்த்தக உடன்படிக்கைகளின் கீழ் பெற்றுள்ள அனுகூலமான தன்மையும் ஐக்கிய அமெரிக்கச் சந்தையில் இலங்கையின் ஆடை ஏற்றுமதிகளுக்கான முக்கிய போட்டியாளராக அவற்றை விளங்கச் செய்யும். அனுமதிப்பங்கு இல்லாமல் ஆபிரிக்க துணை சகாரா நாடுகளைச் சந்தையில் நுழைய அனுமதிப்பதற்கு ஐக்கியஅமெரிக்கா எடுத்த ஆரம்ப முயற்சிகளும் பல மத்திய கிழக்கு நாடுகளுடன் ஐக்கிய அமெரிக்கா செய்து

வரைபடம் 4.3
தனியார்துறை கைத்தொழில் உற்பத்தி அளவுச் சுட்டெண்
( 1997 = 100 )




கொண்டுள்ள சிறப்பு இருபுடை வர்த்தக உடன்படிக்கைகளும் ஐக்கிய அமெரிக்கச் சந்தையில் இலங்கையின் சந்தைப் பங்கைக் குறைத்துவிடமுடியும். பொறித் தொழிற்பாட்டாளர் மற்றும் உதவியாளர்கள் போதியளவில் கிடைக்காமை, பொருத்தமான பயிற்சிகள் போதாமை, ஆடை உற்பத்திகளுக்கான உள்நாட்டுச் சந்தை வரையறுக்கப்பட்டுள்ளமை, வரையறுக்கப்பட்ட உற்பத்தி வீச்சு மற்றும் துணை ஒப்பந்தங்கள் போன்ற உள்நாட்டுச் சந்தைத் தடைகளும் கைத்தொழிலின் எதிர்கால வளர்ச்சிக்குப் பெரும் முட்டுக்கட்டையாக விளங்குகின்றன. ஐரோப்பாவிலும் ஐக்கிய அமெரிக்காவிலும் மாற்றமடைந்து வருகின்ற பாணிகளை சுலபமாக நெருங்குவதும் உற்பத்தி அபிவிருத்திக்கு இன்றியமையாததாகும். எனவே சந்தையைப் பன்முகப்படுத்துவது ஐக்கிய அமெரிக்கச் சந்தையில் தங்கியிருப்பதனைக் குறைப்பது, நுகர்வோர் சார்ந்த சந்தைப்படுத்தல் உபாயங்கள், உள்நாட்டுச் சந்தையில் தரமான துணிகளின் கிடைப்பனவு, தேர்ச்சி அபிவிருத்தி, சந்தை ஆராய்ச்சி மின் வர்த்தகத்தின் மூலமாக வர்த்தகப்படுத்தல் நல்லெண்ண மேம்பாடு என்பனவற்றின் மூலம் சந்தைப்படுத்தல் உபாயத்தில் மாற்றங்களைத் தோற்றுவிப்பது என்பன ஆடைக் கைத்தொழிலின் எதிர்கால அபிவிருத்தி இன்றியமையாத காரணிகளாகும்.

1998இன் வரவு செலவுத்திட்டமுன்மொழிவுகளில் அறிமுகப்படுத்தப்பட்ட புடவை மீளமைப்பு நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ், புடவைக் கைத்தொழிலின் தொழில்நுட்பங்களை புதுப்பிப்பதற்காக 111 நிறுவனங்கள் நவீனமயமாக்கல் முன்மொழிவுகளை சமர்ப்பித்துள்ளன. இவற்றில் 103 தொழில்களை நவீனமயப்படுத்துவதற்கான புதிய கடன்களை வழங்குவதற்காக அவற்றின் வங்கிகளில் ஏற்கனவே அங்கீகரிக்கப்பட்டுள்ளன. 2000ஆம் ஆண்டு திசெம்பர் இறுதியில் 30 தொழிற்சாலைகள் மீளமைப்புச் செயற்றிட்டங்களை நடைமுறைப்படுத்துவதனைத் தொடங்கிவிட்டன. 1998இல் புடவை இறக்குமதிகள் தாராளமயமாக்கப்பட்டமையானது இறக்குமதிப் போட்டியை எதிர்கொள்ளுவதற்கு தொழில் நுட்பங்களை தரமுயர்த்துவதற்கும் நவீனப் பொறிகள் நிறுவுவதற்கும் உள்நாட்டுச் சந்தை சார்ந்த தயாரிப்பாளர்களை நிர்ப்பந்தித்தன.

2000ஆம் ஆண்டில் காலணிக் கைத்தொழிலின் வெளியீடு 7.0 சதவீதமான வளர்ச்சியைப் பதிவு செய்தது. உள்நாட்டுச் சந்தைத் தயாரிப்பாளர்கள் சார்பு ரீதியில் குறைந்த விலைகளில் கவர்ச்சிகரமான புதிய வடிவமைப்புக்களை அறிமுகப்படுத்தவதனூடாக அவர்களது சந்தைப் பங்குகளை நிலை நிறுத்திக்கொள்ளக் கூடியவர்களாக இருந்தனர். பல ஆண்டுகளாக இவ்வுற்பத்திகளின் பாவனைக் காலமும்

தரமும் கணிசமாக அதிகரித்துள்ளன. எனினும் பன்னாட்டுச் சந்தைகளில் காணப்பட்ட உயர்ந்த போட்டியின் காரணமாக ஏற்றுமதி சார்ந்த காலணிகளின் உற்பத்தி சிறிதளவு வீழ்ச்சியைப் பதிவு செய்தது.

## உணவு குடிபானம் புகையிலை

இரண்டாவது பாரிய கைத்தொழில் வகையான உணவு குடிபானம் மற்றும் புகையிலை வகை 6.1 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்து 2000ஆம் ஆண்டின் தொழிற்சாலைக் கைத்தொழில்களின் வளர்ச்சியில் 13 சதவீதத்திற்கு பங்களித்தது. இவ்வகையில், குடிபானம் மற்றும் உணவுத் துணைத் துறைகளின் வெளியீடு முறையே 12.1 சதவீதத்தினாலும், 5.1 சதவீதத்தினாலும் வளர்ச்சியடைந்தன. வெறியக் குடிவகைத்துணைத்துறை 2.1 சதவீதமான மிதமான வளர்ச்சியைப் பதிவு செய்த வேளையில் புகையிலை உற்பத்தி 2.0 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது.

உணவுத்துணைத் துறையில், பதனிடப்பட்ட இறைச்சி, பால் உற்பத்திகள், பதனிடப்பட்ட பழவகை மற்றும் காய்கறிகள், விலங்குத்தீன், தெங்கு உற்பத்திகள் கோதுமை மா பதனிடல், பதனிடப்பட்ட உணவு, விசுக்கோத்து, சாக்கலேட், ரொபி மற்றும் இனிப்பு போன்ற கைத்தொழில்களின் உயர்ந்த வளர்ச்சி பதிவு செய்யப்பட்டது. அவ்வுற்பத்திகளில் பெரும் பாலானவற்றிற்கான உள்நாட்டுக் கேள்வி அதிகரித்தமைக்கு தாக்கம் மிக்க விளம்பரங்களும் வினைத்திறன்மிக்க விநியோக முறைகளும் காரணமாக இருந்ததுடன் இவை நகரக் குடித்தொகையினரிடையே இவ்வுற்பத்திகள் பிரபல்யம் பெறுவதனையும் உயர்த்தின. நுகர்வோர் தேவைகளை ஒப்பீடு செய்வதற்காக முக்கிய தயாரிப்பாளர்களினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்ச்சியான ஆராய்ச்சியும் அத்தகைய தேவைகளை ஈடுசெய்யும் விதத்தில் உற்பத்திகளின் தரம் மேம்பட உதவியது. தயாரிப்பாளர்கள் அவர்களது ஆராய்ச்சியல் கண்டறியப்பட்டவற்றின் அடிப்படையில் பல்வேறு அளவிலான புதிய உற்பத்திகளை அறிமுகப் படுத்தியுள்ளனர். இக் கைத்தொழில்களும் தொழில்நுட்பங்களைத் தரமுயர்த்துவதற்கும் புதிய எந்திரங்களை நிறுவுவதற்கும் கணிசமானளவில் முதலீடு செய்துள்ளன. 2000ஆம் ஆண்டில் விசுக்கோத்துக் கைத்தொழில் 12 சதவீதமான வளர்ச்சியைப் பதிவு செய்தமைக்கு அதிகரித்த உள்நாட்டு மற்றும் பன்னாட்டுக் கேள்விகளே காரணமாகும். உள்நாட்டுக் கேள்வி அதிகரித்தமைக்கு புதிய உற்பத்திகளின் அறிமுகம், சிறிய பொதிகளின் அறிமுகம், மற்றும் மேம்பட்ட பொதியிடல் என்பனவே காரணங்களாக இருந்தன.

2000ஆம் ஆண்டில் பால்மா பொதியிடல் கைத்தொழில் 8.8 சதவீதமான வளர்ச்சியைப் பதிவு செய்தமைக்கு உள்நாட்டில் காணப்பட்ட அதிகரித்த கேள்வியே காரணமாகும். எனினும், பதனிடுவதற்குப் போதுமானளவு பால் கிடைக்காமையினால் உள்நாட்டு பால்மா தயாரிக்கின்ற கைத்தொழிலின் வளர்ச்சி தடைப்பட்டது. 2000ஆம் ஆண்டில் பழவகை மற்றும் காய்கறி பதனிடல் கைத்தொழில் 6.1 சதவீதம் கொண்ட வளர்ச்சியைப் பதிவு செய்தது. முந்திரிப்பருப்பு, அன்னாசி, மற்றும் மாம்பழங்களின் பதனிடல் பன்னாட்டுச் சந்தைகளில் வளர்ச்சிக்கான அதியுயர் ஆற்றலைக் கொண்டுள்ளமையை எடுத்துக்காட்டியது. முந்திரிப்பருப்பு பதனிடுவதற்குப்புறம்பாக, மதுசாரம், வேகத்தடுப்பு பசை, உள்பூச்சு, பித்தளைப்பூச்சு, வர்ணம், பக்ரீரியாக் கொல்லிகள், பங்கசுக் கொல்லிகள், போன்ற உற்பத்திகளுக்கான மூலப் பொருளாக அதனது ஓடு பயன்படுத்தப்படுகிறது. அன்னாசி இலையின் நாரிழை, செலவு மிகுந்த ஆடைப் பொருட்களை தயாரிக்க பயன்படுகிறது. எனினும் அத்தகைய கைத் தொழில்களுக்கான பழவர்க்கங்களின் வர்த்தகப் பயிர்ச்செய்கையானது பாரியளவு நிலங்கள் இல்லாமை, களஞ்சியப்படுத்தல் மற்றும் போக்குவரத்து வசதிகள் போதுமானளவு இல்லாமை, உயர்தர விதைகள் கிடைக்காமை மற்றும் தாழ்ந்த உற்பத்தி என்பனவற்றினால் கட்டுப்படுத்தப்பட்டது. கோழித்தீனுக்கான கேள்வி அதிகரித்தமைக்கு இவ்வாண்டுக் காலத்தில் இறைச்சிக்கான கோழி வளர்ப்பு உயர்வடைந்தமையே காரணமாகும். புரதத்திற்கான மூலமாக மக்கள் இதனை விரும்பியமையினால் கோழிக்கான கேள்வியானது மற்றைய உற்பத்திகளுடன் ஒப்பிடுகையில் சாதகமான விலையையும் கொண்டிருந்தமையினால் படிப்படியாக அதிகரித்தது. தேங்காய் பால்மாவிற்கான உள்நாட்டுக் கேள்வி வளர்ச்சியடைந்தமைக்கு பெருமளவு விளம்பரமும் மூலப்பொருட்களின் விலைகள் குறைவடைந்தமையும் தொடர்ந்து விலைகளில் ஏற்பட்ட குறைப்புமே காரணமாகும். தெங்குப் பால்மாவைப் பயன்படுத்துவதிலுள்ள வசதியும் கேள்வியைத் தூண்டியது.

மென் குடிபானக் கைத்தொழில் நன்றாக மீட்சியடைந்து 1999இல் காணப்பட்ட 2.2 சதவீதம் கொண்ட வீழ்ச்சிக்கு மாறாக 2000ஆம் ஆண்டில் 12.1 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தது. சந்தைப்படுத்தல் மற்றும் விநியோக மூலவளங்கள் சிறந்த முறையில் பயன்படுத்தப்பட்டமை, புதிய உற்பத்திகள் அறிமுகப்படுத்தப்பட்டமை என்பன இவ்வாண்டுக் காலத்தில் நாட்டின் குறிப்பிட்ட சில பகுதிகளில் நிலவிய வரண்ட வானிலை நிலைமைகளுடன் இணைந்து மென்பானங்களுக்கான கேள்வியை உயர்த்தின.

பதனிடப்பட்ட மற்றும் பொதிகளிலடைக்கப்பட்ட தேயிலைக் கைத்தொழில் ஐரோப்பிய ஒன்றியம், ருசியா, மற்றும் மத்திய கிழக்கு நாடுகளிலிருந்து அத்தகைய உற்பத்திகளுக்கு ஏற்பட்ட அதிகரித்த கேள்வியுடன் சேர்ந்து முன்னேற்றத்தினைக் காட்டியது.

2000ஆம் ஆண்டில் வெறிய மதுசாரத்தின் உற்பத்தி 6.5 சதவீதமான வளர்ச்சியைப் பதிவு செய்தமைக்கு அதிகரித்த கேள்வியும் உற்பத்தி வரிகள் கடுமையாக நடைமுறைப்படுத்தப்பட்டமையின் விளைவாக சட்டவிரோத குடிவகையின் உற்பத்தி குறைவடைந்தமையுமே காரணமாகும். நுகர்வோரைக் கவர்வதற்காக முக்கிய தயாரிப்பாளர்கள் புதிய வடிவங்களைக் கொண்ட போத்தல்கள், புதிய சுட்டுத்துண்டுகள் மற்றும் புதிய போத்தல் மூடிகள் என்பனவற்றை அறிமுகம் செய்தனர். பல ஆண்டுகளாகக் காணப்பட்ட தொடர்ச்சியான வளர்ச்சியைத் தொடர்ந்து 2000ஆம் ஆண்டில் பியர் கைத்தொழில் சிறிதளவால் மட்டுமே வளர்ச்சியடைந்தமைக்கு அதிகரித்த விற்பனைத் தீர்வையினால் தோன்றிய விலை அதிகரிப்புக்களைத் தொடர்ந்து கேள்வி குறைவடைந்தமையே முக்கிய காரணமாகும். இவ்வாண்டுக் காலத்தில் குறிப்பிட்ட பியர் தயாரிப்பாளர்கள் உள்ளூர்ச் சந்தைக்கு தகரத்திலடைக்கப்பட்ட பியரை அறிமுகப்படுத்தியதன் மூலம் பியர் கிடைக்கும்முறை மேம்பட்டது. இது சுகமாக அகற்றிவிடக்கூடிய தன்மை களஞ்சியப்படுத்தல், உடைந்துவிடல் மற்றும் சிதறுதல் இடர்பாடுகளை நீக்குதல் என்பனவற்றின் காரணமாக நுகர்வோரின் மிகுந்த வரவேற்பினை பெற்றது.

பல்வேறு மேம்பாட்டு நடவடிக்கைகள் காணப்பட்டபோதும், 2000ஆம் ஆண்டில் பதனிடப்பட்ட புகையிலை உற்பத்திகளின் வெளியீடு 2 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. உற்பத்திவரிகளினால் அதிகரித்த விலைகளும் புகையிலைக்கெதிரான பிரசாரங்களும் சிகரட்டிற்கான கேள்வியைக் குறைத்துவிட்டன. மத்திய கிழக்கிற்கான சிகரட் ஏற்றுமதிகளும் வீழ்ச்சியடைந்தமைக்கு அந்நாடுகளினால் அறிமுகப்படுத்தப்பட்ட புகையிலை இறக்குமதிகள் மீதான உயர்ந்த தீர்வைகளே காரணமாகும். எனினும் முதலீட்டுச்சபை நிறுவனங்களினால் தயாரிக்கப்பட்ட பதனிடப்பட்ட புகையிலை இவ்வாண்டுக் காலத்தில் உயர்ந்த செயலாற்றத்தினைக் காட்டியது. பெருந் தொகையினரைக் கொண்ட சந்தைப் பிரிவினரிடையேயும் வயதுவந்த நுகர்வோரிடையேயும் குறிப்பிட்டவகை வர்த்தக அடையாளத்தினைப் பிரபல்யப்படுத்தும் பொருட்டு பன்னாட்டுத் தரங்களுக்கு இணையான பொதியிடலில், உயர்ந்த வடிவமைப்புக்களுடன் கூடிய புதிய வகைகளை அறிமுகப்படுத்தல் போன்ற பல்வேறு மேம்பாட்டுப் பிரசாரங்களை தயாரிப்பாளர்கள் மேற்கொண்டனர். சுங்கச்சட்டங்கள் கடுமையான முறையில் நடைமுறைப்படுத்தப்பட்டமையானது இவ்வாண்டுக் காலத்தில் நாட்டிற்குள்வரும் கள்ளக்கடத்தல் சிகரட்டுக்களை கணிசமாகக் குறைத்தது.

## இரசாயனம் பெற்றோலியம் இறப்பர் மற்றும் பிளாத்திக்கு உற்பத்திகள்

தனியார்துறைக் கைத்தொழில்களில் மூன்றாவது பாரிய வகையான இரசாயனம், பெற்றோலியம், இறப்பர் மற்றும் பிளாத்திக்கு உற்பத்திகள் வகை 1999இன் 4.5 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 9.1 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தது. இவ்வகை 2000ஆம் ஆண்டில் தனியார்துறைக் கைத்தொழிலின் வளர்ச்சிக்கு 13 சதவீதம் பங்களித்தது. இவ்வகையில், குறிப்பிடத்தக்க வளர்ச்சியைக் காட்டிய முக்கிய கைத்தொழில் துணைத்துறைகளாக இறப்பரை அடிப்படையாகக் கொண்ட கைத்தொழில்கள் (12.1 சதவீதம்) இரசாயனம் வர்ணங்கள் மற்றும் வளமாக்கி (13.1 சதவீதம்) மருந்தாக்கற் பொருட்கள், அழுக்கி நீக்கிகள் மற்றும் ஏனைய உற்பத்திகள் (6.0 சதவீதம்) மற்றும் பிளாத்திக்கு மற்றும் பிவிசி உற்பத்திகள் (6.5 சதவீதம்) என்பன காணப்பட்டன.

இறப்பரை அடிப்படையாகக் கொண்ட கைத்தொழில்கள் கிழக்காசிய நாடுகளின் நாணயங்கள் உயர்வடைந்தமை குறைந்த உற்பத்திச் செலவு மற்றும் உற்பத்தித் தரத்தின் மேம்பாடு என்பனவற்றின் காரணமாக அதன் போட்டித் தன்மையை மீண்டும் பெற்றுக்கொண்டது. ஐக்கிய அமெரிக்க, ஐரோப்பா மத்திய கிழக்கு நாடுகளிலிருந்து இறப்பர் கையுறைகள், கைத்தொழில் மற்றும் வேளாண்மைக்கான ரயர்கள் என்பனவற்றுக்கான ஏற்றுமதிக் கட்டளைகளில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பொன்று பதிவு செய்யப்பட்டது. இறக்குமதி செய்யப்பட்ட பல்வேறு வகை ரயர்கள் கிடைக்கத்தக்கதாக இருந்தபோதும் உள்ளூரில் தயாரிக்கப்பட்ட ஈருருளி ரயர்கள் மற்றும் வர்த்தக ஊர்திகளுக்கான ரயர்கள் என்பனவற்றின் சந்தைப்பங்கு அதிகரித்தது. இவ்வாண்டில் தயாரிப்பாளர்கள் பாரிய சுமைப் போக்குவரத்திற்குப் பயன்படுத்துவதற்காக பாரவண்டிகள், முதன்மை நகர்த்தும் ஊர்திகள், மற்றும் இழுபொறிகள் போன்றவற்றிற்கு புதிய உயர்தர ரயர்களை அறிமுகப்படுத்தியுள்ளனர். நாட்டின் கிராமப் புறங்களில் ஈருருளி ரயர்கள் மற்றும் ரியூப்புக்கான கேள்வி வெகுவாக அதிகரித்துக் காணப்பட்டது. ஒட்டப்பட்ட இறப்பர் சப்பாத்துக்கள், காலணி அடித்தட்டுக்கள் போன்ற இறப்பரை அடிப்படையாகக் கொண்ட உற்பத்திகளின் இந்தியாவிற்கான ஏற்றுமதி இந்திய - இலங்கை வர்த்தக உடன்படிக்கையின் நியதிகளில் வழங்கப்பட்ட சலுகைகளின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டன.

இரசாயனங்கள், வர்ணங்கள், மற்றும் வளமாக்கித் துணைத்துறையில் உயர்ந்த வளர்ச்சியைக் கொண்ட கைத்தொழில்களாக வளமாக்கிக் கலவை, செயற்படுகரியம், நுளம்புச்சுருள், இரசாயனங்கள், களைக்கொல்லிகள், பூச்சி கொல்லிகள் என்பன காணப்பட்டன. வளமாக்கி உற்பத்தியானது தேயிலை, தெங்கு மற்றும் இறப்பர் துறைகளின் அதிகரித்த வளமாக்கிப் பயன்பாட்டிலிருந்தும் கணிசமான நன்மைகளைப் பெற்றது. முக்கிய தயாரிப்பாளர்களினால் வழங்கப்பட்ட தொழில்நுட்ப மற்றும் விரிவாக்கப் பணிகள், பயிர்களுக்கான சிறந்த விலைகள் மற்றும் சாதகமான வானிலை நிலைமைகள் என்பன வளமாக்கிக்கான கேள்வியைத் தூண்டின முதற் தடவையாக, இலங்கையில் தயாரிக்கப்பட்ட நுளம்புச்சுருள், பாக்கித்தான்,தென்னாபிரிக்கா, மற்றும் கென்யா போன்ற நாடுகளிலிருந்து ஏற்றுமதிக் கட்டளைகளை பெருமளவில் பெற்றிருக்கிறது இவ்வாண்டில் நுளம்புச் சுருள்களுக்கான உள்நாட்டுக் கேள்வியும் கணிசமாக அதிகரித்தது. ஐக்கிய அமெரிக்காவிலிருந்து அதிகளவில் ஏற்றுமதிக் கட்டளைகள் கிடைத்தமையின் காரணமாக செயற்படுகரிய இக் கைத்தொழில் குறிப்பிடத்தக்களவில் மீட்சியடைந்தது. அதிகரித்த தெங்கு உற்பத்தி மற்றும் தேங்காய்த் துருவல் உற்பத்தியில் ஏற்பட்ட மேம்பாடு என்பன செயற்படுக் கரியக் கைத்தொழிலுக்குப் பயன்படும் தேங்காய்ச்சிரட்டையை அதிகளவில் வழங்கியது. உற்பத்திச் செய்முறையின்போது விரயமாகிப்போகும் வெப்பத்தைப் பயன்படுத்தி தொழிற்படும் நீராவி வெப்ப சூழலொன்று அறிமுகப்படுத்தப்பட்டதன் விளைவாக இக் கைத்தொழிலின் உற்பத்திச் செலவும் குறைவடைந்தது. உற்பத்தித் தரங்களில் தொடர்ச்சியான முன்னேற்றம் அதிகளவான ஊக்குவிப்புப் பிரசாரங்கள் மற்றும் இறக்குமதி செய்யப்பட்ட விடயங்களைவிட சார்பு ரீதியில் அநுகூலமான விலைகள் என்பனவற்றின் காரணமாக சவர்க்காரம் மற்றும் அழுக்கு நீக்கி கைத்தொழில் சிறப்பாக செயலாற்றியது. சிறப்பு விலைகளுடன் கூடிய சிறிய பொதிகள் அறிமுகப்படுத்தப்பட்டமையினூடான சந்தை கூறுகளாக்கப்பட்டமையானது குறைந்த வருமானத்தைக் கொண்ட நுகர்வோரிடையே பற்பசை, சம்பூ, மற்றும் நறுமனப் பொருட்களுக்கான கேள்வியை அதிகரித்தது. மூலிகை உற்பத்திகளை பயன்படுத்துவது தொடர்பாக அதிகரித்துவரும் பிரபல்யம், உற்பத்தித் தரத்திலும் பொதியிடலிலும் அடையப்பட்ட முன்னேற்றங்களுடன் இணைந்து உள்நாட்டு ஆயுர்வேத உற்பத்திகளுக்கான கேள்வியைத் தூண்டியது. இந்தியாவிலிருந்தான இறக்குமதிகளின் அழுத்தங்களையும் இக் கைத்தொழிலினால் எதிர்த்து நிற்க முடிகிறது. 2000ஆம் ஆண்டில் ஆயுர்வேத உற்பத்திகள் ஐக்கிய அமெரிக்கா, மற்றும் கிழக்காசிய நாடுகளிலுள்ள சந்தைகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளன. எனினும் மேற்குலகச் சந்தையின் தேவைப்பாடுகளை ஈடுசெய்யத்தக்க விதத்தில் ஆராய்ச்சி மற்றும் உற்பத்தி அபிவிருத்திகளுக்கூடாக உற்பத்தித்தரம் மேலும் மேம்படுத்தப்பட வேண்டும்.

2000ஆம் ஆண்டில் பிளாத்திக்குக் கைத்தொழில் 6.5 சதவீதம் கொண்ட வளர்ச்சியைப் பதிவு செய்தது. தளபாடம் வீட்டுப்பொருட்கள், கட்டடப் பொருட்கள் மற்றும் பொதியிடல் பொருட்கள் போன்ற மர உற்பத்திகளுக்கு பதிலீடாக பிளாத்திக்கினைப் பயன்படுத்துகின்ற போக்கின் அதிகரிப்பு 2000ஆம் ஆண்டிலும் தொடர்ந்தது. நாட்டின் முக்கியமான தொலைத் தொடர்பூட்டல் செயற்றிட்டம் நிறைவடைந்தமையானது பி.வி.சி குழாய்களுக்கான கேள்வியை குறைத்துவிட்டது. விளக்குகள் மற்றும் பிளாத்திக்குக் கூறுகள், பாசறைக் கூடாரங்கள், பயணப் பைகள் மற்றும் உணவுப் பைகள் பி.வி.சி மழை அங்கிகள் மற்றும் பைகள் பிளாத்திக்கு மூடிகள் என்பனவற்றைத தயாரிக்கும் முதலீட்டுச் சபைக் கைத்தொழில்கள் இவ்வாண்டில் உயர்ந்த வளர்ச்சியைப் பதிவு செய்தன.

### உலோகமல்லாக் கனிப்பொருள் உற்பத்திகள்

இவ்வகையானது 2.6 சதவீதங் கொண்ட சிறிதளவு வளர்ச்சியைப் பதிவு செய்து மட்பாண்ட உற்பத்திகள், சீமெந்து மற்றும் பதனிடப்பட்ட வைரம் ஆகிய கைத்தொழில் பொருட்களின் குறைந்த வளர்ச்சியைப் பதிவு செய்தது. 2000ஆம் ஆண்டில் கட்டட மூலப் பொருட்களைக் கொண்ட துணை வகை 4.2 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தது. கிழக்காசிய நாடுகளிலிருந்தான மட்பாண்ட ஓடுகளுக்கான கேள்வி குறைவடைந்தமைக்கு அந்நாடுகளின் நிதியியல் நெருக்கடிகளைத் தொடர்ந்து கட்டடவாக்க கைத்தொழில் மெதுவடைந்தமையே காரணமாகும். இந்நாடுகள் மந்தநிலைக்கு முன்னைய மட்டத்திற்கு இன்னமும் மீட்சியடையவில்லை. எனினும் இவ்வாண்டில் ஐக்கிய இராச்சியம், ஐக்கிய அமெரிக்கா, கனடா மற்றும் அவுத்திரேலியா என்பனவற்றிலிருந்தான மட்பாண்ட உற்பத்திகளுக்கான கேள்வி கணிசமாக அதிகரித்தது. சில ஏற்றுமதியாளர்கள் நெதர்லாந்திலும், பெல்ஜியத்திலும் உயர்ந்த பெறுமதி கூட்டப்பட்ட தனியான சந்தைக்களைக் கண்டு பிடித்துள்ளனர். உற்பத்தித்தரம், மற்றும் மனித மூலவளங்கள் என்பனவற்றை மேம்படுத்தவும் நவீன தொழில்நுட்பங்களை பின்பற்றுவதற்குமாக மட்பாண்ட ஓட்டுக் கைத்தொழில் குறிப்பிடத்தக்களவு நிதியினை முதலீடு செய்துள்ளது. கட்டுமானக் கைத்தொழிலில் மட்பாண்ட ஓடுகளின் அதிகரித்துவரும் பிரபல்யம் காரணமாக சுவர் மற்றும் தரை ஓடுகளுக்கான

உள்நாட்டுக் கேள்வி தொடர்ந்தும் அதிகரிக்கின்றது. வழமையான மட்பாண்ட ஓடுகளைவிட பலமானதும் வீடு மற்றும் கைத்தொழில் பிரயோகங்களுக்கு மிகப் பொருத்தமானதுமான மெருகூட்டப்பட்ட வெண்களிமண் ஓடுகள் பாவனையாளரிடையே பிரபல்யம் பெற்று வருகின்றன. ஏற்றுமதிச் சந்தைகளுக்கான விசேடமாகத் தயாரிக்கப்பட்ட சில பிரத்தியேக வடிவமைப்புக்கள் இவ்வாண்டில் உள்நாட்டுச் சந்தைக்கு வெற்றிகரமாக அறிமுகப்படுத்தப்பட்டன. இந்தியா வெண்களிமண் உற்பத்திகளை பாரியளவில் தயாரிக்காமையினால் இந்தியச் சந்தையில் மட்பாண்டக் கைத்தொழிலின் பங்கினை விரிவாக்குவதற்கு உயர்ந்தளவு உள்ளார்ந்த வளம் காணப்படுகின்றது.

இறக்குமதிப் போட்டியினை எதிர் நோக்குவதன் காரணமாக சீமெந்து வெளியீடு சிறிதளவு வளர்ச்சியை மட்டும் பதிவு செய்தது. உள்நாட்டுச் சீமெந்துக் கைத்தொழிலைப் பாதுகாப்பதற்காக 2000ஆம் ஆண்டு யூனில் சீமெந்து மீதான இறக்குமதித் தீர்வை 10 சதவீதத்திலிருந்து 25 சதவீதத்திற்கு உயர்த்தப்பட்டது. எனினும், இந்தியா - இலங்கை சுதந்திர வர்த்தக உடன்படிக்கையின் கீழ் இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்படும் சீமெந்து மீதான தீர்வை 9.5 சதவீதமாகவே இருந்தது.

வரிச் சலுகைகள், கடன் நிதியிடலின் கிடைப்பனவு என்பனவற்றினால் தூண்டப்பட்ட கட்டுமானக் கைத்தொழிலின் வளர்ச்சி கல்நார்த்தகடுகள், சீமெந்துக் கலவை உற்பத்திகள், கூரைத்தகடுகள், மற்றும் கண்ணாடிகள் போன்ற கட்டடப் பொருட்களுக்கான உயர்ந்த கேள்வியைத் தோற்றுவித்தது. 2000ஆம் ஆண்டில் கல்நார்த்தகடுகள், கூரை மற்றும் உட்கூரைத் தகடுகளின் உற்பத்தி 14 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தன. கண்ணாடிக் கைத்தொழில் உற்பத்தியில் வினைத்திறனை மேம்படுத்தும் பொருட்டு குறிப்பிடத்தக்களவு நிதியை முதலீடு செய்துள்ளதுடன் தரத்தினை உயர்த்தவும் வழிமுறைகளை மேற் கொண்டுள்ளது.

## உருவமைக்கப்பட்ட உலோக உற்பத்திகள்

2000ஆம் ஆண்டில் உருவமைக்கப்பட்ட உலோக உற்பத்திகளின் வெளியீடு 1999இல் அடையப்பட்ட 5.4 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 4.5 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தது. இவ்வகை 2000ஆம் ஆண்டில் தொழிற்சாலைக் கைத்தொழிலின் வளர்ச்சியில் 2.1 சதவீதத்திற்குப் பங்களித்தது. இவ்வளர்ச்சிக்குப் பங்களித்த துணைவகைகளாக குளிர்சாதனப் பெட்டிகள், மின்னியல் பொருட்கள், சமயலறைச் சாமான்கள், தொலைக் காட்சிப் பெட்டிகள், வேளாண்மைப் பொறிகள், உந்து ஊர்திகளின் வடிமைப்பு மற்றும் கப்பல்கள் மற்றும் படகுகளின் தயாரிப்பு மற்றும் திருத்தல், அலுமீனிய உற்பத்திகள், கம்பிகள், மின்மாற்றிகள் மற்றும் வெளிச்சப் பொருத்திகள் என்பன காணப்பட்டன.

கிராமிய மின்னூட்டலில் ஏற்பட்ட விரிவாக்கம், மற்றும் உயர்ந்த விளைச்சலின் காரணமாக வருமானம் அதிகரித்தமை என்பன தொலைக் காட்சிப் பெட்டிகள், மின் பொருட்கள் மற்றும் சமயலறைப் பொருட்களுக்கான கேள்வியை விரைவாக அதிகரித்தன. வேளாண்மை நடவடிக்கைகளில் ஏற்பட்ட விரிவாக்கம் நீர்ப்பம்புகள், தெளிப்பான்கள் போன்ற வேளாண்மைப் பொறிகளுக்கான பெருமளவு கேள்வியை உருவாக்கின. சந்தைப் போக்குகளுடன் இசைந்து செல்லும் விதத்தில் உற்பத்திகளின் தரத்தினையும் புதிய வடிவமைப்புக்களையும் முன்னேற்றுகின்ற விதத்தில் குளிர்ச்சாதனப் பெட்டித் தயாரிப்பாளர்கள் பல்வேறு தோற்றங்களுடன் கூடிய புதிய மாதிரிகளை அறிமுகப்படுத்தியிருக்கின்றனர். கிராமப் பிரதேசங்களில் குளிர்விக்கப்பட்ட உணவுப் பொருட்களை விற்பனை செய்கின்ற வர்த்தக நிலையங்கள் விரிவடைந்தமையின் காரணமாக உறைக் குளிரூட்டிப் பெட்டிகளுக்கான தேவை அதிகரித்தது. மென் குளிர்ப்பானக் கைத்தொழிலின் விரிவாக்கமும் மற்றும் நகர மற்றும் கிராமப் பகுதிகளில் உணவு விற்பனை நிலையங்கள் பிரபல்யம் பெற்று வருகின்றமையும் போத்தல் குளிரூட்டிகளின் கேள்வியை அதிகரித்தன. முதலீட்டுச்சபை நிறுவனங்களினால் தயாரிக்கப்பட்ட மின்னியல் பாகங்கள், இரும்புச் சுருள்கள், கணனிப்பாகங்கள் மற்றும் மின் மாற்றிகள் என்பனவற்றின் வெளியீடு வளர்ச்சியடைந்தமைக்கு உயர்ந்த பன்னாட்டுக் கேள்வியே காரணமாகும்.

பிரதேச பேருந்துக் கம்பனிகள் மற்றும் தனியார்துறை என்பன வழங்கிய கட்டளைகளின் எண்ணிக்கை அதிகரித்தமையின் காரணமாக 2000ஆம் ஆண்டில் உந்து சொகுசு வண்டிகளின் உருவமைப்பு உயர்ந்த வளர்ச்சியைப் பதிவு செய்தது. அரசாங்கம் மற்றும் அயல்நாடுகளிலிருந்து கிடைத்த கட்டளைகளின் அதிகரித்த எண்ணிக்கையுடன் வள்ளம் மற்றும் கப்பல் கட்டும் கைத்தொழிலும் வளர்ச்சியடைந்தது. உற்பத்தித்தரம் தொடர்ந்தும் மேம்பட்டமையானது மின்கம்பிகள் மற்றும் வெளிச்சப் பொருத்திக் கைத்தொழில்கள் வளர்ந்துவரும் கட்டுமானக் கைத்தொழிலிருந்து உயர்ந்த கேள்வியைக் கவருவதற்கு உதவின. பாவிக்கப்பட்ட செப்புக்கழிவுகள், அலுமீனியம், நிக்கல், ஈயம் மற்றும் துத்தநாக உலோக பாகங்கள் என்பன பெருமளவில் ஏற்றுமதி செய்யப்படுவது உள்ளூரில் பற்றவைத்து ஒட்டும் கைத்தொழில் களுக்கான மூலப் பொருட்களின் பாரிய பற்றாக குறைக்கு காரணமாக விளங்குகின்றது. இதனால்

அத்தகைக கழிவு மூலப்பொருட்களின் ஏற்றுமதி மீது அரசாங்கம் 25 சதவீத ஏற்றுமதித் தீர்வையை விதித்தது.


### தாள் மற்றும் தாள் உற்பத்திகள்

2000ஆம் ஆண்டில் தாள் மற்றும் தாள் உற்பத்திக் கைத்தொழில் 7.7 சதவீத வளர்ச்சியைப் பதிவு செய்தது. இவ்வகையில் சிறந்த செயலாற்றத்தினைக் கொண்டிருந்த கைத்தொழில் விடயங்களாக செய்தித்தாள்கள், நூல்கள் மற்றும் சஞ்சிகைகள், நெளிவாக்கப்பட்ட அட்டைப் பெட்டிகள், பொதியிடல் பொருட்கள், சுட்டுத்துண்டுகள், சுவரொட்டிகள், அப்பியாசப் புத்தகங்கள் மற்றும் நாள் குறிப்புக்கள் என்பன காணப்பட்டன. 2000ஆம் ஆண்டில் தாள் கைத்தொழிலில் தொழில்நுட்பம் குறிப்பிடத்தக்களவிற்கு மேம்பட்டதுடன் புதியபொறிகளும் சேர்க்கப்பட்டன. இவ்வாண்டில் செய்தித் தாள்களின் அச்சிடல் 6 சதவீதத்தினால் அதிகரித்தது. பல சஞ்சிகைகளும், சிறப்பாக விளையாட்டு, அரசியல், ஆங்கிலமொழி, வியாபாரம் மற்றும் ஓய்வு நேர நடவடிக்கைகள் என்பன மீதான சுருக்கச் செய்தித்தாள்களும் இவ்வாண்டில் அறிமுகப் படுத்தப்பட்டன. ஏற்றுமதி சார்ந்த தயாரிப்பாளர்கள் உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட நெளிவாக்கப்பட்ட அட்டைப் பெட்டிகள், கட்டுத்துண்டுகள், மற்றும் பொதியிடலுக்கான அட்டைப் பெட்டிகள் என்பனவற்றைப் பயன்படுத்தும் போக்கு காணப்படுகிறது. முதலீட்டுச்சபைக் கைத்தொழிலில்களினால் தயாரிக்கப்பட்ட புகைப்பட அல்பங்கள், நூல்கள் மற்றும் பருவகால வெளியீடுகள், தாள் சாக்குகள் என்பனவற்றின் வெளியீடு இவ்வாண்டில் உயர்ந்த வளர்ச்சியைப் பதிவு செய்தன.

### மர மற்றும் மர உற்பத்திகள்

மரத்தினை அடிப்படையாகக் கொண்ட தளபாடங்கள் மற்றும் ஏனைய விடயங்களுக்கான உள்நாட்டுக் கேள்வி மந்தமடைந்தமைக்கு மர உற்பத்திகளுக்குப் பதிலாக உருக்கு மற்றும் பிளாத்திக்கு தளபாடங்களைப் பயன்படுத்தும் போக்கு வளர்ச்சியடைந்து வருகின்றமை காரணமாகும். இறக்குமதி செய்யப்பட்ட தளபாடங்கள் கிடைக்கத்தக்கதாக இருப்பதும் உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட தளபாடங்களுக்கான கேள்வியைக் குறைத்துவிட்டது. மூலப் பொருட்கள் மற்றும் தேர்ச்சி பெற்ற தொழிலாளர் பற்றாக்குறையினால் இக் கைத்தொழில் பாதிக்கப்பட்டுள்ளது. முதலீட்டுச்சபை நிறுவனங்களினால் ஏற்றுமதிச் சந்தைகளுக்காக தயாரிக்கப்பட்ட மர மற்றும் உற்பத்திகள் குறிப்பாக விளையாட்டு மற்றும் அதனுடன் தொடர்பான பொருட்கள், மரத்தாலான கல்வி சார்ந்த பொருட்கள், மரப் பொம்மைகள், கைவினை மற்றும் பரிசுப் பொருட்கள், சிறந்த செயலாற்றத்தினைப் பதிவு செய்தன.

வரைபடம் 4.4
கைத்தொழில் உற்பத்தியில் அரச, தனியார் துறையின் பங்கு




பல முக்கிய தயாரிப்பாளர்கள் மரத் தயாரிப்புக் கைத்தொழிலுள்ள பெரும்பாலும் கைகளினால் மேற்கொள்ளப்படும் வேலைகளுக்குப் பதிலாக புதிய பொறிகளை நிறுவியதன்மூலம் மரத் தயாரிப்புக் கைத்தொழிலில் தொழில் நுட்பத்தினை நவீனப்படுத்தியுள்ளனர்.

### அரசதுறைக் கைத்தொழில்கள்

2000ஆம் ஆண்டில் உண்மை நியதிகளில் அரசதுறைக் கைத்தொழில்களின் வெளியீடு 1999இன் 12 சதவீத வீழ்ச்சிக்கு எதிராக 24 சதவீதத்தினால் அதிகரித்தன. அரசதுறைக் கைத்தொழில் வெளியீட்டில் 90 சதவீதத்திற்கு மேற்பட்ட பங்கிற்கு வகைகூறும் இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் வெளியீடு 2000ஆம் ஆண்டில் 24 சதவீதத்தினால் அதிகரித்தது. 1999இன் தொடக்கப் பகுதியில் ஏறத்தாழ இரண்டு மாதங்களாக தூய்மி மூடப்பட்டிருந்த 1999 ஆம் ஆண்டினைப் போலன்றி இவ்வாண்டு முழுவதும் இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தில் தடங்கலற்ற உற்பத்தி காணப்பட்டமையே அரசதுறைக் கைத்தொழில்களின் வெளியீட்டில் கணிசமான அதிகரிப்பு ஏற்பட முக்கிய காரணமாக இருந்தது. பெற்றோலிய உற்பத்திகள் நீங்கலான அரசதுறைக் கைத்தொழில் வெளியீடு ஏறத்தாழ 21 சதவீதத்தினால் அதிகரித்துள்ளது.

2000ஆம் ஆண்டில் அரச மரக் கூட்டுத்தாபனத்தின் வெளியீடு 68 சதவீத குறிப்பிடத்தக்க அதிகரிப்பினைப் பதிவு செய்தமைக்கு காட்டுத் திணைக்களம் மரம் தறிக்கும் தொழிற்பாட்டிற்காக பெருமளவு காட்டுப் பிரதேசத்தினை ஒதுக்கியதன் விளைவாக மரம் தறிக்கும் மட்டம் அதிகரித்தமையும் பெருமளவு தனியார்துறை பெருந்தோட்டங்கள் மரம் தறித்தல் தொழிற்பாடுகளுக்காகக் குத்தகைக்கு வழங்கப்பட்டமையுமே காரணமாகும். 2000ஆம் ஆண்டில் வரையறுக்கப்பட்ட செவனகல சீனிக் கைத்தொழிலின் வெளியீடு 46 சதவீதத்தினால் அதிகரித்தமைக்கு இவ்வாண்டுக் காலத்தில்

அட்டவணை 4.4
அரச துறை முதன்மைக் கைத்தொழில்களின் வெளியீட்டுச் சுட்டெண்

1997=100

| வகை | சுட்டெண் | | | | | சதவீத மாற்றம் | |
|---|---|---|---|---|---|---|---|
| | 1996 | 1997 | 1998 | 1999 | 2000(அ) | 1999 | 2000(அ) |
| 1. உணவு, குடிபானங்கள், புகையிலை | 107.0 | 100.0 | 54.4 | 54.9 | 72.0 | 10.9 | 31.2 |
| 2. புடவைகள், அணியும் ஆடைகள், தோல் உற்பத்திகள் | - | - | - | - | - | - | - |
| 3. மர, மர உற்பத்திகள் | 93.2 | 100.0 | 93.9 | 99.7 | 168.1 | 6.2 | 68.6 |
| 4. தாளும் தாள் உற்பத்திகளும் | 111.7 | 100.0 | 74.3 | 38.2 | 29.6 | -48.6 | -22.4 |
| 5. இரசாயனம், பெற்றோலியம், இறப்பர், பிளாத்திக்கு உற்பத்திகள் | 113.1 | 100.0 | 97.8 | 83.8 | 104.2 | -14.3 | 24.4 |
| பெற்றோலிய உற்பத்திகள் | 113.1 | 100.0 | 98.3 | 84.4 | 104.9 | -14.1 | 24.3 |
| 6. உலோகமல்லாக் கனிப்பொருள் உற்பத்திகள் | 144.7 | 100.0 | 54.7 | 27.0 | 31.3 | -50.1 | 15.9 |
| 7. அடிப்படை உலோக உற்பத்திகள் | - | - | - | - | - | - | |
| 8. உருவமைக்கப்பட்ட உலோக உற்பத்திகள் பொறிகளும் போக்குவரத்துக் கருவிகளும் | - | - | - | - | - | - | |
| எல்லா வகைகளும் | 90.5 | 100.0 | 91.8 | 78.0 | 96.8 | -15.0 | 24.1 |
| பெற்றோலிய உற்பத்திகள் தவிர்ந்தவை | 97.6 | 100.0 | 51.1 | 73.3 | 45.2 | -26.8 | -20.8 |

(அ) தற்காலிகமானவை.

மூலம்: இலங்கை மத்திய வங்கி.


சிறந்ததரத்திலான கரும்பு கிடைக்கக் கூடியதாக இருந்தமையே காரணமாகும். வரையறுக்கப்பட்ட லங்கா பொசுபேட்டின் வெளியீடு 16 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தமைக்கு சாதகமான வானிலை நிலைமைகள் மற்றும் பெரும்பாலான பெருந்தோட்டப் பயிர்களுக்கு சார்பு ரீதியில் உயர்ந்த விலைகள் பெறப்பட்டமை என்பனவற்றின் விளைவாக உயர்ந்த வளமாக்கிப் பாவனை காணப்பட்டமையே காரணமாகும். வரையறுக்கப்பட்ட இலங்கை இறப்பர் தயாரிப்புக் கூட்டுத்தாபனம் 1999இன் இறுதிப் பகுதியில் பேல் கிறேப் உற்பத்தியை நிறுத்தியதுடன் ஏற்றுமதிக்கான அச்சில் வார்க்கப்பட்ட உற்பத்திகள், ஈருருளி ரயர்கள், மற்றும் ரியூப்புக்கள் மற்றும் முச்சில்லு வண்டிக்கான ரயர்கள் போன்ற இறுதி நுகர்வுப் பொருட்களின் உற்பத்திக்கு வசதியளிக்கும் பொருட்டு இதன் தொழிற்சாலைகள் சிலவற்றை மாற்றியமைத்துக் கொண்டது. இத் தொழிற்சாலைகளில் ஒன்று 2000ஆம் ஆண்டு சனவரியில் வர்த்தக உற்பத்தியைத் தொடங்கியதுடன் எஞ்சியவை தற்பொழுது பரீட்சார்த்த உற்பத்தியைத் தொடங்கியுள்ளன.

2000ஆம் ஆண்டின் இரண்டாமரைப் பகுதியில் முக்கிய உப்பு தயாரிக்கப்படும் பிரதேசங்களில் நிலவிய மழைக்கால நிலைமையானது இவ்வாண்டின் உப்பு உற்பத்தியை மிக மோசமாகப் பாதித்தது. இதன் விளைவாக வரையறுக்கப்பட்ட லங்கா சோல்டின் வெளியீடு இவ்வாண்டில் 25 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. இறக்குமதி செய்யப்பட்ட தாள்களின் தீவிரமான போட்டி, மற்றும் மூலப் பொருட்களின் பற்றாக்குறை என்பனவற்றின் காரணமாக வரையறுக்கப்பட்ட தேசிய தாள் கம்பனியின் வெளியீடு தொடர்ந்தும் வீழ்ச்சியடைந்தது. தற்பொழுது கழிவுத்தாள்கள் இந்தியாவிற்கு அதிகளவில் ஏற்றுமதி செய்யப்படுவதனால் கழிவுத் தாள்களை அதன் முக்கிய மூலமாகப் பயன்படுத்தும் வாழைச்சேனை தாள் ஆலை, மூலப் பொருள் பற்றாக்குறைப் பிரச்சனையை தற்பொழுது எதிர்நோக்குகிறது.

### 4.3 கூட்டிய பெறுமதியும் இயலளவுப் பயன்பாடும்

2000ஆம் ஆண்டில் பெயரளவு நியதிகளில் கைத்தொழில் துறையின் கூட்டப்பட்ட பெறுமதி 16.8 சதவீதத்தினால் அதிகரித்து உண்மை நியதிகளில் கூட்டப்பட்ட பெறுமதியின் வளர்ச்சி 11 சதவிதம் என மதிப்பிடப்பட்டது. உற்பத்தியின் மொத்தப் பெறுமதியின் விகிதமாக கூட்டப்பட்ட பெறுமதி 1999இன் 36.0 சதவீதத்திலிருந்து 2000ஆம் ஆண்டில் 36.2 சதவீதத்திற்கு அதிகரித்தது. நவீன தொழில்நுட்பங்களின் அறிமுகம் மற்றும் மூலப் பொருட்களின் சிக்கனமான பயன்பாடு, கழிவுகளைக் குறைத்தல் மற்றும் கழிவுப் பொருட்களின் மீளப்பயன்படுத்தல், செலவினைக் குறைப்பதற்கான வலுவைச் சேமிக்கும் முறைகள் போன்ற தயாரிப்பாளர்களினால் பின்பற்றப்பட்ட பல்வேறு வழிமுறைகள் என்பனவற்றின் காரணமாக கைத்தொழில்துறையின் மொத்த உற்பத்தியாக்கத்தில் ஏற்பட்ட மேம்பாடு கூட்டப்பட்ட பெறுமதியில் நன்மை பயக்கும் தாக்கமொன்றினைக் கொண்டிருந்தது. எனினும் குறிப்பாக ஆண்டின் பிற்பகுதியில் இறக்குமதி செய்யப்பட்ட மூலப் பொருட்களின் செலவிலும் வலு மற்றும் எரிபொருள் செலவுகளிலும் ஏற்பட்ட

**வரைபடம் 4.5**
**கைத்தொழில் உற்பத்தியின் கூட்டப்பட்ட சதவீதப் பெறுமதி - 2000**




அதிகரிப்புக்கள் கூட்டிய பெறுமதியின் உள்ளார்ந்த வளர்ச்சியை ஓரளவுக்குக் குறைத்தன. 2000ஆம் ஆண்டில் கூட்டப்பட்ட பெறுமதி விகிதம் கைத்தொழில் வகைகளான புடவை அணியும் ஆடைகள் மற்றும் தோல் உற்பத்திகள், இரசாயனம் இறப்பர் மற்றும் பிளாத்திக்கு உற்பத்திகள், உலோகமல்லாக் கனிப்பொருள் உற்பத்திகள் என்பனவற்றில் அதிகரித்தது. கூட்டப்பட்ட பெறுமதி விகிதத்தில் குறைப்புக்கள் உணவு, குடிபானம், புகையிலை, உருவமைக்கப்பட்ட உலோக உற்பத்திகள் தாள் மற்றும் தாள் உற்பத்திகள், மற்றும் மர உற்பத்திகள் போன்ற கைத்தொழில் வகைகளில் அவதானிக்கப்பட்டது. பெறுமதி கூட்டப்பட்ட விகிதங்கள் உணவு குடிபானம் மற்றும் புகையிலை உற்பத்திகள், மர,மர உற்பத்திகள், உலோகமல்லாக் கனிப்பொருள் உற்பத்திகள் மற்றும் உருவமைக்கப்பட்ட உலோக உற்பத்திகள் போன்ற கைத்தொழில் வகைகளில் 45 சதவீதத்திற்கும் கூடுதலாகக் காணப்பட்டன. புடவை அணியும் ஆடைகள் மற்றும் தோல் உற்பத்திகள் வகையின் கூட்டப்பட்ட பெறுமதி விகிதம் 1999இன் 30.9 சதவீதத்திலிருந்து 2000ஆம் ஆண்டில் 32.2 சதவீதத்திற்கு அதிகரித்தது. 23.8 சதவீதத்தினைக் கொண்ட மிகக் குறைந்த தொகையிலான பெறுமதி கூட்டப்பட்ட விகிதம் இரசாயனம், இறப்பர் மற்றும் பிளாத்திக்கு கைத்தொழில் வகையில் பதிவு செய்யப்பட்டது.

முதலீட்டுச் சபையல்லாக் கைத்தொழில்களின் நிறுவப்பட்ட இயலளவு 2000ஆம் ஆண்டில் 4.6 சதவீதத்தினால் மேலும் அதிகரித்தமைக்கு முன்னேற்றங்கண்ட தொழில்நுட்ப ஊக்குவிப்புத் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட இறை ஊக்குவிப்புக்கள், புடைவ மீளமைப்பு நிகழ்ச்சித்திட்டம் மற்றும் பொறிகளின் இறக்குமதிக்கான குறைந்த தேசிய பாதுகாப்புத் தீர்வை என்பனவற்றினால் வழங்கப்பட்ட வசதிகளே காரணமாகும். ஏற்றுமதி விடயங்களுக்கு சிறந்த விலைகள் பெறப்பட்டமை, வளர்ந்து செல்லும் சந்தை, ஆண்டின் முன்னரைப்பகுதியில் நிலவிய ஒப்பீட்டு ரீதியில் குறைந்த வட்டி வீதங்கள் என்பனவும் ஏற்கனவேயிருந்த இயலளவு விரிவடைய உதவின. இயலளவு விரிவாக்கம், உணவு குடிபானம் புகையிலை (3.9 சதவீதம்) புடவை அணியும் ஆடைகள் மற்றும் தோல் உற்பத்திகள் (5.8 சதவீதம்) தாள் மற்றும் தாள் உற்பத்திகள் (4.8 சதவீதம்) உருவாக்கப்பட்ட உலோக உற்பத்திகள் (4.2 சதவீதம்) ஆகிய கைத்தொழில் வகைகளில் சார்புரீதியில் உயர்வாகக் காணப்பட்டன. கைத்தொழில்துறையில் பொதுவாக இயலளவுப் பயன்பாடு 1999இன் 83 சதவீதத்திலிருந்து 2000ஆம் ஆண்டில் 85 சதவீதத்திற்கு அதிகரித்தது.

**அட்டவணை 4.5**
**கைத்தொழில்களின் கூட்டிய பெறுமதி**
(நடைமுறை விலைகளில்)

| வகை | ரூபா மில்லியன் | | | | | சதவீத மாற்றம் | |
|---|---|---|---|---|---|---|---|
| | 1996 | 1997 | 1998 | 1999 | 2000(அ) | 1999 | 2000(அ) |
| 1. உணவு, குடிபானங்கள், புகையிலை | 32,891 | 35,515 | 40,452 | 44,503 | 49,031 | 10.0 | 10.2 |
| 2. புடவைகள், அணியும் ஆடைகள், தோல் உற்பத்திகள் | 33,798 | 43,351 | 50,352 | 58,353 | 69,451 | 16.4 | 25.7 |
| 3. மர, மர உற்பத்திகள் | 1,250 | 1,258 | 1,313 | 1,390 | 1,554 | 5.9 | 11.8 |
| 4. தாளும் தாள் உற்பத்திகளும் | 2,580 | 2,633 | 2,578 | 2,664 | 2,808 | 3.3 | 5.4 |
| 5. இரசாயனம், பெற்றோலியம், இறப்பர், பிளாத்திக்கு உற்பத்திகள் | 8,957 | 10,745 | 14,274 | 13,832 | 17,771 | -3.1 | 28.5 |
| 6. உலோகமல்லாக் கனிப்பொருள் உற்பத்திகள் | 10,537 | 11,600 | 12,463 | 13,817 | 14,240 | 10.9 | 3.1 |
| 7. அடிப்படை உலோக உற்பத்திகள் | 450 | 598 | 710 | 777 | 959 | 9.4 | -23.4 |
| 8. உருவமைக்கப்பட்ட உலோக உற்பத்திகள் பொறிகளும் போக்குவரத்துக் கருவிகளும் | 4,809 | 5,924 | 6,779 | 7,367 | 7,714 | 8.7 | 4.7 |
| 9. வேறு எங்கும் குறிப்பிடப்படாத உற்பத்திகள் | 2,763 | 3,157 | 3,426 | 3,799 | 3,965 | 10.9 | 4.4 |
| மொத்தம் | 98,035 | 114,781 | 132,347 | 146,502 | 167,494 | 10.8 | 16.8 |

(அ) தற்காலிகமானவை.

மூலங்கள்: இலங்கை மத்திய வங்கி.

## 4.4 உற்பத்திச் செலவு, இலாபத் தன்மை மற்றும் தொழில்நிலை

முதலீட்டுச் சபையல்லா நிறுவனங்களின் சராசரித் தொழிற்சாலை இலாப விகிதம் (இலாபம்/ உற்பத்தியின் தொழிற்சாலைப் பெறுமதி) 1999இன் 12.2 சதவீதத்திலிருந்து 2000ஆம் ஆண்டில் 13.7 சதவீதத்திற்கு அதிகரித்தது. இலாபத் தன்மையானது 2000ஆம் ஆண்டில் அளவீடு செய்யப்பட்ட 480 நிறுவனங்களிலிருந்து தரவுகளைப் பயன்படுத்தி மதிப்பிடப்பட்டது. இலாபத்தன்மையை மேம்படுத்துவதற்கு உதவிய பயனுள்ள காரணிகளாக கழிவுக் குறைப்பு, தொழிற்படு மூலதனத்தின் சிறந்த முகாமைத்துவம், வலுச் சேமிப்பு, மூலப் பொருட்களின் உச்சப்பயன்பாடு, தயாரிப்பாளர்களினால் வெளியில் உற்பத்தி செய்துகொள்ளப்பட்டமை என்பன காணப்பட்டன. பயன்மிக்க விலையிடல் கொள்கைகள் பன்னாட்டுச் சந்தையில் விலைகள் முன்னேற்றங்கண்டமை என்பன மேம்பட்ட இலாபத்தன்மைக்கு மேலும் உந்து சக்தியை வழங்கின. ஆண்டின் பின்னரைப்பகுதியில் இறக்குமதி செய்யப்பட்ட மூலப் பொருட்கள், எரிபொருள், மின்வலு வாயு மற்றும் தொலைபேசிக் கட்டணம் என்பனவற்றின் செலவுகளில் அதிகரிப்புக் காணப்பட்டபோதும் இது எய்தப்பெற்றது. பால் உற்பத்திகள் இரசாயனங்கள், வளமாக்கி தாள் மற்றும் தாள் உற்பத்திகளைக் கொண்ட கைத்தொழில் வகைகளுள் உற்பத்திச் செலவு அதிகரிப்புக்கள் முனைப்பாகக் காணப்பட்டமைக்கு 2000ஆம் ஆண்டில் பன்னாட்டுச் சந்தையில் மூலப் பொருட்களின் விலைகள் அதிகரித்தமையும் இலங்கை ரூபா 9.9 சதவீதத்தினால் தேய்வடைந்தமையுமே காரணங்களாகும். முதலீட்டுச்சபையல்லா கைத்தொழில் துறையின் இலாபத்தன்மை புடவைகள், அணியும், ஆடைகள் மற்றும் தோல் உற்பத்தி வகையில் 19.8 சதவீதத்திலிருந்தான வீச்சினையும் அடிப்படை உலோக உற்பத்திகள் வகையில் 10.2 சதவீதத்திலிருந்தான வீச்சினையும் கொண்டிருந்தன. இவ்வாண்டுக் காலத்தில் சவர்க்காரம், அழுக்குநீக்கிகள், உணவு, ஆடைகள், உருவமைக்கப்பட்ட உலோகம், ஏற்றுமதிசார்ந்த மின்னியல் பொருத்துக்கள், இறப்பரை அடிப்படையாகக் கொண்ட கைத்தொழில்கள் ஆயுர்வேத மருந்துக்கள், உணவு மற்றும் தேயிலை பதனிடல் மற்றும் புகையிலை பதனிடல் ஆகிய துணைத் துறைகளின் இலாபத்தன்மை குறிப்பிடத்தக்களவிற்கு அதிகரித்தது.

முழுமையான நியதிகளில் கைத்தொழில்துறையின் கூலிச் செலவு 2000ஆம் ஆண்டில் 10.9 சதவீதத்தினால் அதிகரித்து வெளியீட்டில் ஏற்பட்ட 6.6 சதவீதமான வளர்ச்சியையும் தொழிற்படையில் ஏற்பட்ட 2.9 சதவீதமான வளர்ச்சியையும் தொழிலாளர் உற்பத்தியாக்கத்தில் ஏற்பட்ட 3.6 சதவீதமான வளர்ச்சியையும் பிரதிபலித்தது. மொத்த உற்பத்திச் செலவில் கூலிச் செலவின் பங்கு 1999இன் 12.2 சதவீதத்திலிருந்து 2000ஆம் ஆண்டில் 12.4 சதவீதத்திற்கு சிறிதளவு அதிகரித்தது. மொத்த உற்பத்திச் செலவின் சதவீதமாகக் கூலிச் செலவு புடவைகள், அணியும்

**அட்டவணை 4.6**
**முதலீட்டுச் சபையல்லா தனியார் துறைக் கைத்தொழில்களின் தொழிற்சாலை இலாப விகிதங்கள் (அ)**

| வகை | மொத்த உற்பத்திச் செலவு (ரூ.மில்) | | மொத்த உற்பத்திப் பெறுமதி (ரூ.மில்) | | தொழிற்சாலை இலாப விகிதம் (வீதம்) | |
|---|---|---|---|---|---|---|
| | 1999 | 2000 | 1999 | 2000(து) | 1999 | 2000(து) |
| 1. உணவு, குடிபானங்கள், புகையிலை | 49,660 | 54,444 | 56,240 | 62,651 | 11.7 | 13.1 |
| 2. புடவைகள், அணியும் ஆடைகள், தோல் உற்பத்திகள் | 15,873 | 17,298 | 19,240 | 21,568 | 17.5 | 19.8 |
| 3. மர, மர உற்பத்திகள் | 1,018 | 1,117 | 1,150 | 1,280 | 11.5 | 12.7 |
| 4. தாளும் தாள் உற்பத்திகளும் | 3,440 | 3,796 | 3,870 | 4,303 | 11.1 | 11.8 |
| 5. இரசாயனம், பெற்றோலியம், இறப்பர், பிளாத்திக்கு உற்பத்திகள் | 17,679 | 19,670 | 20,065 | 22,714 | 11.9 | 13.4 |
| 6. உலோகமல்லாக் கனிப்பொருள் உற்பத்திகள் | 14,807 | 15,469 | 16,254 | 17,245 | 8.9 | 10.3 |
| 7. அடிப்படை உலோக உற்பத்திகள் | 1,169 | 1,319 | 1,321 | 1,469 | 11.5 | 10.2 |
| 8. உருவமைக்கப்பட்ட உலோக உற்பத்திகள் பொறிகளும் போக்குவரத்துக் கருவிகளும் | 7,576 | 8,304 | 8,531 | 9,589 | 11.2 | 13.4 |
| 9. வேறு எங்கும் குறிப்பிடப்படாத உற்பத்திகள் | 3,257 | 3,433 | 3,722 | 3,875 | 12.5 | 11.4 |
| மொத்தம் | 114,479 | 124,850 | 130,393 | 144,694 | 12.2 | 13.7 |

(அ) 480 முதலீட்டுச்சபையல்லாத் தனியார்துறை நிறுவனங்களிலிருந்து பெறப்பட்ட தகவல்களை அடிப்படையாகக் கொண்டது.
(ஆ) தற்காலிகமானவை.

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

ஆடைகள் மற்றும் தோல் உற்பத்திகள், இரசாயன இறப்பர் மற்றும் பிளாத்திக்கு உற்பத்திகள் தாள் மற்றும் தாள் உற்பத்திகள் ஆகிய வகைகளில் அதிகரித்து தொழிற்படையில் ஏற்பட்ட அதிகரிப்பினையும் உயர்ந்த உற்பத்தியையும் பிரதிபலித்தன. கூலிப்பங்கில் வீழ்ச்சி உருவமைக்கப்பட்ட உலோகம் மற்றும் உலோகமல்லா கனிப்பொருள் உற்பத்தி வகைகளில் அவதானிக்கப்பட்டது. புடவைகள் அணியும் ஆடைகள், தோல் உற்பத்திகள், மர மற்றும் மர உற்பத்திகள் மற்றும் உலோகமல்லா கனிப்பொருள் உற்பத்திகளைக் கொண்ட கைத்தொழில் வகைகளில் தொழிலாளர் செலவின் பங்கு 15 சதவீதத்திற்கும் கூடுதலாகக் காணப்பட்டது. உணவு, குடிபானமும் புகையிலையும் மற்றும் உருவமைக்கப்பட்ட உலோக உற்பத்திகளைக் கொண்ட கைத்தொழில் வகைகளின் தொழிலாளர் செலவு சார்புரீதியில் குறைவாகக் காணப்பட்டது. ஆண்டின் முதலரைப்பகுதியில் நிலவிய சார்புரீதியில் குறைவான பணவீக்க வீதம் சம்பள அதிகரிப்புக்களுக்கான அழுத்தங்களைக் குறைத்ததன்மூலம் கூலிச் செலவில் எந்தவொரு மிகையான வளர்ச்சியும் கட்டுப்படுத்தப்பட்டது. கம்பனியின் மொத்தக் கூலிச் செலவினைக் குறைப்பதற்காக பல கம்பனிகள் வெளியிலிருந்து உற்பத்திசெய்துவரும் உற்பத்தியைப் பின்பற்றின. கடுமையான தொழிலாளர் சட்டங்களும், பருவகால உற்பத்தித் தேவைப்பாடுகளும், ஒப்பந்த ரீதியான ஆட்சேர்ப்புக்களுக்கும் அமைய தொழிலாளர்களைப் பெற தயாரிப்பாளர்களைத் தூண்டியமையும் கூலிச் செலவின் மேல்நோக்கிய அழுத்தத்தினை மேலும் குறைத்தன.

முழுமையான நியதிகளில் முதலீட்டுச்சபையல்லா கைத்தொழில்துறையில் மொத்த வலுச் செலவு 2000ஆம் ஆண்டில் 16.1 சதவீதத்தினால் அதிகரித்தது. மொத்த உற்பத்திச் செலவின் சதவீதமாக வலுச்செலவு முன்னைய ஆண்டின் 4.5 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2000ஆம் ஆண்டில் 4.9 சதவீதத்தினால் அதிகரித்தது. அதிகரித்த மின்வலுப்பயன்பாடானது இயலளவுப் பயன்பாட்டில் விரிவாக்கம் மின்வலு, வாயு மற்றும் பெற்றோலிய விலைகளில் மேல் நோக்கிய சீராக்கம் என்பனவற்றுடன் சேர்ந்து 2000ஆம் ஆண்டில் வலுச் செலவின் அதிகரிப்பிற்குப் பொறுப்பாக இருந்தது. 2000ஆம் ஆண்டில் பெரும்பாலான கைத்தொழில் வகைகளில் மொத்த உற்பத்திச் செலவில் மின்வலுச் செலவின் பங்கு அதிகரித்தது. உலோகமல்லா கனிப்பொருள் உற்பத்தி வகையில் மொத்த உற்பத்திச் செலவில் வலுவின் பங்கு 1999இன் 15.8 சதவீதத்திலிருந்து 17.1 சதவீதத்திற்கு அதிகரித்தமைக்கு உலையெண்ணெய், வாயு மற்றும் மின்வலு விலைகளில் ஏற்பட்ட அதிகரிப்பே காரணமாகும். இவ்வகையில் சீமெந்து மற்றும் மட்பாண்ட கைத்தொழில்களின் உற்பத்தி செலவில் வலுச் செலவு குறிப்பிடத்தக்க விகிதத்தினைக் காட்டுகின்றது. உணவு, குடிபானம் மற்றும் புகையிலை, தாள் மற்றும் தாள் உற்பத்திகள் வகையில் வலுச் செலவின் பங்கு குறைவாகக் காணப்பட்டது. மொத்த மொத்த உற்பத்திச் செலவின் சதவீதமாக வட்டிச் செலவு முன்னைய ஆண்டின் 2.9 சதவீதத்திலிருந்து 2000ஆம் ஆண்டில் 2.7 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. தொழிற்படு மூலதனத்தின் வினைத்திறன்மிக்க முகாமைத்துவத்தின் காரணமாக வங்கிகளிலிருந்தான குறுங்காலக் கடன்களின் குறைப்பு பல கம்பனிகளின் காசுப்பாய்ச்சலில் ஏற்பட்ட முன்னேற்றம், 2000ஆம் ஆண்டின் முன்னரைப் பகுதியில் நிலவிய ஒப்பீட்டு ரீதியில் குறைந்த வட்டிவீதம் என்பன கைத்தொழில்துறையின் மொத்த வட்டிச் செலவினைக் குறைத்தன. மரம் மற்றும் மர உற்பத்திகள், உலோகமல்லாக் கனிப்பொருள் உற்பத்திகள், புடவை, அணியும் ஆடைகள் மற்றும் உற்பத்திகள் தாள் மற்றும் தாள் உற்பத்திகள் இரசாயனம், இறப்பர் மற்றும் பிளாத்திக்கு உற்பத்திகள் மற்றும் உருவமைக்கப்பட்ட உலோக உற்பத்திகள் போன்ற கைத்தொழில் வகைகளில் வட்டிச் செலவுக் குறைப்பானது மிக முனைப்பாகக் காணப்பட்டது.

## கைத்தொழிலில் தொழிலாளர் உற்பத்தித் திறன்

2000ஆம் ஆண்டில் மனித மணித்தியால மொன்றிற்கான கூட்டப்பட்ட உண்மைப் பெறுமதியில் ஏற்படும் மாற்றங்களின் அடிப்படையில் மதிப்பிடப்பட்ட தொழிலாளர் உற்பத்தித்திறன் முதலீட்டுச்சபையல்லா 480 முயற்சிகளில் 3.6 சதவீதத்தினால் அதிகரித்தன. முன்னைய ஆண்டில் தொழிலாளர் உற்பத்தித் திறனின் வளர்ச்சி 1.9 சதவீதமாக இருந்தது. மேம்பட்ட தொழிலாளர் உற்பத்தித் திறன் பல கைத்தொழில் வகைகளில் காணப்பட்டது. தொழிலாளர் உற்பத்தித் திறன் உணவு குடிபானம் புகையிலை (4.0 சதவீதம்) புடவைகள் அணியும் ஆடைகள் மற்றும் தோல் உற்பத்திகள் (3.1 சதவீதம்) இரசாயனம் இறப்பர் மற்றும் பிளாத்திக்கு (6.7 சதவீதம்) உருவமைக்கப்பட்ட உலோகம் (4.4 சதவீதம்) ஆகிய கைத்தொழில் வகைகளில் குறிப்பிடத்தக்களவில் முன்னேற்றம் கண்டது. அண்மைய ஆண்டுகளில் தன்னியக்க முறைகள் நிறுவப்பட்டமை மற்றும் நவீன தொழில்நுட்ப முறைகள் பின்பற்றப்பட்டமை என்பன மனிதவறுகளை குறைத்தமை, குறைந்த விரயம், ஆளணி ஊக்குவிப்பு மேம்பட்டமை என்பனவற்றினூடாக தொழிலாளர் உற்பத்தித் திறனை மேம்படுத்த இயலுமாக இருந்தது. சிறந்த முகாமைத்துவ தொழில்நுட்பங்களை பின்பற்றியமை தேர்ச்சி அபிவிருத்தியில் பயிற்சி, மிகையான தொழிலாளர்களின் குறைப்பு என்பனவும்

அட்டவணை 4.7
முதலீட்டுச் சபையல்லா தனியார் துறைக் கைத்தொழில்களின் உள்நாட்டுச் செலவு அமைப்பு (அ)
(மொத்த உற்பத்திச் செலவின் சதவீதமாக)


| வகை | உள்நாட்டுச் செலவு (சதவீதம்) | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | வலுவும் எரிபொருளும் | | கூலி | | மூலப்பொருட்கள் | | வட்டி | |
| | 1999 | 2000(ஆ) | 1999 | 2000(ஆ) | 1999 | 2000(ஆ) | 1999 | 2000(ஆ) |
| 1. உணவு, குடிபானங்கள், புகையிலை | 2.3 | 2.4 | 9.2 | 9.3 | 41.2 | 39.5 | 2.0 | 2.0 |
| 2. புடவைகள், அணியும் ஆடைகள், தோல் உற்பத்திகள் | 2.9 | 3.2 | 16.5 | 16.9 | 12.9 | 15.1 | 2.6 | 2.6 |
| 3. மர, மர உற்பத்திகள் | 8.2 | 8.1 | 16.2 | 15.9 | 36.8 | 37.1 | 4.8 | 4.2 |
| 4. தாளும் தாள் உற்பத்திகளும் | 2.3 | 2.5 | 12.8 | 13.3 | 16.0 | 16.9 | 4.8 | 4.2 |
| 5. இரசாயனம், பெற்றோலியம், இறப்பர், பிளாத்திக்கு உற்பத்திகள் | 4.4 | 4.8 | 12.7 | 13.0 | 27.1 | 29.3 | 3.8 | 3.4 |
| 6. உலோகமல்லாக் கனிப்பொருள் உற்பத்திகள் | 15.8 | 17.1 | 16.4 | 16.3 | 21.5 | 21.8 | 4.2 | 3.8 |
| 7. அடிப்படை உலோக உற்பத்திகள் | 7.6 | 7.9 | 10.6 | 10.2 | 33.8 | 34.2 | 3.9 | 3.2 |
| 8. உருவமைக்கப்பட்ட உலோக உற்பத்திகள் பொறிகளும் போக்குவரத்துக் கருவிகளும் | 2.6 | 2.9 | 11.2 | 11.1 | 23.1 | 24.5 | 3.7 | 3.2 |
| 9. வேறு எங்கும் குறிப்பிடப்படாத உற்பத்திகள் | 3.0 | 4.1 | 14.1 | 14.5 | 34.5 | 34.5 | 3.3 | 3.0 |
| மொத்தம் | 4.5 | 4.9 | 12.2 | 12.4 | 30.3 | 30.4 | 2.9 | 2.7 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

(அ) 480 முதலீட்டுச் சபையல்லாத் தனியார்துறை நிறுவனங்களிலிருந்து பெறப்பட்ட தகவல்களை அடிப்படையாகக் கொண்டது.
(ஆ) தற்காலிகமானவை.

தொழிலாளர் உற்பத்தித்திறன் மேம்படுவதற்கு உதவின. தொழிற்சாலைகளில் வேலைச் சூழலிலும் குறிப்பாக ஆடை, உணவு, குடிபானம் மற்றும் புகையிலைக் கைத்தொழில்களில் காணப்பட்ட இலவச மருத்துவ கவனிப்பு உணவு மற்றும் போக்குவரத்து வசதிகள் போன்ற நலன்புரி வசதிகளிலும் ஏற்பட்ட முன்னேற்றங்கள் தொழிலாளர் உற்பத்தித் திறனில் ஏற்பட்ட மேம்பாட்டின்மீது பயன்மிக்க தாக்கத்தினைக் கொண்டிருந்தன.

வரைபடம் 4.6
கைத்தொழிலில் தொழிலாளர் உற்பத்தியாக்கம் - 1995=100




அட்டவணை 4.8
முதலீட்டுச் சபையல்லா தனியார் துறையில் தொழிலாளர் உற்பத்தித் திறன் குறிகாட்டி (அ)

| வகை | 1999 | 2000 (ஆ) | சதவீத மாற்றம் |
|---|---|---|---|
| 1. உணவு, குடிபானங்கள், புகையிலை | 117.1 | 121.8 | 4.0 |
| 2. புடவைகள், அணியும் ஆடைகள், தோல் உற்பத்திகள் | 109.0 | 112.4 | 3.1 |
| 3. மர, மர உற்பத்திகள் | 101.4 | 101.7 | 0.3 |
| 4. தாளும் தாள் உற்பத்திகளும் | 100.0 | 101.2 | 1.2 |
| 5. இரசாயனம், பெற்றோலியம், இறப்பர்பிளாத்திக்கு உற்பத்திகள் | 113.0 | 120.6 | 6.7 |
| 6. உலோகமல்லாக் கனிப்பொருள் உற்பத்திகள் | 103.2 | 104.2 | 1.0 |
| 7. அடிப்படை உலோக உற்பத்திகள் | 98.0 | 99.3 | 1.3 |
| 8. உருவமைக்கப்பட்ட உலோக உற்பத்திகள் பொறிகளும் போக்குவரத்துக் கருவிகளும் | 112.1 | 117.0 | 4.4 |
| 9. வேறு எங்கும் குறிப்பிடப்படாத உற்பத்திகள் | 100.2 | 101.2 | 1.0 |
| மொத்தம் | 108.0 | 111.9 | 3.6 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

(அ) 480 முதலீட்டுச் சபையல்லாத் தனியார்துறை நிறுவனங்களிலிருந்து பெறப்பட்ட தகவல்களை அடிப்படையாகக் கொண்டது.
(ஆ) தற்காலிகமானவை

## தொழில்நிலை

கைத்தொழில்துறையின் தொழில்நிலை 2000ஆம் ஆண்டில் 9.9 சதவீதத்தினால் அதிகரித்து கூடியளவு தொழில் வாய்ப்புக்கள் முக்கியமாக ஏற்றுமதி சார்ந்த முதலீட்டுச் சபைக் கைத்தொழில்களில் உருவாக்கப்பட்டமையைப் பிரதிபலித்தது. இவ்வாண்டில் முதலீட்டுச்சபை மற்றும் முதலீட்டுச் சபையல்லாக் கைத் தொழில்களின் தொழில்நிலை முறையே 12.5 சதவீதத்தினாலும் 2.9 சதவீதத்தினாலும் உயர்வடைந்தன.

2000ஆம் ஆண்டில் முதலீட்டுச் சபைக் கைத்தொழில்கள் 40,790 புதிய தொழில் வாய்ப்புக்களை உருவாக்கின. புடவை, அணியும் ஆடைகள் மற்றும் தோல் உற்பத்தி வகை மட்டும் 25,735 தொழில் வாய்ப்புக்களை உருவாக்கிய வேளையில், இரசாயனம், இறப்பர், மற்றும் பிளாத்திக்கு கைத்தொழில்கள் இவ்வாண்டுக் காலத்தில் 5,441 புதிய தொழில் வாய்ப்புக்களை உருவாக்கின. ஐம்பது ஆடைத் தொழிற்சாலை நிகழ்ச்சித் திட்டம், சிறு ஏற்றுமதிப் பதனிடல் வலயம், மற்றும் கைத்தொழில் பூங்கா/ கைத்தொழில் பேட்டை நிகழ்ச்சித் திட்டங்களின் கீழ் நிறுவப்பட்ட புதிய தொழிற்சாலைகள் ஆகியன இத் தொழில் வாய்ப்புக்களில் பெரும்பாலானவற்றை உருவாக்கின. ஏற்றுமதிப் பதனிடல் வலயங்களிலும், நகரப் பிரதேசங்களிலும் உள்ள ஆடைத் தயாரிப்பாளர்கள் தேர்ச்சி பெற்ற மற்றும் தேர்ச்சி பெறாத தொழிலாளர் பற்றாக் குறையின் காரணமாக தமது தொழிற்சாலைகளிலுள்ள வெற்றிடங்களை நிரப்ப முடியாதவர்களாக இருந்தனர்.

**அட்டவணை 4.9**
**தனியார் துறைக் கைத்தொழில்களில் தொழில் வாய்ப்பு (அ)**

| வகை | 1999 | 2000 (ஆ) | சதவீத மாற்றம் |
|---|---|---|---|
| (i) முதலீட்டுச் சபையல்லா தனியார்துறை | | | |
| 1. உணவு, குடிபானங்கள், புகையிலை | 25,400 | 25,210 | -0.7 |
| 2. புடவைகள், அணியும் ஆடைகள், தோல் உற்பத்திகள் | 30,540 | 31,998 | 4.8 |
| 3. மர, மர உற்பத்திகள் | 1,920 | 2,015 | 4.9 |
| 4. தாளும் தாள் உற்பத்திகளும் | 5,490 | 5,772 | 5.1 |
| 5. இரசாயனம், பெற்றோலியம், இறப்பர், பிளாத்திக்குஉற்பத்திகள் | 25,400 | 26,240 | 3.3 |
| 6. உலோகமல்லாக் கனிப்பொருள் உற்பத்திகள் | 11,882 | 11,815 | -0.6 |
| 7. அடிப்படை உலோக உற்பத்திகள் | 1,078 | 1,093 | 1.4 |
| 8. உருவமைக்கப்பட்ட உலோக உற்பத்திகள், பொறிகளும் போக்குவரத்துக் கருவிகளும் | 11,511 | 12,390 | 7.6 |
| 9. வேறு எங்கும் குறிப்பிடப்படாத உற்பத்திகள் | 5,015 | 5,120 | 2.1 |
| உப மொத்தம் | 118,236 | 121,653 | 2.9 |
| (ii) முதலீட்டுச் சபை தொழில்முயற்சிகள் | 327,059 | 367,849 | 12.5 |
| மொத்தம் | 445,295 | 489,502 | 9.9 |

மூலங்கள்: இலங்கை முதலீட்டுச் சபை.
இலங்கை மத்திய வங்கி.

(அ) தற்காலிகமானவை.
(ஆ) 480 முதலீட்டுச் சபையல்லாத் தனியார்துறை நிறுவனங்களிலிருந்து பெறப்பட்ட தகவல்களை அடிப்படையாகக் கொண்டது.


முதலீட்டுச்சபையல்லாத் துறையின் தொழில்நிலை உருவாக்கம் புடைவகள், அணியும் ஆடைகள் மற்றும் தோல் உற்பத்திகள், மரம் மற்றும் மர உற்பத்திகள் மற்றும் உருவமைக்கப்பட்ட உலோக உற்பத்திகள் ஆகிய கைத்தொழில் வகைகளில் உயர்வாகக் காணப்பட்டது. ஆடைக் கைத்தொழில்களின் தொழில்நிலை 4.8 சதவீதத்தினால் அதிகரித்து, இயலளவிலும், இயலளவுப் பயன்பாட்டிலும் ஏற்பட்ட விரிவாக்கத்தில் பிரதிபலித்தது. இரசாயனம், இறப்பர் மற்றும் பிளாத்திக்கு உற்பத்தி வகையில் வளமாக்கிக் கலவைப் பொறிகள், பிளாத்திக்கு, இரசாயனம் மற்றும் இறப்பர் உற்பத்திக் கைத்தொழில்களில் மிகக் கூடுதலான தொழில் வாய்ப்புக்கள் உருவாக்கப்பட்டன. உருவமைக்கப்பட்ட உலோக உற்பத்திக் கைத்தொழிலிள் தொழில்நிலை 7.6 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தமைக்கு இக் கைத்தொழிலின் துணைத்துறைகளான பேருந்து உடற்கோப்பு மின்வயர்கள் மற்றும் மின்வலுப்பொறி என்பனவற்றில் உயர்ந்தளவு தொழிலாளர்கள் ஈர்க்கப்பட்டமையே காரணமாகும். உணவு, குடிபானம், புகையிலை, வகைகளிலுள்ள தொழில்நிலைமை சிறிதளவு வீழ்ச்சியடைந்தமைக்கு புகையிலை மற்றும் குடிபானக் கைத்தொழில்களிலுள்ள முக்கிய தயாரிப்பாளர்களினால் அறிமுகம் செய்யப்பட்ட தன்னிச்சையான ஓய்வூதியத் திட்டமே காரணமாகும். உணவு பதனிடல் கைத்தொழிலில் தன்னியக்க முறைகளுடன் கூடிய நவீனமாக்கப்பட்ட தொழிற்சாலைகளும் இவ்வாண்டில் தொழிலாளர் தேவைகளைக் குறைக்க காரணமாயின. 2000ஆம் ஆண்டில் பழவகைகளின் பதனிடல் மற்றும் சீனித் தயாரிப்புக் கைத்தொழிலின் தொழில்நிலையிலும் சிறிதளவு வீழ்ச்சி காணப்பட்டது.

### 4.5 முதலீடு

## வெளிநாட்டு முதலீடு

முதலீட்டுச் சபையினால் தீவிரமான ஊக்குவிப்புப் பிரச்சாரங்கள் மேற் கொள்ளப்பட்டபோதும் 2000ஆம் ஆண்டில் இலங்கைக்கான வெளிநாட்டு முதலீடுகளின் உட்பாய்ச்சல் வீழ்ச்சியடைந்தது. முதலீட்டில் ஏற்பட்ட வீழ்ச்சிக்கான முக்கிய காரணமாக, 2000ஆம் ஆண்டில் காணப்பட்ட போருடன் தொடர்பான பல நிகழ்ச்சிகளின்

**வரைபடம் 4.7**
**முதலீட்டுச் சபையின் அடையப்பட்ட முதலீடுகள்**




விளைவாக முதலீட்டாளர் நம்பிக்கை இழந்து போனமை காரணமாக இருக்கக்கூடும். 2000ஆம் ஆண்டில் இலங்கையில் யுத்த நடவடிக்கை பிரகடனம் செய்யப்பட்டமையின் காரணமாக பல முதலீட்டுச் செயற்றிட்டங்களைத் தடுத்து வைத்திருந்தமையின் மூலம் முதலீட்டாளர்கள் "பொறுத்திருந்து பார்க்கும்" அணுகுமுறையினைப் பின்பற்றியிருக்கக்கூடும். பொதுத் தேர்தலால் உருவாக்கப்பட்ட நிச்சயமற்றதன்மையும் 2000ஆம் ஆண்டின் குறைந்த முதலீட்டுப் பாய்ச்சலுக்குக் காரணமாக இருந்தது.

2000ஆம் ஆண்டில் முதலீட்டுச் சபையின் கைத்தொழில்கள் பெற்ற முதலீடு 1999இன் ரூ.28,814 மில்லியனிலிருந்து 2000ஆம் ஆண்டில் ரூ.18,709 மில்லியனுக்கு 35 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. ஒப்புதலளிக்கப்பட்டு ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்ட செயற்றிட்டங்களிலுள்ள முதலீட்டுக் கடப்பாடுகளும் 2000ஆம் ஆண்டில் வீழ்ச்சியடைந்தன. வெளிநாட்டு முதலீடுகளின் ஊக்குவிப்பினை மேற்கொள்ளும் முதன்மை அரச முகவர்களாகத் தொழிற்படுகின்ற முதலீட்டுச்சபையானது முதலீட்டாளர்களைக் கவருவதற்கு கணிசமான முயற்சிகளை மேற்கொண்டது. முதலீட்டுச்சபை ஐக்கிய அமெரிக்கா, இந்தியா, ஐக்கிய இராச்சியம், சுவீடன், நோர்வே மற்றும் பிரான்சு ஆகிய நாடுகளுக்கு பல முதலீட்டு ஊக்குவிப்புக் குழுக்களை அனுப்பியது. 2000ஆம் ஆணடில் புதிய முதலீட்டு வாய்ப்புக்களைக் கண்டறிவதற்காக பல வெளிநாட்டுப் பேராளர் குழுக்களும் இலங்கைக்கு வருகை தந்தன. இப்பேராளர் குழுக்கள் ஐக்கிய இராச்சியத்தின் வர்த்தக மற்றும் கைத்தொழில் சம்மேளனத்தின் 12 உறுப்பினர்களைக் கொண்ட தூதுக்குழு, சிங்கப்பூரின் வர்த்தக அபிவிருத்திச் சபையிலிருந்தான 10 உறுப்பினர்களைக் கொண்ட தூதுக்குழு, ஐக்கிய இராச்சியத்தின் லெய்செஸ்ரர்சயர் வர்த்தக சம்மேளனத்திலிருந்தான தூதுக்குழு என்பனவற்றை உள்ளடக்கியிருந்தது. இலங்கையில் பல்வேறுபட்ட முதலீட்டுச் செயற்றிட்டங்களைத் தொடங்குவதற்கான சாத்தியங்களைப் பற்றி ஆராய்வதற்காக 2000ஆம் ஆண்டில் ஐக்கிய இராச்சியம், பெல்ஜியம், ஸ்பெயின், பிரான்சு, இத்தாலி மற்றும் இந்தியா ஆகிய நாடுகளிலுள்ள புகழ் பெற்ற கம்பனிகளிலிருந்தான பெரும் தொகை எண்ணிக்கையிலான பேராளர்கள் இலங்கைக்கு வருகை தந்தனர்.

**அட்டவணை 4.10**
**முதலீட்டுச் சபை தொழில் முயற்சிகளில் பெறப்பட்ட முதலீடுகள் (அ)**


| வகைகள் | தொழில் முயற்சிகளின் எண்ணிக்கை | | வெளிநாட்டு முதலீடு (ரூ.மில்) | | மொத்த முதலீடு (ஆ) (ரூ.மில்.) | |
|---|---|---|---|---|---|---|
| | 1999(இ) | 2000(ஈ) | 1999(இ) | 2000(ஈ) | 1999(இ) | 2000(ஈ) |
| 1. உணவு, குடிபானங்கள், புகையிலை | 147 | 141 | 5,475 | 4,301 | 11,801 | 10,612 |
| 2. புடவைகள், அணியும் ஆடைகள், தோல் உற்பத்திகள் | 417 | 439 | 18,248 | 20,463 | 28,630 | 30,779 |
| 3. மர, மர உற்பத்திகள் | 25 | 22 | 578 | 458 | 973 | 830 |
| 4. தாளும் தாள் உற்பத்திகளும் | 21 | 22 | 489 | 521 | 698 | 755 |
| 5. இரசாயனம், பெற்றோலியம், இறப்பர், பிளாத்திக்கு உற்பத்திகள் | 100 | 121 | 7,930 | 8,340 | 10,329 | 12,414 |
| 6. உலோகமல்லாக் கனிப்பொருள் உற்பத்திகள் | 63 | 61 | 4,081 | 3,581 | 6,999 | 6,631 |
| 7. உருவமைக்கப்பட்ட உலோக உற்பத்திகள் பொறிகளும் போக்குவரத்துக் கருவிகளும் | 38 | 41 | 4,703 | 3,873 | 5,661 | 5,093 |
| 8. வேறு எங்கும் குறிப்பிடப்படாத தயாரிக்கப்பட்ட உற்பத்திகள் | 158 | 159 | 5,105 | 6,253 | 8,225 | 8,937 |
| 9. பணிகள் | 430 | 497 | 70,363 | 84,025 | 102,704 | 118,675 |
| மொத்தம் | 1,399 | 1,503 | 116,972 | 131,814 | 176,020 | 194,727 |

(அ) ஆண்டு இறுதியில் திரண்ட மொத்தம்.
(ஆ) முதலீட்டுச் சபைச் சட்டத்தின் 17ஆம் பிரிவின்கீழ் ஒப்புதலளிக்கப்பட்ட செயற்றிட்டங்கள்.
(இ) திருத்தப்பட்டவை.
(ஈ) தற்காலிகமானவை.


மூலம்: இலங்கை முதலீட்டுச் சபை.

**வரைபடம் 4.8**
**ஒப்புதலளிக்கப்பட்டு ஒப்பந்தம் செய்யப்பட்ட முதலீட்டுச் சபை செயற்றிட்டங்கள்**

**வரைபடம் 4.8.1**
**ஒப்புதலளிக்கப்பட்ட, ஒப்பந்தம் செய்யப்பட்ட செயற்றிட்டங்கள்**




**வரைபடம் 4.8.2**
**ஒப்புதலளிக்கப்பட்ட, ஒப்பந்தம் செய்யப்பட்ட முதலீடுகள்**




2000ஆம் ஆண்டின் புதிய முதலீடுகள் ரூ.1,515 மில்லியன் எதிர்பார்க்கப்படும் முதலீட்டுடன் கூடிய இந்தியாவின் றேயோன், ரூ. 53 மில்லியன் எதிர்பார்க்கப்பட்ட முதலீட்டினைக் கொண்ட உலோக மீள் பயன்பாட்டு செயற்றிட்டம் ரூ. 22 மில்லியன் எதிர்பார்க்கப்படும் முதலீட்டுடன் கூடிய உருக்கு தொட்டிகள் செயற்றிட்டம் மற்றும் ரூ.758 மில்லியன் எதிர்பார்க்கப்பட்ட முதலீட்டுடன் கூடிய ஐக்கிய இராச்சியத்தின் பிட்போர்ட் எவியேசனின் புதிய விமான சரக்கு செயற்றிட்டம் என்பனவற்றை உள்ளடக்கியிருந்தன. பல பாரிய அளவுச் செயற்றிட்டங்கள் தமது தொழிற்சாலைகளின் கட்டுமான வேலைகளைத் தொடங்கிவிட்டன. இச் செயற்றிட்டங்கள் ரூ.7,480 மில்லியன் முதலீட்டுக் கட்டுப்பாட்டுடன் கூடிய வரையறுக்கப்பட்ட ஏ.ஈ.எஸ். களனிதிஸ்ச (பிறைவேட்) ரூ.5,224மில்லியன் முதலீட்டுக் கட்டுப்பாட்டுடன் கூடிய வரையறுக்கப்பட்ட நிவாசி டெவலர்ப்பர்ஸ் (பிறைவேட்) ரூ.6,317 மில்லியன் முதலீட்டுக் கட்டுப்பாட்டுடன் கூடிய லினியோ ஈடிமோ தனியார் நிறுவனம் ரூ.2,056 மில்லியன் கடப்பாடுடன் கூடிய வரையறுக்கப்பட்ட ரி.எஸ்.ஜி லங்கா மற்றும் ரூ.3,010 மில்லியன் முதலீட்டுக் கட்டுப்பாட்டுடன் கூடிய வரையறுக்கப்பட்ட ரெக்ஸ்ர்ட் ஜேர்சி லங்கா (பிறைவேட்) ஆகியவற்றை உள்ளடக்கியிருந்தன.

2000ஆம் ஆண்டில் முதலீட்டுச் சபையினால் ஒப்புதலளிக்கப்பட்ட செயற்றிட்டங்களின் எண்ணிக்கையும் இச் செயற்றிட்டங்களின் முதலீட்டுக் கடப்பாடுகளும் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் வீழ்ச்சியடைந்தன. முதலீட்டுச்சபைச்சட்டத்தின் பிரிவு 17இன் கீழ் முதலீட்டுச்சபை முன்னைய ஆண்டின் ரூ.104,851 மில்லியன் முதலீட்டுக் கடப்பாட்டுடன் கூடிய 350 செயற்றிட்டங்களுடன் ஒப்பிடுகையில் ரூ.87,992 மில்லியன் முதலீட்டுக் கடப்பாட்டுடன் 329 புதிய முதலீட்டு செயற்றிட்டங்களுக்கு ஒப்புதலளித்தது. 2000ஆம் ஆண்டு இறுதியில் ஒப்புதலளிக்கப்பட்ட செயற்றிட்டங்களின் மொத்த எண்ணிக்கை 3,332 ஆக இருந்தது. 2000ஆம் ஆண்டில் ஒப்புதலளிக்கப்பட்ட முதலீட்டில் வெளிநாட்டுக்கூறு ஒப்புதலளிக்கப்பட்ட மொத்த முதலீட்டில் ரூ.23,478 மில்லியனாக அல்லது 27 சதவீதமாக இருந்தது. 2000ஆம் ஆண்டில் ஒப்புதலளிக்கப்பட்ட செயற்றிட்டங்களில் 59 வெளிநாட்டிற்கு முழுமையாகச் சொந்தமானதாகவும், 111 கூட்டு ஒத்துழைப்பு தொழில் முயற்சிகளாகவும் 159 முழுமையாக உள்நாட்டவர்களுக்குச் சொந்தமான முயற்சிகளாகவும் காணப்பட்டன. இச் செயற்றிட்டங்களினால் உருவாக்கப்படும் என எதிர்பார்க்கப்படும் தொழில் வாய்ப்பு 59,375 ஆட்கள் என மதிப்பிடப்பட்டுள்ளது. 2000ஆம் ஆண்டின் ஒப்புதலளிக்கப்பட்ட செயற்றிட்டங்களின் வகைப்படியான பகுப்பாய்வு 70 செயற்றிட்டங்கள் புடைவகள், ஆடைகள் மற்றும் தோல் உற்பத்திகள் வகையிலும், 17 சதவீதமானவை உணவு, குடிபானம் மற்றும் புகையிலை வகையிலும், 15 இரசாயனங்கள், பெற்றோலியம், இறப்பர் மற்றும் பிளாத்திக்கு வகையிலும் காணப்பட்டன. பணிகள் துறையில் ஒப்புலளிக்கப்பட்ட செயற்றிட்டங்களின் எண்ணிக்கை 173ஆகக் காணப்பட்டதுடன் இது பெரும்பாலானவை மென்கல அபிவிருத்திச் செயற்றிட்டம் சார்ந்தனவாக இருந்தன. இதற்குத் தகவல் தொழில்நுட்பம் முன்னுரிமைத்துறையாக அரசினால் அங்கீகரிக்கப்பட்டமையும் 1999 மற்றும் 2000ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்ட முன்மொழிகளில் வழங்கப்பட்ட கவர்ச்சிகரமான ஊக்குவிப்புக்களுமே காரணமாகும்.

2000ஆம் ஆண்டில் ஒப்பந்தம் செய்யப்பட்ட செயற்றிட்டங்களின் முதலீடும் வீழ்ச்சியடைந்தது. ரூ.62,085 மில்லியன் முதலீட்டுக் கடப்பாட்டுடன் கூடிய 205 செயற்றிட்டங்களுடன் ஒப்பிடுகைளில் இவ்வாண்டுக்

**அட்டவணை 4.11**
**முதலீட்டுச் சபைத் தொழில் முயற்சிகளின் தொழில் நிலையும் ஏற்றுமதி வருவாய்களும்**

| வகை | தொழில்நிலை (திசெம்பர் முடிவில்) | | மொத்த ஏற்றுமதி வருமானம் (ரூ.மில்) (க.எ.பெ.) | |
|---|---|---|---|---|
| | 1999 | 2000(அ) | 1999 | 2000(அ) |
| 1. உணவு, குடிபானங்கள், புகையிலை | 11,571 | 15,207 | 8,256 | 12,413 |
| 2. புடவைகள், அணியும் ஆடைகள், தோல் உற்பத்திகள் | 216,700 | 242,435 | 127,008 | 162,583 |
| 3. மர, மர உற்பத்திகள் | 2,148 | 1,822 | 344 | 409 |
| 4. தாளும் தாள் உற்பத்திகளும் | 969 | 1,618 | 941 | 1,250 |
| 5. இரசாயனம், பெற்றோலியம், இறப்பர்,பிளாத்திக்கு உற்பத்திகள் | 24,234 | 29,675 | 21,956 | 28,583 |
| 6. உலோகமல்லாக் கனிப்பொருள் உற்பத்திகள் | 12,559 | 13,061 | 7,901 | 8,605 |
| 7. உருவமைக்கப்பட்ட உலோக உற்பத்திகள் பொறிகளும் போக்குவரத்துக் கருவிகளும் | 3,998 | 4,182 | 1,832 | 1,949 |
| 8. வேறு எங்கும் குறிப்பிடப்படாத தயாரிக்கப்பட்ட உற்பத்திகள் | 32,958 | 33,394 | 18,966 | 24,056 |
| 9. பணிகள் (ஆ) | 21,922 | 26,455 | 13,020 | 18,772 |
| மொத்தம் | 327,059 | 367,849 | 200,224 | 258,620 |

மூலம்: இலங்கை முதலீட்டுச் சபை.

(அ) தற்காலிகமானவை.
(ஆ) வரையறுக்கப்பட்ட சிறிலங்கன் எயார்லைன்ஸ் நீங்கலாக.

காலத்தில் முதலீட்டுச்சபை ரூ. 44,962 மில்லியன் முதலீட்டுக் கடப்பாட்டுடன்கூடிய 201 செயற்றிட்டங்கள் தொடர்பான ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டது. 2000ஆம் ஆண்டு இறுதியில் ஒப்பந்தம் செய்யப்பட்ட செயற்றிட்டங்களின் மொத்த எண்ணிக்கை 2,088 ஆகக் காணப்பட்டது. ஒப்பந்தம் செய்யப்பட்ட முதலீட்டில் வெளிநாட்டுக் கூறுகள் ரூ.16,799 மில்லியனாக அல்லது ஒப்பந்தம் செய்யப்பட்ட செயற்றிட்டங்களின் மொத்த முதலீட்டில் 37 சதவீதமாக இருந்தன. இச் செயற்றிட்டங்களின் தொழில்நிலை உருவாக்க இயலளவு 43,267 ஆட்கள் என மதிப்பிடப்பட்டுள்ளது. இம் முதலீடுகளை ஈர்க்கக் கூடிய முக்கிய கைத்தொழில் வகைகளாக புடவைகள், அணியும் ஆடைகள் மற்றும் தோல் உற்பத்திகள் இரசாயனம் பெற்றோலியம், இறப்பர் மற்றும் பிளாத்திக்கு உற்பத்திகள் மற்றும் பணிகள்துறை என்பன காணப்பட்டன. ஒப்பந்தம் செய்யப்பட்ட மொத்த செயற்றிட்டங்களில் 2000ஆம் ஆண்டு இறுதியில் ரூ.188,927 மில்லியன் மூலதனக் கடப்பாட்டுடன் 1,227 செயற்றிட்டங்கள் வர்த்தகத் தொழிற்பாட்டிலீடுபட்டிருந்தன. இச் செயற்றிட்டங்களில் வெளிநாட்டு முதலீட்டுக்கடப்பாடு ரூ.108,314 மில்லியனாக அல்லது வர்த்தகத் தொழிற்பாட்டிலுள்ள செயற்றிட்டங்களின் மொத்த முதலீட்டில் 57 சதவீதமாக இருந்தன. இச் செயற்றிட்டங்களினது தொழில் வாய்ப்பு உருவாக்க இயலளவு 332,844 ஆட்கள் என மதிப்பிடப்பட்டது. இச் செயற்றிட்டங்களில் பெரும்பாலானவை புடவைகள் அணியும் ஆடைகள் மற்றும் தோல் உற்பத்திகள் (255 செயற்றிட்டங்கள்) உணவு, குடிபானம், புகையிலை உற்பத்திகள் (130 செயற்றிட்டங்கள்) இரசாயனம், இறப்பர் மற்றும் பிளாத்திக்கு உற்பத்திகள் (115 செயற்றிட்டங்கள்) என்பனவற்றில் காணப்பட்டன. 415 செயற்றிட்டங்கள் வலு, தொலைத் தொடர்பூட்டல், வர்த்தக நிலையங்கள் மற்றும் மென் கல அபிவிருத்தி செயற்றிட்டங்கள் என்பனவற்றை உள்ளிட்ட பணிகள்துறையில் காணப்பட்டன. 96 தொழில் முயற்சிகள் கட்டுநாயக்கா ஏற்றுமதி பதனிடல் வலையத்திலும், 60 பியகம ஏற்றுமதிப் பதனிடல் வலயத்திலும், 11 கொக்கல ஏற்றுமதிப் பதனிடல் வலையத்திலும், 5 மல்வத்தை ஏற்றுமதிப் பதனிடல் பூங்காவிலும், 10 மீரிகம ஏற்றுமதிப் பதனிடல் வலயத்திலும், 4 கண்டி கைத்தொழில் பூங்காவிலும், 8 சீதாவாக்க கைத்தொழில் பூங்காவிலும், 8 வதுப்பிட்டிவல ஏற்றுமதிப் பதனிடல் வலயத்திலும், 1,189 ஏற்றுமதிப் பதனிடல் வலையங்களுக்கு வெளியேயும் அமைந்திருந்தன.

2000ஆம் ஆண்டில் மேற்குறிப்பிட்டவற்றிற்குப் புறம்பாக முதலீட்டுச் சபைச்சட்டத்தின் (சாதாரண சட்டம்) பிரிவு 16இன் கீழ் முதலீட்டுச்சபை 138 செயற்றிட்டங்களுக்கு ஒப்புதலளித்தது. முன்னைய ஆண்டிலும் இதே எண்ணிக்கையானவைகளுக்கே ஒப்புதல் வழங்கப்பட்டிருந்தன. இம் முதலீடுகள் புடவை, அணியும் ஆடை மற்றும் தோல் உற்பத்திகள், உணவு குடிபானம் மற்றும் புகையிலை உற்பத்திகள், இரசாயனம் பெற்றோலியம் இறப்பர் மற்றும் பிளாத்திக்கு உற்பத்திகள் மற்றும் உலோகமல்லாக் கனிப்பொருள் உற்பத்திகள் என்பனவற்றில் காணப்பட்டன. இச் செயற்றிட்டங்களின் மொத்த முதலீட்டுக் கடப்பாடு முன்னைய ஆண்டின் ரூ. 3,439 மில்லியனுடன் ஒப்பிடுகையில் ரூ.2,566 மில்லியனாகக் காணப்பட்டது. இச் செயற்றிட்டங்களில் வெளிநாட்டு முதலீட்டுக்கூறு ரூ.2,021 மில்லியன் அல்லது மொத்த முதலீட்டில் 79 சதவீதமாக இருந்தது. இச் செயற்றிட்டங்களின் கைத்தொழில் உருவாக்க இயலளவு 5,776 ஆட்கள் என மதிப்பிடப்பட்டிருக்கிறது. ஒப்புதலளிக்கப்பட்ட மொத்தச் செயற்றிட்டங்களில் 54 செயற்றிட்டங்கள் முழுமையாக வெளிநாட்டவர்களுக்கு சொந்தமானவையாகவும் 84 செயற்றிட்டங்கள் கூட்டுத் தொழில் முயற்சிகளாகவும் இருந்தன. ஒப்புதலளிக்கப்பட்ட செயற்றிட்டங்களில் 436 செயற்றிட்டங்கள் 2000ஆம் ஆண்டின் இறுதியில் வர்த்தகத் தொழிற்பாட்டிலிருந்தன. இத் தொழில் முயற்சிகளின் மதிப்பிடப்பட்ட மொத்த முதலீடு ரூ.19,389 மில்லியனாகவும், இதில் ரூ.11,089 மில்லியன் அல்லது 56 சதவீதம் வெளிநாட்டு மூலங்களிலிருந்து கிடைத்தது.

இச் செயற்றிட்டங்களின் மொத்தத் தொழில்நிலை உருவாக்க இயலளவு 36,657 ஆட்களாக இருந்தது.

## உள்நாட்டு முதலீடு

முதலீட்டுச்சபைச் சட்டத்தின் பிரிவு 17இன் கீழ் ஒப்புதலளிக்கப்பட்ட செயற்றிட்டங்களில் உள்நாட்டு முதலீடுகளின் பங்கு 1999இன் 45 சதவீதத்திலிருந்து 2000ஆம் ஆண்டில் 73 சதவீதத்திற்கு கணிசமாக அதிகரித்து. 2000ஆம் ஆண்டில் இச் செயற்றிட்டங்களின் உள்நாட்டு முதலீட்டுக் கடப்பாடு முன்னைய ஆண்டின் ரூ.47,352 மில்லியனுடன் ஒப்பிடுகையில் ரூ.64,444 மில்லியனாக இருந்தது. ஒப்பந்தம் செய்யப்பட்ட செயற்றிட்டங்களின் உள்நாட்டு முதலீட்டுக் கடப்பாடுகளும் 2000ஆம் ஆண்டில் ரூ.28,182 மில்லியனுக்கு 30 சதவீதத்தினால் அதிகரித்தன. முதலீட்டுச் சபையின்கீழ் வர்த்தக ரீதியாகத் தொழிற்பட்ட 1,227 செயற்றிட்டங்களிலுள்ள உள்நாட்டு முதலீடுகளின் பங்கு ரூ.80,612 மில்லியனாக அல்லது 2000ஆம் ஆண்டு இறுதியில் உள்ளவாறான மொத்த முதலீட்டில் 43 சதவீதமாக இருந்தது. முதலீட்டுச் சபைச் சட்டத்தின் பிரிவு 16இன் கீழ் (சாதாரண சட்டம்) ஒப்புதலளிக்கப்பட்ட செயற்றிட்டங்களின் உள்நாட்டு முதலீட்டுக்கூறு ரூ.544 மில்லியனாக அல்லது மொத்த முதலீட்டில் 21 சதவீதமாக இருந்தது.

கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சின்கீழ் பதிவு செய்யப்பட்ட 1,795 தொழில் முயற்சிகளின் மொத்த முதலீடு 2000ஆம் ஆண்டு இறுதியில் ரூ.114,680 மில்லியனாகக் காணப்பட்டது. இக் கைத்தொழில்களின் தொழில்வாய்ப்பு உருவாக்க இயலளவு 311,616 ஆட்கள் என மதிப்பிடப்பட்டுள்ளது. இம் முதலீடுகள் புடவைகள், அணியும் ஆடைகள், மற்றும் தோல் உற்பத்திகள், இரசாயனம் பெற்றோலியம் இறப்பர் மற்றும் பிளாத்திக்கு உற்பத்திகள் மற்றும் உருவமைக்கப்பட்ட உலோக உற்பத்தி வகைகளில் காணப்பட்டன.

## 4.6 கைத்தொழில்துறைக்கான கொடுகடன் கிடைப்பனவு

தொழிற்படும் மூலதனத் தேவைப்பாடுகள் மற்றும், நடுத்தர மற்றும் நீண்டகால முதலீட்டுத் தேவைப்பாடுகளை ஈடுசெய்வதற்காக வர்த்தக வங்கிகள் மற்றும் அபிவிருத்தி வங்கிகள் ஆகிய இரண்டிலுமிருந்து கொடுகடன் வசதிகளைத் கைத்தொழில்துறை, தொடர்ந்தும் பெற்றுவருகின்றது. வர்த்தக வங்கிகள் முக்கியமாக குறுங்கால மற்றும் நீண்டகாலக் கொடுகடன் வசதிகளை வழங்கிய வேளையில் அபிவிருத்தி வங்கிகள் நடுத்தர மற்றும் நீண்டகாலக் கொடுகடன் வசதிகளை நேரடிக் கடன்கள், பங்குடைமைப் பங்களிப்பு மற்றும் துறைவாரியான கொடுகடன் நிகழ்ச்சித் திட்டங்களின்

**அட்டவணை 4.12**
**தேசிய அபிவிருத்தி வங்கியினாலும், இலங்கை அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன வங்கியினாலும் கைத்தொழில் துறைக்கு வழங்கப்பட்ட நிதியியல் வசதிகள் – 2000 (அ)**

| வகை | சிறிய நடுத்தர உதவி செயற்றிட்டத்தின்கீழ் ஒப்புதலளிக்கப்பட்ட மீள்நிதி | | தேசிய அபிவிருத்தி வங்கி | | | | | | இலங்கை அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன வங்கி | | | | | | முழு மொத்தம் | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | நேரடி நிதி உதவி | | பங்கு மூலதனம் | | மொத்தம் | | ஒப்புதலளிக் கப்பட்ட கடன்கள் | | பங்கு மூலதனம் | | மொத்தம் | | | |
| | எண். | தொகை (ரூ.மில்.) | எண். | தொகை (ரூ.மில்.) | எண். | தொகை (ரூ.மில்.) | எண். | தொகை (ரூ.மில்.) | எண். | தொகை (ரூ.மில்.) | எண். | தொகை (ரூ.மில்.) | எண். | தொகை (ரூ.மில்.) | எண். | தொகை (ரூ.மில்.) |
| 1. உணவு, குடிபானங்கள், புகையிலை | 38 | 5.0 | 164 | 419 | - | - | 202 | 424 | 91 | 965 | - | - | 91 | 965 | 293 | 1,389 |
| 2. புடவைகள், அணியும் ஆடைகள், தோல் உற்பத்திகள் | 26 | 3.8 | 89 | 1,288 | - | - | 115 | 1,292 | 44 | 741 | - | - | 44 | 741 | 159 | 2,033 |
| 3. மர, மர உற்பத்திகள் | 3 | 0.8 | 62 | 183 | - | - | 65 | 184 | 24 | 116 | - | - | 24 | 116 | 89 | 300 |
| 4. தாளும் தாள் உற்பத்திகளும் | 5 | 1.0 | 3 | 6 | - | - | 8 | 7 | 20 | 148 | - | - | 20 | 148 | 28 | 155 |
| 5. இரசாயனம், பெற்றோலியம், இறப்பர், பிளாத்திக்கு உற்பத்திகள் | 12 | 2.4 | 105 | 963 | 1 | 100.0 | 118 | 1,065 | 33 | 725 | - | - | 33 | 725 | 151 | 1,790 |
| 6. உலோகமல்லாக் கனிப்பொருள் உற்பத்திகள் | 15 | 2.4 | | | - | - | 15 | 2 | 6 | 281 | - | - | 6 | 281 | 21 | 283 |
| 7. அடிப்படை உலோக உற்பத்திகள் | 8 | 1 | 62 | 573 | - | - | 70 | 574 | 12 | 89 | - | - | 12 | 89 | 82 | 663 |
| 8. உருவமைக்கப்பட்ட உலோக உற்பத்திகள் பொறிகளும் போக்குவரத்துக் கருவிகளும் | | | | - | - | - | - | - | 72 | 558 | 1 | 500 | 73 | 1,056 | 73 | 1,058 |
| 9. வேறு எங்கும் குறிப்பிடப்படாத தயாரிக்கப்பட்ட உற்பத்திகள் | 11 | 2 | 631 | 2,172 | 3 | 346.3 | 645 | 2,520 | - | - | - | - | - | - | 645 | 2,520 |
| மொத்தம் | 118 | 18 | 1,116 | 5,604 | 4 | 446 | 1,238 | 6,068 | 302 | 3,623 | 1 | 500 | 303 | 4,123 | 1,541 | 10,191 |

(அ) தற்காலிகமானவை.
(ஆ) செயற்றிட்ட மற்றும் கருவிகள் நிதிக் கடன்கள் மட்டும்.

மூலங்கள்: இலங்கை அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன வங்கி. தேசிய அபிவிருத்தி வங்கி.

கீழான கொடுகடன் வசதிகள் ஆகியவற்றின் வடிவில் வழங்கின. வர்த்தக வங்கிகளால் இவ்வாண்டில் கைத்தொழில்துறைக்கு வழங்கப்பட்ட கொடுகடன் கணிசமான அளவில் அதிகரித்தது. எனினும் அபிவிருத்தி வங்கிகளால் வழங்கப்பட்ட நீண்டகால மற்றும் நடுத்தரகாலக் கொடுகடன் குறிப்பிடத்தக்களவில் வீழ்ச்சியடைந்தமைக்கு, நுண்பாக சிறிய மற்றும் நடுத்தர அளவுக் கைத்தொழில் செயற்றிட்டங்களை நிதியிடுவதற்காக முன்னைய ஆண்டுகளில் பன்னாட்டு முகவர் நிலையங்களிடமிருந்து பெறப்பட்ட நிதியங்கள் தீர்ந்து போனமையே காரணமாகும். தேசிய அபிவிருத்தி வங்கி மற்றும் அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன வங்கி போன்ற முக்கியமான அபிவிருத்தி வங்கிகள் தொடர்ந்தும் நீண்டகால மற்றும் நடுத்தரகால நிதியியல் வசதிகளைக் கைத்தொழில்துறைக்கு வழங்கின. தேசிய அபிவிருத்தி வங்கியானது சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சிகள் உதவிச் செயற்றிட்டம் மற்றும் சிறிய மற்றும் நுண்பாகக் கைத்தொழில்கள் வழிகாட்டி மற்றும் தொழில் முயற்சி ஊக்குவிப்புச் செயற்றிட்டங்கள் போன்ற துறைவகைப்படியான கொடுகடன் செயற்றிட்டங்களின் கீழ் தொடர்ந்தும் மீள் நிதியிடலை வழங்கியது. எனினும், அக் கொடுகடன் செயற்றிட்டங்களின் கீழ் ஒப்புதலளிக்கப்பட்ட கொடுகடன் தொகை 2000ஆம் ஆண்டில் கணிசமானளவில் வீழ்ச்சியடைந்தது. ஆண்டின் முற்பகுதியில் சார்பு ரீதியில் குறைவாகக் காணப்பட்டிருந்த கடன்களின் மீதான வட்டி வீதங்கள் ஆண்டின் நான்காம் காலாண்டில் அதிகரித்துக் காணப்பட்டமையினால் நிதியங்களின் செலவை அதிகரிக்கச் செய்தன.

இலங்கை மத்திய வங்கியினால் நடத்தப்பட்ட வர்த்தக வங்கிகளின் முற்பணங்கள் மற்றும் வைப்புக்களின் காலாண்டு அளவீடுகளின்படி, 2000ஆம் ஆண்டின் முதல் ஒன்பது மாதங்களிலும் கைத்தொழில் துறைக்கான வர்த்தக வங்கிக் கொடுகடன் 1999இன் ரூ.21.9 பில்லியனிலிருந்து ரூ.27.4 பில்லியனுக்கு கணிசமான அளவில் அதிகரித்தது. தேசிய அபிவிருத்தி வங்கி 2000ஆம் ஆண்டில் 1,116 செயற்றிட்டங்களுக்காக ரூ.5,604மில்லியன் கொண்ட தொகைக்கு நேரடி நிதியில் ஒப்புதலை வழங்கியிருந்தது. ஒப்பிடுகையில் 1999இல் 1,201 செயற்றிட்டங்களுக்காக ரூ.8,103 மில்லியன் கொண்ட தொகைக்கு ஒப்புதல் வழங்கப்பட்டிருந்தது. புடவை, அணியும் ஆடை மற்றும் தோல் உற்பத்திவகை மற்றும் இரசாயனம், பெற்றோலியம், இறப்பர் மற்றும் பிளாத்திக்கு உற்பத்திகள் வகை, இக்கடன் வசதியின் பெரும்பகுதியை ஈர்த்திருந்தது. சிறிய மற்றும் நடுத்தரத் தொழில் முயற்சி உதவிச் செயற்றிட்டம் மற்றும் சிறிய மற்றும் நுண்பாகக் கைத்தொழில்கள் வழிகாட்டி மற்றும் தொழில் முயற்சி ஊக்குவிப்பு நிகழ்ச்சித்திட்டங்கள் ஆகியவற்றின் கீழ் 1999 இல் 3,292 செயற்றிட்டங்களுக்காக ஒப்புதலளிக்கப்பட்ட ரூ.2,557 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 118 செயற்றிட்டங்களுக்காக ரூ.18 மில்லியன் கொண்ட மீள் நிதியிடலுக்கு தேசிய அபிவிருத்தி வங்கி ஒப்புதல் வழங்கியிருந்தது.

2000ஆம் ஆண்டில் 303 கைத்தொழில் செயற்றிட்டங்கள் தொடர்பில் இலங்கை அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன வங்கி ரூ.4,123மில்லியன் கொண்ட நிதியியல் வசதிகளுக்கு ஒப்புதல் வழங்கியிருந்தது. ஒப்பிடுகைளில் 1999இல் 773 செயற்றிட்டங்கள் தொடர்பில் ரூ.4,638 மில்லியனுக்கு ஒப்புதல் வழங்கப்பட்டிருந்தது. இந் நிதியியல் வசதிகள் ரூ.3,623 மில்லியன் கொண்ட கடன் நிதியிடலையும் ரூ.500 மில்லியன் கொண்ட பங்கு நிதியிடலையும் உள்ளடக்கியிருந்தது. தயாரிக்கப்பட்ட உலோக உற்பத்தி வகையிலான தனியொரு செயற்றிட்டத்துக்கு பங்கு நிதியிடல் வழங்கப்பட்டிருந்தது. நேரடிக் கடன் திட்டத்தின் கீழ் ஒப்புதலளிக்கப்பட்ட கொடுகடன் வசதிகளில் ரூ.965மில்லியன் கொண்ட தொகை, உணவு, குடிபானம் மற்றும் புகையிலை உற்பத்திகள் தொடர்பான 91 செயற்றிட்டங்களுக்காகவும், ரூ.741 மில்லியன் புடவை, அணியும் ஆடை மற்றும் தோல் உற்பத்திப் பொருட்கள் தொடர்பான 44 செயற்றிட்டங்களுக்காகவும், ரூ.725 மில்லியன் கொண்ட தொகை இரசாயனம், பெற்றோலியம், இறப்பர் மற்றும் பிளாத்திக்கு உற்பத்திகள் வகைகளுக்கான 33 செயற்றிட்டங்கள் தொடர்பாகவும் ஒப்புதல் அறிவிக்கப்பட்டிருந்தன.

## 4.7 கைத்தொழில் கொள்கை

ஏற்றுமதி அடிப்படையிலான கைத்தொழில் உபாயமொன்றினது வரைச் சட்டத்தினுள், நாட்டில் விரைவானதும் தாக்குப் பிடிக்கக்கூடியதுமான கைத்தொழில் அபிவிருத்தியை அடைவதற்காக அரசின் கைத்தொழில் கொள்கையானது பாரிய பங்கொன்றினைத் தனியார்துறைக்குக் கையளித்துள்ளது. கைத்தொழிற் கொள்கையின் முக்கிய நோக்கங்களாவன கைத்தொழில்தளம், ஏற்றுமதித்தளம் ஆகிய இரண்டினதும் விரிவாக்கம் பல்வகைப்படுத்தப்படுதல் மற்றும் தரமுயர்த்தல், இயற்பொருள் மற்றும் மனிதவலு மூலவளங்களின் பயன்தருமுகாமை, கிராமிய மற்றும் நகரப் பகுதிகள் இரண்டிலுமான தொழில் வாய்ப்பு மற்றும் வருமான உருவாக்கம், ஏற்றுமதியை ஊக்குவித்தல், பிரதேச ரீதியிலான கைத்தொழில் மயமாக்கல் மற்றும் சூழல் அடிப்படையில் சிநேகபூர்வமானதும், தாக்குப்பிடிக்கக் கூடியதுமான கைத்தொழில் அபிவிருத்திக்கு ஊக்கமளித்தல் என்பனவாகும். இந் நோக்கங்களை அடைவதற்காக, அரசு சிறப்பாகக் குறிப்பிடத்தக்க கைத்தொழில் துறைகளில் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு முதலீடுகளை ஊக்குவிக்கும் நோக்குடன் அதிக

அளவிலான ஊக்குவிப்புக்களை வழங்கியது. வரிச்சலுகைகள், வரி விடுப்புக்கள், தீர்வைச் சலுகைகள் மற்றும் பொறி, கருவி மற்றும் மூலப் பொருட்களின் தீர்வையற்ற இறக்குமதிகள் ஆகியவற்றை இந்த ஊக்குவிப்புக்கள உள்ளடக்கியுள்ளன. மேலும் அரசானது கைத்தொழில் துறையின் உற்பத்தியாக்கத்தினையும், கைத்தொழில் ஏற்றுமதிகளுக்கிடையில் உலகளாவிய போட்டித் தன்மையையும் அதிகரிக்கச் செய்வதை இலக்காகக் கொண்டு தேசிய உற்பத்தியாக்க பத்தாண்டு நிகழ்ச்சித் திட்டம், முன்னேற்றமடைந்த தொழில்நுட்ப ஊக்குவிப்பு நிகழ்ச்சித் திட்டம் மற்றும் புடவை மீளமைப்பு நிகழ்ச்சித் திட்டம் ஆகியவற்றை உள்ளடக்கி வேறுபல வழிமுறைகளை அறிமுகப்படுத்தியது.

மேலே கூறப்பட்ட வழிமுறைகள் கைத்தொழில் துறையின் நடவடிக்கைகளின் அபிவிருத்திக்குக் குறிப்பிடத்தக்களவு பங்களிப்பை வழங்கியிருந்தபோதிலும், ஏற்றுமதி அமைப்பு இன்னமும் சில கைத்தொழில் உற்பத்திகளில் குறிப்பாக புடவைகள் மற்றும் அணியும் ஆடைகளிலேயே தனது கவனத்தைச் செலுத்தியுள்ளது. மிகச்சில உற்பத்திகளில் கூடிய கவனம் செலுத்தப்படுவதைக் குறைக்கவும், தெரிந்தெடுக்கப்பட்டதும், உபாயத்துடன் கூடியதுமான முறையில் கைத்தொழில்களை ஊக்குவிக்கும் நோக்குடனும் கைத்தொழில் ஏற்றுமதி அமைப்பின் பன்முகப்படுத்தலை அதிகரிப்பதற்காக அரசு 2000ஆம் ஆண்டிலிருந்து 2010 வரையிலான 10ஆண்டுக் காலப்பகுதியை உள்ளடக்கி, யப்பானிய பன்னாட்டு ஒத்துழைப்பு முகாமையுடனும் பன்னாட்டு அபிவிருத்திக்கான ஐக்கிய நாடுகள் அமைப்புடனும் இணைந்து றெயின்போ திட்டம் என அழைக்கப்படும் கைத்தொழில் மயமாக்கல் மற்றும் முதலீட்டு ஊக்குவிப்புக்கான முதன்மைத் திட்டமொன்றை உருவாக்கியது. இத்திட்டத்தின் முக்கிய நோக்கம் எதிர்வரும் பத்தாண்டுகளில் உழைப்புச் செறிவு கைத்தொழிலிருந்து, அறிவின் அடிப்படையிலும், தொழில்நுட்பம் செறிந்த கைத்தொழிலின் அடிப்படையிலுமான கைத்தொழிலுக்கு நகருவதாகும். இத்திட்டம் ஆடை, தோல், இறப்பர், பிளாத்திக்கு, பொறி, மின்/மின்னியல் மற்றும் தகவல் தொழில்நுட்பம் போன்ற முக்கிய கைத்தொழில்களை தெரிந்தெடுக்கக் கூடியதும் உபாயத்துடனுமான முறையில் ஊக்குவிக்கக்கூடிய முன்னுரிமைக் கைத்தொழில்களாக அடையாளங் கண்டது. இத்திட்டத்தின் காலப்பகுதியானது 2000ஆம் ஆண்டிலிருந்து 2004 வரையிலும் மற்றும் 2005 இலிருந்து 2010 வரையிலும் என இரு நிலைகளில் பிரிக்கப்பட்டிருந்தது. திட்டக்காலப்பகுதியின் முதலரைப்பகுதி ஒருங்கிணைக்கும் காலப்பகுதியாகக் குறிப்பிடப்படும் வேளையில், இரண்டாவது காலப்பகுதியானது கைத்தொழில்களை விரைவுபடுத்தும் காலப்பகுதியாகக் காணப்படும். முதன்மைத் திட்டத்தின்படி தயாரிப்புத்துறை, 2000 - 2010 காலப்பகுதியில் ஆண்டுக்கு 10 - 11 சதவீதத்தால் வளர்ச்சியடையுமென இலக்கிடப்பட்டுள்ளது. சிறிய மற்றும் நடுத்தர அளவுத் தொழில் முயற்சி அபிவிருத்திக் கூட்டுத்தாபனம் எனப்படும் புதிய அமைப்பொன்றை நிறுவுவதன் மூலம் சிறிய மற்றும் நடுத்தர அளவுக் கைத்தொழில்களை அபிவிருத்தி செய்வதற்கு முதன்மைத் திட்டம் கூடிய முன்னுரிமையை வழங்கியது. இந் நிறுவனம் சிறிய மற்றும் நடுத்தரக் கைத்தொழில்களின் தொழில்நுட்ப ரீதியிலான தரமுயர்த்தலுக்கான ஆலோசனைகளையும், முகாமைத்துவ மற்றும் தகவல் பணிகளையும், புதிய தொழில் முயற்சிக் கைத்தொழில்களுக்கான உதவியை வழங்குவதற்கான தொழில்முயற்சி மற்றும் ஆய்வு அடிப்படையிலான ஊக்குவிப்பு, மற்றும் சிறிய மற்றும் நடுத்தரக் கைத்தொழில்களுக்கான நிதிப்பாய்ச்சலை எளிதாக்குவதற்கான கொடுகடன் உத்தரவாத ஒழுங்கமைப்பு ஆகியவற்றை வழங்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

கைத்தொழில் துறைக்கு அதிகளவில் வெளிநாட்டு முதலீட்டை ஈர்க்கும் நோக்குடன், வெளிநாட்டுச் சந்தைகளுக்கான ஏற்றுமதித் தளமாக இலங்கையை ஊக்குவிப்பதன் மூலம் ஏற்றுமதி அமைப்புக்களைப் பன்முகப்படுத்தல் மற்றும் விரிவாக்குதல் ஆகியவற்றை இலக்காகக் கொண்டும் உள்ளூர்த் தயாரிப்பாளர்களுக்கு, இப்பிரதேசத்தில் பரந்த சந்தையொன்றை வழங்குவதற்காகவும் 1998 திசெம்பர் 28இல் இந்திய இலங்கை தாராள வர்த்தக உடன்படிக்கையில் அரசு கையெழுத்திட்டது. 2000ஆம் ஆண்டு மார்ச்சு 1இல் இவ்வுடன்படிக்கை நடைமுறைக்கு வந்தது. இந்த இந்திய - இலங்கை தாராள வர்த்தக உடன்படிக்கை இலங்கை உற்பத்திகளுக்கு இந்தியாவில் சந்தை வாய்ப்பினை வழங்கிய வேளையில், இந்தியாவிலிருந்து தீர்வையற்ற முறையில் மூலப் பொருட்களையும் பொறிகளையும் இறக்குமதி செய்வதையும் அனுமதித்தது. இவ்வுடன்படிக்கையின் கீழ் இந்தியா ஏறக்குறைய 429 விடயங்களைக் கொண்டுள்ள எதிர்மறையான பட்டியலொன்றுக்குட்பட்டு மூன்று ஆண்டுக் காலப்பகுதியில் தனது சுங்கத் தீர்வைகளைப் படிப்படியாக நீக்கும். இதற்குப் பதிலாக இலங்கை, 1,180 விடயங்களைக் கொண்ட எதிர்மறையான பட்டியலுக்குட்பட்டு எட்டு ஆண்டுகள் கொண்ட காலப்பகுதியில் இந்தியாவிலிருந்தான இறக்குமதிகள் மீதான தீர்வைகளை நீக்கும். எதிர்மறையான பட்டியலில் உற்பத்திகளைச் சேர்த்துக்கொள்ளுதல் உள்ளூர்க் கைத்தொழில்களுக்குப் பாதுகாப்பு வழங்குவதற்கேயாகும். இந்தியாவின் எதிர்மறையான பட்டியலில் ஆடைகள் எஞ்சியிருப்பினும் 8 மில்லியன் துண்டுகள் கொண்ட ஆண்டு அளவுப் பங்குக்குட்பட்டு, நிலையான அடிப்படையில் 50 சதவீதத் தீர்வைச் சலுகை

வழங்கப்பட்டது. இதில் 6 மில்லியன் துண்டுகள் இந்திய சீத்தைகளிலேயே உற்பத்தி செய்யப்பட வேண்டியிருப்பதுடன் ஆடைகளின் எந்தவொரு தனிப்பிரிவும் ஆண்டொன்றுக்கு 1.5 மில்லியன் துண்டுகளை விஞ்சக்கூடாதென்ற நியதிக்குட்பட்டு இவை உற்பத்தி செய்யப்படும். இந்திய இலங்கை தாராள வர்த்தக உடன்படிக்கையின் கீழான எதிர்மறைப் பட்டியலிலுள்ள விடயங்களுக்கு அத்தகைய விடயங்களை உற்பத்தி செய்யும் உள்ளூர்க் கைத்தொழில்களுக்குப் பாதுகாப்பை வழங்குவதற்காக இறக்குமதித் தீர்வைச் சலுகை வழங்கப்படக் கூடாதென முதலீட்டுச்சபை தீர்மானித்தது. அத்தகைய விடயங்களின் தீர்வையற்ற இறக்குமதிகள், இலங்கையில் அவ்விடயம் தேவைப்படுத்தப்பட்ட தர நியமத்துக்குட்பட்டும் குறிக்கப்பட்ட நேர அடிப்படையிலும் தயாரிக்கப்பட முடியாதவிடத்து மட்டுமே அனுமதிக்கப்படும்.

உட்கட்டமைப்பு வசதிகளின் கிடைப்பனவும் தரமும், கைத்தொழில் துறைக்கான முதலீட்டுப் பாய்ச்சலைத் தீர்மானிக்கும் முக்கிய காரணிகளுள் ஒன்றாக விளங்குகின்றமையினால் உட்கட்டமைப்பு வசதிகளின் அபிவிருத்தியில் அரசு தொடர்ந்தும் கவனம் செலுத்தும் வேளையில் கட்டு, உடமையாக்கு, தொழிற்படுத்து/ கட்டு, தொழிற்படுத்து, மாற்றல் செய் என்ற அடிப்படையின் கீழ் தனியார் துறை பங்கேற்பினையும் ஊக்குவிக்கின்றது. இவ்வுட்கட்டமைப்பு வசதிகள், வலு உருவாக்கம், தொலைத் தொடர்பூட்டல் துறைமுக அபிவிருத்தி, நெடுஞ்சாலைகள், கைத்தொழில் பூங்காக்கள்/பேட்டைகள், கைத்தொழில் நகரப்பகுதிகள் மற்றும் தேர்ச்சி அபிவிருத்தி ஆகியவற்றை உள்ளடக்கியுள்ளன. கைத்தொழில் அபிவிருத்திக்கான உந்து விசைகளில் ஒன்றாக தகவல் தொழில்நுட்பம் அடையாளங் காணப்பட்டுள்ளமையால், அனைத்து மாவட்டங்களையும் உள்ளடக்கிய முக்கிய குடித்தொகை நிலையங்களில் 50 பயிற்சி நிறுவனங்கள் நிறுவுவதை ஊக்குவிப்தற்காக 2000ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் சிறப்பு ஊக்குவிப்புக்கள் அறிமுகப்படுத்தப்பட்டன. இந் நிறுவனங்கள் மாலபே, கெஸ்பாவ மற்றும் பூகொடையில் நிறுவுவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள தகவல் தொழில் நுட்பப் பூங்காக்களுடன் இணைக்கப்படும். அத்தகைய வசதிகளை நிறுவுவதற்கான ஆரம்பச் செலவு பயிற்சி, பணிமனையைப் புதுப்பித்தல் புதுமெருகூட்டுதல் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளையேற்படுத்தல் ஆகியவற்றுக்கான செலவை உள்ளடக்கி முதலீட்டுச் சபையினால் ஈடுசெய்யப்படும். இந்நிறுவனங்கள் கொழும்பு மாவட்டத்துக்கு வெளியே அமைவதுடன் ஆண்டொன்றுக்கு ஆகக்குறைந்தது 300 ஆட்களைப் பயிற்றுவிக்கக் கூடிய இயலவைக் கொண்டதாயுமிருப்பின் அத்தகைய நிறுவனங்களுக்கு 5 ஆண்டு வரி விடுப்பு கிடைக்கக் கூடியதாகவிருக்கும். ஆயுதப்படையினர், பொலிஸ் உத்தியோகத்தர்கள் ஆகியோருக்கும் சிறைச்சாலைகளின் பயன்பாட்டிற்கும் மற்றும் ஏற்றுமதிக்குமாக இடுப்புப்பட்டிகள், சீருடைகள், கூடாரங்கள் போன்ற போருக்கல்லாத இராணுவ விடயங்களை உள்ளூரில் தயாரிப்பதற்கான வாய்ப்புக்கள் குறிப்பிடத்தக்களவில் காணப்படுகின்றமையினால், இந் நோக்கத்துக்காக தனிப்பட்ட வலயமொன்றை நிறுவுவதற்கான எடுத்துரைப்பொன்று 2000ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இவ்வலயம் உள்நாட்டு மற்றும் ஏற்றுமதிச் சந்தை ஆகிய இரண்டுக்குமான உற்பத்தியை மேற்கொள்ளக்கூடிய முதலீட்டாளர்களை ஈர்ப்பதாக அமையும்.

இலங்கை அரசும் ஐரோப்பிய ஆணைக்குழுவும் ஐரோப்பிய ஒன்றிய நாடுகளிலான அனுமதிப்பங்கற்ற அணியும் ஆடை மற்றும் புடவை வர்த்தகத்துக்கான உடன்படிக்கையொன்றில் 2000ஆம் ஆண்டு திசெம்பர் 5இல் கையெழுத்திட்டன. இவ்வுடன்படிக்கையானது, உலக புடவை மற்றும் அணியும் ஆடை ஏற்றுமதிகள் மீதான அனுமதிப் பங்குக் கட்டுப்பாடுகள் முற்றாக நீக்கப்படுவதற்காக அட்டவணையிடப்பட்ட காலத்துக்கு நான்காண்டுகள் முன்பதாகவே, ஐரோப்பிய ஒன்றிய நாடுகளுக்கான புடவைகள் மற்றும் அணியும் ஆடைகளைக் கொண்ட இலங்கை ஏற்றுமதிகள் மீதான அனைத்து அனுமதிப் பங்குக் கட்டுப்பாடுகளையும் 2001 சனவரி 1ஆம் நாளிலிருந்து நிறுத்தி வைக்கும். இந்த உடன்படிக்கையில் கையெழுத்திடுவதற்கு முன்பு ஆண்களினது அல்லது இளைஞர்களினது நெய்யப்பட்ட குறுங்காற்சட்டைகள், காற்சட்டைகள், நீண்ட காற்சட்டைகளும் மேலங்கிகளும், பெண்கள் அல்லது சிறுமியரின் நெய்யப்பட்ட நீளக்காற்சட்டைகள், பெண்களின் மேலங்கிகளும், கட்டை காற்சட்டைகளும், தலைக்கவிகையுடனான துருவஆடைகள், எஸ்கிமோவர் உடைகள், காற்றுத்தடுப்பு ஆடைகள், வெதுவெதுப்பான மேலங்கிகள் போன்றவை ஐரோப்பிய ஒன்றியத்துக்கான அணியும் ஆடை ஏற்றுமதிகளின் அனுமதிப்பங்குக் கட்டுப்பாடுகளின் கீழமைந்திருந்தன. குறிப்பிட்ட சில வகைகளுக்கான அனுமதிப் பங்குகள் முடிவுற்றமை, ஐரோப்பிய ஒன்றிய வாங்குனர்கள் ஏனைய நாடுகளின் தயாரிப்பாளர்களிடம் பொருட்களுக்கான தமது கட்டளைகளை வழங்குவதற்கு வழிவகுத்தது. அனைத்து அளவுப்பங்குக் கட்டுப்பாடுகளையும் உடன்படிக்கை நிறுத்தி வைத்தமையினால் ஐரோப்பிய ஒன்றியத்துக்கான அணியும் ஆடை ஏற்றுமதிகள் 2001ஆம் ஆண்டில் குறிப்பிடத்தக்களவில் வளர்ச்சியடையுமென மதிப்பிடப்பட்டுள்ளது. இந்த உடன்படிக்கையானது, கூடிய வெளிநாட்டு முதலீட்டு உட்பாய்ச்சலையும் புடவை மற்றும் ஆடைக் கைத்தொழிலுக்கான புதிய

தொழில் நுட்பத்தையும் வழங்குமென எதிர் பார்க்கப்படுகிறது.

## கைத்தொழில் துறைக்கான ஊக்குவிப்புக்கள்

முதலீட்டுச்சபை ஊக்குவிப்புக்களில் ஒழுங்கற்ற தன்மை காணப்பட்டமையால், முதலீட்டுச்சபை ஊக்குவிப்புக்களை ஒழுங்குமுறைப்படுத்தும் நோக்கத்துக்காகவும் முன்னுரிமைத்துறை முதலீட்டு நடவடிக்கைகளுக்கு மட்டுமே ஊக்குவிப்புக்கள் வழங்கப்படுவதனை உறுதிப்படுத்துவதற்காகவும் அவ்வொழுங்கற்ற தன்மையைச் சரிசெய்வதற்காக 2000ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் எடுத்துரைப்புக்கள் மேற் கொள்ளப்பட்டன. 1994 இற்கு முன்னர் முதலீட்டுச்சபையுடன் உடன்படிக்கைகளில் கையெழுத்திட்ட ஏற்றுமதிசார்பற்ற முதலீட்டுச்சபைத் தொழில் முயற்சிகளின் செயற்றிட்டச்சார்புடைய மூலதனப் பொருட்களினது இறக்குமதி தொடர்பில் காலவரையறையின்றி சுங்கத் தீர்வையிலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ளது. எனினும் அத் தொழில் முயற்சிகள் வர்த்தகத் தொழிற்பாடுகளைத் தொடங்கும் வரைக்குமே அத்தகைய விலக்களிப்புக்கள் கிடைக்கக் கூடியதாகவிருக்கும் என்பதே தற்போதைய நடைமுறையாகும். இதனால், ஏற்றுமதி சாராத தொழில் முயற்சிகளுக்கு காலவரையறையின்றி வழங்கப்பட்ட விலக்களிப்பானது 2001ஆம் ஆண்டு ஏப்பிரல் 1 இலிருந்து மீளப் பெறப்பட வேண்டுமென 2000ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தில் எடுத்துரைப்புச் செய்யப்பட்டுள்ளது.

முன்னுரிமைத்துறை முதலீடுகளுக்கு மட்டுமே ஊக்குவிப்புக்கள் வழங்கப்பட்டுள்ளமையை உறுதிப்படுத்துவதற்காக, முதலீட்டுச்சபைச்சட்டத்தின் 17ஆம் பிரிவின் கீழான அனைத்து ஊக்குவிப்பு வகைகள் மீதும் ஆகக்குறைந்த முதலீட்டு எல்லையை விதிப்பதற்கான எடுத்துரைப்பும் 2000ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் மேற்கொள்ளப்பட்டது. புவியியல் ரீதியில் கைத்தொழில்கள் பரந்தமைவதை ஊக்குவிப்பதற்காக 5 ஆண்டுகள் மற்றும் 8 ஆண்டுகள் கொண்ட வரி விடுப்பை உள்ளடக்கிய ஊக்குவிப்புப் பொதியொன்று 1998 வரவு செலவுத் திட்டத்தில் அறிமுகப்படுத்தப்பட்டது. தற்போது வரிவிடுப்பு குறிப்பிட்ட கைத்தொழிற் பூங்காக்களுக்குள் அமைந்துள்ள தொழில் முயற்சிகளுக்கு அல்லது விரும்பத்தக்க அல்லது அதிகம் விரும்பத்தக்கதெனப் பகுக்கப்பட்ட ஏற்றுமதிப் பதனிடல் வலயங்களுக்கு மட்டுமென வரையறுப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. ஏற்றுமதி சார்ந்தவையாகக் காணப்படாவிட்டாலும், ஆகக்குறைந்தது ரூ.500 மில்லியன் முதலீட்டினைக் கொண்ட பாரிய அளவுச் செயற்றிட்டங்களுக்கு 1996 வரவு செலவுத்திட்ட எடுத்துரைப்புக்களின் கீழ் வழங்கப்பட்ட 10 ஆண்டு வரிவிடுப்புக்குப் பதிலாக ஏற்றுமதிச்சார்பற்ற செயற்றிட்டங்களுக்கும் 2000ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்ட எடுத்துரைப்புக்களின் கீழ் 15 சதவீதங்கொண்ட சலுகை வரிவீதமொன்று விதிக்கப்பட்டது. "சிறப்புச் செயற்றிட்டங்கள்" என அழைக்கப்படும் ரூ.3,500 மில்லியனுக்கும் மேலான மொத்த முதலீட்டைக் கொண்ட ஏற்றுமதிச்சார்பற்ற செயற்றிட்டங்களும், பாரிய அளவிலான ஏற்றுமதி சார்ந்த செயற்றிட்டங்களும் தொடர்ந்தும் வரிவிடுப்பை அனுபவிக்கும். ஊர்திகளின் மாற்றீடுக்காக முதலீட்டுச் சபைத் தொழில் முயற்சிகளுக்கு வழங்கப்பட்டிருந்த தீர்வையற்ற வசதியும் 2000ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் மீளப் பெறப்பட்டது. இப்புதிய ஒழுங்கு விதிகளின் கீழ் முதலீட்டுச்சபையின் முதலீட்டு வழிகாட்டல்களின் நியதிகளில் புதிய செயற்றிட்டங்களை உருவாக்கும் தொழில் முயற்சிகளுக்கே ஊர்திகளுக்கான தீர்வையற்றவசதி வழங்கப்படும்.

உள்நாட்டுத் தயாரிப்பாளர்களால் முன்னேற்றமடைந்த தொழில்நுட்பம் பயன் படுத்தப்படுதலை ஊக்குவிப்பதற்காக 1996இல் அறிமுகப்படுத்தப்பட்ட இறை ஊக்குவிப்புத் திட்டத்துக்கு தொழில் முயற்சியாளர்களின் சாதகமான பதிலினால் தூண்டப்பட்டு இத்திட்டமானது 2000ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் மேலும் இரண்டு ஆண்டுகளுக்கு நீடிக்கப்பட்டது. இத் திட்டத்தின் கீழ் முன்னேற்றமானதும் நவீனத்துவமானதுமான பொறிகளை பல தயாரிப்பாளர்கள் இறக்குமதி செய்து, தமது உற்பத்திச் செயல்முறையை நவீனமயப்படுத்தினர். உள்நாட்டுத் தயாரிப்பாளர்கள் உற்பத்தி அலகுச் செலவைக் குறைக்கவும் உற்பத்தித்தரம் மற்றும் உற்பத்தியாக்கத்தை அதிகரிக்கவும் இது உதவியது. இத்திட்டம் ஒப்புதலளிக்கப்பட்ட பொறி மற்றும் கருவிகளின் தீர்வையற்ற இறக்குமதியையும் மிகையான இலாபங்களின் மீது ஐந்தாண்டு வரிவிலக்கொன்றையும் வழங்குகிறது. 2000ஆம் ஆண்டில் இத்திட்டத்தின் கீழ் 18 புதிய செயற்றிடடங்களுக்கும் ஏற்கனவேயுள்ள 26 செயற்றிட்டங்களுக்கும் ஒப்புதல் வழங்கப்பட்டதுடன், முறையே ரூ.1,156 மில்லியன் கொண்டதும் ரூ.1,306 மில்லியன் கொண்டதுமான மொத்த முதலீட்டுக் கடப்பாட்டினையும் கொண்டிருந்தது. ஒப்புதலளிக்கப்பட்ட இச் செயற்றிட்டங்கள் 1,839 ஆட்களுக்கு புதிய தொழில்வாய்ப்புக்களை உருவாக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. 1995 நவெம்பரில் இத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து, 2000ஆம் ஆண்டு திசெம்பர் இறுதிவரையிலும் 199 புதிய செயற்றிட்டங்களுக்கும் நடைமுறையிலுள்ள 448 செயற்றிட்டங்களுக்கும் ஒப்புதல் வழங்கப்பட்டிருந்தது. இச் செயற்றிட்டங்களுக்கான முதலீட்டுக் கடப்பாடு முறையே ரூ.14,526 மில்லியனாகவும் ரூ. 28,105

சிறப்புக்குறிப்பு 6

# பயன்தரக்கூடிய கைத்தொழிற் கொள்கையொன்றுக்கு வழிகாட்டல்கள்

## அறிமுகம்

எமது பொருளாதாரத்தில் முக்கியமான துறையொன்றாகக் காணப்படும் கைத்தொழிலை, முனைப்புடைய கொள்கைகளின் தொகுதியினூடாக ஊக்குவிக்க வேண்டிய தேவை காணப்படுகின்றது. கைத்தொழில் அபிவிருத்தியை ஊக்குவிப்பதற்காக கொள்கைகளின் தொடரொன்றை ஆரம்பித்திருந்த ஜப்பானிய அரசினாலேயே இது முதலில் அடையாளம் காணப்பட்டது. (இனோ 1993)[1] ஜப்பானியக் கைத்தொழிலினால் 1960 களிலும், 1970 களிலும் அடையப்பட்ட குறிப்பிடத்தக்க வளர்ச்சியின் காரணமாக இக் கோட்பாடு பன்னாட்டு கவனத்தை ஈர்த்திருந்தது. மாற்றமடையும் உலகலாவிய பொருளாதாரச் சூழலுடன் இணங்கிச் செல்லும் விதத்தில் காலத்துக்குக் காலம் ஏற்படும் கொள்கைத் திருத்தத்தினால் கைத்தொழிற் கொள்கையினது ஜப்பானிய அனுபவத்தின் அடிப்படையில் கிழக்காசியாவில் வெற்றிகரமாக கைக்கொள்ளப்பட்டது. பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் அபிவிருத்திக்கான அமைப்புத் தொகுதியிலுள்ள அபிவிருத்தியடைந்த நாடுகள் பலவற்றில் யுத்தத்துக்கு பிந்திய காலப்பகுதியில் கைத்தொழிற் கொள்கையானது தீவிரமான முறையில் பொருளாதார கொள்கையுடன் இணைய ஆரம்பித்தமை, 1970 களில் ஐரோப்பியாவிலும், ஐக்கிய அமெரிக்க நாடுகளிலும் இடம்பெற்ற கொள்கை விவாதங்களினால் எடுத்துக் காட்டப்பட்டது.

அரசினால், தெரிந்தெடுக்கப்பட்ட கைத்தொழில்களுக்கு வழங்கப்பட்ட தீவிரமான ஆதரவு, மட்டுப்படுத்தப்பட்ட அளவிலான வெற்றியையே கொடுத்துள்ளமையை உலக அனுபவம் காட்டுகிறது. இதற்குப் பதிலாக அரசினால் பொதுவாக கைத்தொழில்களின் வளர்ச்சிக்கு உதவியளிக்கப் பட்டமையே தாக்குப்பிடிக்கக்கூடிய அடிப்படையில் கைத்தொழிலை ஊக்குவித்தது. இவ்வழிமுறைகள், பொருளாதார தாராளமயமாக்கல், ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி, தேர்ச்சி மற்றும் மனித மூலதன அபிவிருத்தி ஆகியவற்றை உள்ளடக்கியதுடன் நாட்டின் கைத்தொழில் உற்பத்திகளின் போட்டித்தன்மையை அதிகரிப்பதில் பங்களிப்பையும் வழங்கியிருந்தன.

## கைத்தொழிற் கொள்கைகளிலான புதிய பரிமாணங்கள்

கடந்த காலத்தில், பல நாடுகள் தேசிய அல்லது பிரதேச பொருளாதார அபிவிருத்தியை அதிகரிக்கச் செய்யவும், வேலைவாய்ப்பை விரிவடையச் செய்வதற்கு அல்லது பாதுகாப்பதற்கும் சென்மதி நிலுவையை அதிகரிக்க அல்லது உள்நாட்டு தொழில் நுட்பவியலில் புதிய மாறுதல்களை ஏற்படுத்தவுமென குறிப்பிட்ட துறைகளிலான கைத்தொழிலுற்பத்தியை விாவாக்குவதற்கான கொள்கைகளைத் தொடர்ச்சியாக மேற்கொண்டிருந்தன. அதிகளவுக்கு அபிவிருத் தியடைந்த நாடுகளில் 1970 களின் நடுப்பகுதியில் அரம்பித்த குறைந்த பொருளாதார வளர்ச்சியுடனான நீடித்த காலப்பகுதியில், மரபுரீதியான தேசிய கைத்தொழிற் கொள்கைகள் அதிக பயனுடையனவாக் அமையவில்லை. தொழில் முயற்சிகள் மாற்றுக் கொள்கைகளையும் உலகலாவிய உபாயங்களையும் பின்பற்றத் தொடங்கியதுடன், அவர்களது முதலீடுகள், கவர்ச்சிகரமான சந்தை வாய்ப்புக்கைள அவர்கள் கருதுமிடங்களுக்கும், தேர்ச்சி பெற்ற தொழிலாளர் ஆற்றல் வாய்ந்த கட்டமைப்பு மற்றும் சாதகமான ஒழுங்கமைப்பு முறையை ஆகிய உள்ளீடுகளை நோக்கியும் சென்றன. வர்த்தகத்தின் தாராள மயமாக்கலும் உலகெங்குமுள்ள சந்தைகளினூடாக முதலீடும், உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு போட்டிகளுக்கு அதிகளவில் உட்பட்டவையாகக் காணப்படுகின்றன."அரசாங்கமே நன்கு அறியும்" போன்ற கொள்கைகளின் அடிப்படையிலான கருத்துக்கள் செலவு மிக்கவையாக காணப்பட்டதுடன் அரசின் வரவுசெலவுத்திட்டங்கள் சுருக்கப் பட்டமையினால் இவை தாக்குப்பிடிக்க முடியாதனவாகவும் காணப்பட்டன. இதனால் திரவத்தன்மைக் கட்டுப்பாடுகள் காணப்படும் சூழ்நிலையொன்றில் தொழிற்படும் அரசாங்கங்கள் வெற்றியைக் கொண்டனவாகக் காணபட வில்லையென்பது வெளிப்படையாகியது. இதன் விளைவாக, தற்போது வியாபாரச் சூழலை கொள்கைகளை நோக்கியே கவனமானது பெயர்ந்துள்ள வேளையில் வர்த்தகம் மற்றும் முதலீட்டுக்கான தடைகளும் அகற்றப்படும்.

ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி, உட்கட்டமைப்பு, சூழல் பாதுகாப்பு மற்றும் புதிய வியாபார அலுவல்களைத் தொடங்குதலும் அவற்றின் வளர்ச்சியும் போன்ற பொருளாதார வழிமுறைகளுக்கு இடமளிக்கும் வகையிலான துறைவகைப்படியான உதவியினால்

1. இனோ றுச்சிரோ 1993கிழக்காசிய கைத்தொழில் கொள்கையில் கிழக்காசிய கைத்தொழில் கொள்கை மாதிரியொன்று கிரோகிசா கோமா மற்றும் சுஜிறோ ஹாட்டா யப்பான் வெளிநாட்டு வர்த்தக அமைப்பு- டோக்கியோ , யப்பான்

## சிறப்புக்குறிப்பு (தொடர்ச்சி)

கைத்தொழிலுக்கான ஆதரவில் கவனம் செலுத்துதலும் மாற்றமடைந்தது. உதவிக் கொடுப்பனவுகள் மற்றும் கைத்தொழில் உதவி ஆகியன முதலீட்டையும் மற்றும் தேர்ச்சி மற்றும் அறிவினைப் பெறுவதையும் அதிகரித்த அளவில் இலக்காகக் கொண்டுள்ளன. போட்டித்தன்மையுடைய அழுத்தத்தின் கீழ் வெற்றிகரமான நிறுவனங்கள் தாம் போட்டிபோடத் தகுதி குறைந்தவிடத்து அந்த நடவடிக்கைகளிலிருந்து பின்வாங்கிக் கொண்டதுடன் அதற்குப் பதிலாக தமது மையமான செயல் வல்லமைகளில் கவனத்தைச் செலுத்தின. இந் நிறுவனங்கள் உற்பத்தி அபிவிருத்தி, உற்பத்தி, கொள்வனவு மற்றும் சந்தைப்படுத்தல் ஆகியன தொடர்பில் ஏனைய நிறுவனங்களுடன் இணைந்திருந்ததுடன் வெளியேயுள்ள வழங்குநர்களிடமிருந்து வளர்ச்சியடையும் வியாபாரப் பணிகளைக் கொள்வனவு செய்திருந்தன. நிறுவனத்துக்குள்ளேயும், வெளியேயுமுள்ள பங்குதாரர்கள் மற்றும் துணை ஒப்பந்தகாரர்கள் ஆகியோருக்கிடையே முக்கியமான தகவல்களின் சீரான பாய்ச்சலை உறுதிப்படுத்தும் வகையில், அறிவு சார்ந்த தகவல் வலையமைப்பில் அதிகரித்தளவில் தங்கியிருக்கும் போக்குக் காணப்படுகிறது.

குறிப்பாக அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளிலுமுள்ள சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சிகள் பல நன்மைகளைக் கொண்டுள்ளதுடன் அளவுச் சிக்கனக்குறைவு, சிறியதொரு உள்நாட்டுச் சந்தை, முகாமை மற்றும் தொழில் சார் நிபுணத்துவம் போதாமை, தளர்வான தொழில் முயற்சியாளர் பண்பு மற்றும் தொழில்நுட்பம் போதிய அளவில் பயன்படுத்தப்படாமை போன்ற குறிப்பிடத்தக்க பிரச்சனைகளை எதிர்நோக்குகின்றன. இப் பிரச்சனைகளை எதிர்கொள்வதற்காக சிங்கப்பூர் போன்ற போட்டித்தன்மையுடைய நாடுகள் சிறப்புக்கொள்கை வழிமுறைகளைக் கைக்கொண்டுள்ளன.[2] அளவுச் சிக்கனக் குறைவுக்கு பொருளாதாரக் குழுக்களை உருவாக்குவதற்கு சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சிகளுக்கு உதவுதல், பெறுமதிச் சங்கிலித்தொடரின் ஏனைய உறுப்பினர்களுடன் அவற்றை இணைப்பதற்கு மின்னியல் தரவுகளுக்கிடையிலான மாற்றுமுறைகளை விருத்திசெய்தல் மற்றும் கூடிய தரத்தையும் உற்பத்தியாக்கத்தையும் நிறுவுவதில் அவற்றுக்கு உதவுதல் ஆகியவற்றின் மூலம் தீர்வு காணப்பட்டது. சிறிய உள்நாட்டுச் சந்தையொன்றின் பிரச்சனை சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சிகளை வெளிநாட்டுப் பங்காளர்கள் மற்றும் ஏனைய பல்தேசிய நிறுவனங்களுடன் வியாபாரப் பங்குடைமையில் ஈடுபடுவதை ஊக்குவித்தல், தொழிலின் அடையாளச் சின்னத்தின் தரத்தை உயர்த்துவதுடன் பெருமளவிலான சந்தை வாய்ப்புக்களுக்கான முயற்சிகளை மேற்கொள்ளல் ஆகியவற்றின் மூலம் தீர்க்கப்பட்டது. முகாமைக் குறைபாடுகளை நிவர்த்தி செய்யவும், தொழில்சார் நிபுணத்துவத்தை அதிகரிக்கவுமென சிறப்பு நிகழ்ச்சித் திட்டங்கள் முன் வைக்கப்பட்டிருந்தன. வியாபாரதிட்ட ஆராய்வு முறைகளை விருத்தி செய்தல், இரண்டாம்நிலை மற்றும் மூன்றாம் நிலைக் கல்விப் பாடத்திட்டத்தைத் தரமுயர்த்தல் போன்ற வழிமுறைகள், சாதகமான தொழில் முயற்சியாளர் கலாசாரமொன்றை விருத்தியாக்குவதற்காக கைக் கொள்ளப்பட்டன.

### இலங்கையின் அனுபவம்

சுதந்திரம் பெற்ற காலத்திலிருந்து இலங்கையின் கைத்தொழிற் கொள்கையின் கவனம் முன்னைய அரசுகளின் சமூக-அரசியல் மற்றும் பொருளாதாரக் கோட்பாடு மற்றும் பன்னாட்டுப் பொருளாதார சூழலிலான மாற்றங்கள் ஆகியவற்றுக்கேற்ப வேறுபட்டுக் காணப்பட்டது. 1957இல் எண் 48 கொண்ட அரச கைத்தொழிற் கூட்டுத்தாபனச்சட்டம் இயற்றப் பட்டமையினால் கைத்தொழிற் கொள்கையில் முக்கியமான பெயர்ச்சியொன்று காணப்பட்டது. இச்சட்டம், அரச உடமை1யின் கீழ் எந்தவிதமான கைத்தொழில் பொறுப்பேற்பினையும் நிறுவவும், கொண்டு நடாத்தவுமான உரிமையை அரசுக்கு வழங்கியது. 1960-1965 காலப்பகுதியில், கைத்தொழிற் கொள்கை பற்றிய வலியுறுத்தலானது, வெளிநாட்டு ஒதுக்குகள் வீழ்ச்சியடைந்து செல்கின்றமையினால் இறக்குமதிப் பதிலீட்டுக் கைத்தொழில் மயமாக்கலிலேயே மேற்கொள்ளப்பட்டிருந்தது. எனினும் 1965இல் பதவிக்கு வந்த அரசு, பொதுவான இறக்குமதிப் பதிலீட்டுக் கைத்தொழில் மயமாக்கலினது வரைச்சட்ட அமைப்புக்குள் ஏற்றுமதி • ஊக்குவிப்புக் கைத்தொழில்களின் மீது பெருமளவான அழுத்தத்தைப் பிரயோகித்திருந்தது.

1970களில் அரசின் கைத்தொழிற் கொள்கையானது, இறக்குமதிப் பதிலீட்டுக் கைத்தொழில்களின் ஊக்குவிப்பினூடாக அரசதுறையினால் வழிநடாத்தப்பட்ட அபிவிருத் தியிலேயே பெருமளவுக்குத் தங்கியிருந்தது. இக் காலப்பகுதியில், அரசின் தலையீடும் மற்றும் கைத்தொழில் அரசின் நேரடியான பங்கேற்பு ஆகியன கணிசமான அளவில் அதிகரித்திருந்தன. 1970இன்

2) சிங்கப்பூரின் போட்டித்தன்மை பற்றிய அறிக்கை 1998 நவெம்பர் சிங்கப்பூர்

## சிறப்புக்குறிப்பு (தொடர்ச்சி)

வியாபாரக் கையேற்புச் (கைப்பற்றுதல்) சட்டத்தின் கீழ் அரசு பல தனியார் தொழில் முயற்சிகளைத் தேசிய மயமாக்கியுமிருந்தது. இறக்குமதிப் பதலீட்டு உபாயங்கள் மீதான அழுத்தம் மற்றும் கைத்தொழில் நடவடிக்கைகளில் அரசின் பெருமளவிலான தலையீடு ஆகியன 1970-1977 காலப்பகுதியில் படிப்படியாகத் தீவிரமடைந்தன.

1977இல் ஆரம்பிக்கப்பட்ட பொருளாதாரக் கொள்கைச் சீரமைப்புக்களின் கீழ் பொருளாதாரக் கொள்கையில் முக்கியமாக ஏற்றுமதிச்சந்தைகள் மீது கவனம் செலுத்துதலும், தனியார்துறை மீது அதிகளவில் தங்கியிருத்தலுமாகிய முற்றான மாற்றமொன்று காணப்பட்டிருந்தது. உள்நாட்டுக் கைத்தொழில்களுக்கு வழங்கப்பட்ட தீர்வைப் பாதுகாப்பின் அளவு குறைக்கப்பட்டு, பன்னாட்டுப் போட்டிக்கு இவை படிப்படியாக விடப்பட்டன. தீர்வை முறையினை இலகுபடுத்தியமை, செலாவணி வீதத்தை ஒருமுகப்படுத்தியமை, வெளிநாட்டுச் செலாவணிக் கட்டுப்பாடுகள் பலவற்றை நீக்கியமை மற்றும் இதுவரையில் ஆரம்பத்தில் அரசதுறைக்கு ஒதுக்கப்பட்டிருந்த துறைகளை தனியார்துறையில் ஆரம்பித்தல் ஆகியன கைத்தொழில் துறை நடவடிக்கைகளில் குறிப்பிடத்தக்க தாக்கமொன்றை ஏற்படுத்தின.

### வழிகாட்டல்கள்

மரபுரீதியானதும், பௌதீக மூலவள அடிப்படையிலானதுமான கைத்தொழில்கள் சார்புரீதியில் குறைந்த முக்கியத்துவமுடையனவாகக் காணப்பட்ட வேளையில், உயர் தொழில்நுட்ப மற்றும் உயர் பெறுமதி கூட்டப்பட்ட கைத்தொழில்கள் மற்றும் பணிகள் சிறப்பாக தயாரிப்புடன் தொடர்புடையதும், தகவல் தொழில்நுட்பத்தில் மூலதனமிடப்பட்டதுமான வாணிபப் பணிகள் கடந்த பத்தாண்டுகளில் வேகமாக விரிவடைந்தன. அதே நேரத்தில் தொழில்நுட்ப ரீதியிலான முன்னேற்றத்தின் உண்மையான விளைவு பொருளாதாரத்தில் தொழில்நுட்பம் எந்தளவுக்குப் பரவியுள்ளதென்பதனாலும், எத்தகைய பலன் தரக்கூடியவையென்பதனாலுமே தீர்மானிக்கப்பட்டது. தகவலில் தேர்ச்சி பெறுதல் மற்றும் அறிவு செறிந்த உற்பத்தி முறைகளின் அறிமுகம் ஆகியன போட்டித்தன்மைக்கும் மற்றும் நீடித்திருப்பதற்கும் கூட முக்கியமானதொன்றாகக் காணப்பட்டன. இவ்விடயத்தில் அரசின் பங்கு உலகளாவிய வர்த்தகத்தை இலகுவாக்குதல், வாணிபச் சூழலை முன்னேற்றுதல் மற்றும் சந்தைகளின் போட்டித்தன்மையை உயர்த்துதல் ஆகியவற்றுடன் ஒழுங்குமுறையிலான சீரமைப்பின் பயன்பாட்டை உள்ளடக்கி, முன்னேற்றமடைந்த கூட்டு நடத்தையைத் தூண்டுதல், அறிவு மற்றும் மனித மூலதனத்திலான முதலீட்டு நன்மைகளை நிறுவனங்கள் சிறந்த முறையில் பயன்படுத்துவதை இயலச்செய்தல் மற்றும் சிறிய மற்றும் நடுத்தர அளவுத் தொழில் முயற்சிகளின் சிறப்புத் தேவைகளை ஈடுசெய்தல் ஆகியனவாகக் காணப்பட்டிருந்தது. கைத்தொழிற் கொள்கையின் இன்றியமையாத பண்புகள் மற்றும் கொள்கை உபாயங்கள் ஆகியன பின்வருமாறு தொகுக்கப்படலாம்.

### பொதுவான கொள்கை நெறிப்படுத்தல்

- நீண்ட காலத்துக்கு பாதுகாப்பு உத்தரவாதத்தை அரசு வழங்க முடியாதென்பதால் உலகளாவிய போட்டியை எதிர்நோக்குவதற்குக் கைத்தொழிலாளர்கள் ஊக்குவிக்கப்பட வேண்டும். இன்றியமையாத உட்கட்டமைப்பு மற்றும் அரச பொருட்களை வழங்குவதுடன் நன்கு அறிவிக்கப்பட்டதும் தெளிவானதும், முன் கூறத்தக்கதும் மற்றும் நம்பிக்கைக்குரியதுமான பேரண்டப் பொருளாதாரக் கொள்கைகளுடனான பேரண்டப் பொருளாதார உறுதிப்பாட்டினை உறுதிப்படுத்துதலும் வேண்டும்.
- அரசு, இருபுடை மற்றும் பல்புடை வர்த்தக உடன்பாடுகளை ஊக்குவித்தல், குவித்தலுக்கெதிரான கொள்கைகள் மற்றும் இலகுபடுத்தப்பட்ட தீர்வைக் கொள்கைகள் போன்ற பொருத்தமான வெளிநாட்டு வர்த்தகக் கொள்கைகளை அரசு கைக்கொள்ளுதல் வேண்டும்.
- ஏற்றுக்கொள்ள முடியாத சமூக மற்றும் பிரதேச விளைவுகளைக் கையாள்வதற்கு குறிப்பிட்ட சமூக மற்றும் பிரதேசக் கொள்கைகள் ஏற்படுத்தப்பட வேண்டும்.
- அறிவின் மேம்பாடு, மனித மூலதனம் மற்றும் தொழில்நுட்பம்
- இயற்கை மூலவளங்களின் கிடைக்கத்தக்க தன்மை பொருளாதார வளர்ச்சிக்கு இனிமேலும் தேவைப்படாததால் பன்னாட்டுப் போட்டித்தன்மைக்கான அடிப்படை அறிவும் மனித மூலதனமுமாகும். கைத்தொழிற்றுறை " மூலவளத்தை அடிப்படையாகக் கொண்ட" கைத்தொழில்களிலிருந்து "அறிவை அடிப்படையாகக் கொண்ட"

## சிறப்புக்குறிப்பு (தொடர்ச்சி)

கைத்தொழில்களுக்கும், "தொழில்நுட்ப செறிவு" கைத்தொழில்களுக்கும் நகர வேண்டும். கைத்தொழிற் கொள்கை பலமான தொழில்நுட்ப இயலளவு மற்றும் விரைவூக்கம், மனப்பாங்கு, நல்ல வர்த்தக மனப்பாங்கு என்பவற்றில் ஆக்கமூட்டும் துடிப்புணர்வான தொழில் முயற்சியாளர்களின் கலாச்சாரத்தையும் கட்டியெழுப்புவதற்கு துணையாக ஓர் சூழலை உருவாக்க வேண்டும்.

- தொழில்நுட்பத்தில் நடைமுறையில் உள்ள செய்தியைப்பெறும் வகையில் கைத்தொழிலாளர்களுக்கு செய்தி மற்றும் தொடர்பூட்டல் தொழில்நுட்பத்தில் முன்னேற்றம் உறுதிப்படுத்த வேண்டியிருப்பதுடன் உலகின் எஞ்சிய பகுதியுடன் மின்னியல் மூலமாக இணைத்துக் கொள்வதற்கும் இக் கொள்கை அவர்களை ஊக்கப்படுத்த வேண்டும்.
- இக் கொள்கை முக்கிய கைத்தொழில் கொத்தணிகளிடையேயும் அவற்றிற்குள்ளேயும் பரந்த அளவிலான விரிவாக்கத்தையும் புது வழியமைப்புக்களையும் மேம்படுத்துவதுடன், பெறுமதி வாய்ந்த இக் கைத்தொழில்களிடையே அறிவால் உந்தப்பட்ட நடவடிக்கைகளையும் மேம்படுத்த வேண்டும்.
- மனித மூலதனத்தின் அபிவிருத்தி "அறிவை அடிப்படையாகக் கொண்ட கைத்தொழில்" ஆக மாற்றமுறும் கைத்தொழிலுக்கான முக்கிய உபாயமாக அமைய வேண்டும் தொழிற் படை புதிய தொழில்நுட்பம் மற்றும் பொருட்களின் பயன்பாட்டில் உச்சப்படுத்தலை அடைவதற்கு பயிற்றிவிக்கப்படுவதோடு விரைவூக்கத்துடனும் புதிய வழிமுறைகளுடனும் அவற்றைப் பயன்தரும் வகையில் இணைத்துக்கொள்ள வேண்டும்.
- நடைமுறையிலிருக்கும் தொழிற்சந்தை விதிமுறைகள் புதிதாக விரிவடைந்து வரும் துறைத்துறைகளுக்கு தொழிலாளர்களின் சுதந்திரமான பாய்ச்சலை முன்னேற்றுவதற்குத் தேவையான புதுப்பித்தலுக்குத் தேவையைக் கொண்டிருப்பதுடன், இது தொழிலாளர் சந்தையின் நெகிழ்ச்சியையும் தொழிலாளர் உற்பத்தித் திறனையும் எளிதாக்கும்.
- ஓர் பொருத்தமான தொழிற்படை அபிவிருத்தி செய்யப்பட வேண்டியுள்ளதுடன், கைத்தொழில் தேவைகளுக்கு உதவுவதற்காக தேவையான வெளிநாட்டு திறனுடனான செயற்றிறன் கவரப்பட வேண்டும்.

### முதலீடு

- கைத்தொழிலாளர்கள் மூலதனம், புதிய தொழில்நுட்பம், எண்ணக்கருக்கள், மூலவளங்கள் மற்றும் சந்தைகளுக்காக உலகளாவிய மற்றும் பிராந்திய மையங்களைத் தேடிச் செல்வதை கொள்கை,ஊக்குவிக்க வேண்டும்.
- மரபுவழி இயற் சொத்துக்களான கட்டடங்களட பொறி கருவிகள் என்பனவற்றுக ்கெதிராக தொழில்நுட்பம், அறிவு, திறன்கள், வர்த்தக நிறுவனங்கள், மென்கலம் போன்ற சொத்துக்களில் கூடிய முதலீட்டை மேற்கொள்வதற்கு கொள்கை, ஊக்குவிக்க வேண்டும்.
- போட்டித்தன்மைக் கொள்கையும் கம்பனி ஒழுங்குமுறைப்படுத்தலும்
- திறமையுடன் தொழிற்படாத சந்தைப் பொறிமுறைகளில் தலையீட்டிற்கான சட்டமுறைகள் அறிமுகப்படுத்தப்படல் வேண்டும்.
- நீண்டகாலத்தில் கூடிய தீர்வைகள் மற்றும் உதவிக் கொடுப்பனவுகள் போன்ற வழமையான தற்காப்புக் கருவிகள் போதியளவு புகலிடத்தை வழங்க முடியாததால் கொள்கை தற்காப்பிலிருந்து விலகிச்செல்ல வேண்டும்.
- உற்பத்திச் செலவை விட குறைந்த விலையில் பொருட்களை நாட்டிற்குள் கொண்டு வருவதை தடைசெய்வதற்கும், உண்மை நிலையை மறைப்பதற்கான தீர்வைக்கும் மற்றும் நம்பிக்கை விரோதத்திற்குமான சட்டவாக்கத்தைக் கொண்டு வருவதன் மூலம் உள்நாட்டுச்சட்டம் பலப்படுத்தப்பட வேண்டியிருப்பதுடன், அவ்வாறான சட்டவாக்கத்திற்கான நிறுவனரீதியிலான அமைப்புவேலை நிறுவப்பட்டு பலப் படுத்தப்பட வேண்டும்.

### சிறப்புக்குறிப்பு (தொடர்ச்சி)

- கம்பனி ஒழுங்குமுறைப்படுத்தலில் புலப்பாட்டுத் தன்மையை அதிகரித்தல்
- வாணிப மீள் அமைப்பிற்கும் ஒடுக்குதலுக்குமான விசேட சட்டவாக்கத்தை அறிமுகப்படுத்தல்.

**ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திக் கொள்கை**

- கைத்தொழில்களில் ஆராய்ச்சியையும் அபிவிருத்தியையும் ஊக்குவிப்பதற்கான உந்துகை வழங்குதல்.
- பல்கலைக் கழகங்கள், ஆராய்ச்சி நிறுவனங்கள் மற்றும் தனியார்துறையினரிடையே உற்பத்தி அபிவிருத்தி, வர்த்தகச் சின்னத்தின் அபிவிருத்தி, உற்பத்திகளின் புதிய கண்டுபிடிப்பு என்பனவற்றுக்காக இணைந்த ஆராய்ச்சி அபிவிருத்தி செயற்றிட்டங்களை ஊக்குவித்தல்.
- செய்தித் தொழில்நுட்ப விரிவாக்கக் கருவி வசதியுடன் இணைக்கப்படும் பல்கலைக் கழகங்கள், செய்தித் தொழில்நுட்ப பயிற்சி நிறுவனங்கள் மற்றும் பல்தேசிய கம்பனிகளை ஊக்குவித்தல்.

**சிறிய நடுத்தர தொழில் முயற்சிகளை அபிவிருத்தி செய்தல்.**

- விதைக்கான மூலதனத்தை வழங்குவதற்கு சிநதொ இற்கான தொழில் முயற்சி மூலதன உதவி மற்றும் கொடுகடன் உத்தரவாதமளிக்கப்பட்ட திட்டங்களை வழங்குதல்.
- பன்னாட்டு சந்தை வாய்ப்பிற்கான உட்கட்டமைப்பை அபிவிருத்தி செய்தல்.
- முகாமைத்துவ திறன்கள், தொழில்துறை சார்ந்த மற்றும் தொழில் முயற்சியாளர் கலாச்சாரத்தை அதிகரிப்பதற்கு இரண்டாம் நிலை, மூன்றாம் நிலைக் கல்வி பாட விதானத்தை அபிவிருத்தி செய்தல்.

மில்லியனாகவும் விளங்கியிருந்தது. இச் செயற்றிட்டங்கள் 40,421 ஆட்களுக்குப் புதிய தொழில் வாய்ப்புக்களை உருவாக்கக் கூடியதாகவிருக்குமென மதிப்பிடப் பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் 409 செயற்றிட்டங்கள் 2000ஆம் ஆண்டின் இறுதியில் ரூ.11,430 மில்லியன் பெறுமதியுடைய பொறி மற்றும் கருவிகளை இறக்குமதி செய்தன. 2000ஆம் ஆண்டு திசெம்பர் இறுதியில் ஒப்புதலளிக்கப்பட்ட மொத்தச் செயற்றிட்டங்கள் 647இல் கொழும்பு மாவட்டத்தில் 45 சதவீதமானவையும் 30 சதவீதமானவை கம்பகா மாவட்டத்திலும் மற்றும் 7.0சதவீதமானவை களுத்துறை மாவட்டத்திலும் அமைந்திருந்தன.

1998இல் புடவை இறக்குமதிகள் தாராளமயமாக்கப்பட்டமையுடன், உள்நாட்டுத் தயாரிப்பாளர்கள் தமது ஆலைகளை நவீனமயப்படுத்துவதையும், தமது உற்பத்திச் செயல்முறையில் புதிய தொழில்நுட்ப உருவாக்கத்தை அறிமுகப்படுத்துவதையும் ஊக்குவிப்பதற்கென உள்நாட்டுப் புடவைக் கைத்தொழிலுக்கான மீளமைப்பு நிகழ்ச்சித் திட்டமொன்றை அரசு அறிமுகப்படுத்தியது. இவ்வழிமுறையானது, உள்நாட்டு ஆலைகளின் உற்பத்தித் தரத்தைப் பன்னாட்டுத் தரத்துக்கு உயர்த்துவதையும், உள்நாட்டு ஆலைகளின் உற்பத்தியை அதிகரிப்பதையும் இலக்காகக் கொண்டிருந்தது. இத்திட்டத்தின் கீழ் 130 தயாரிப்பாளர்கள் 2000ஆம் ஆண்டு இறுதியில் நிவாரணத்துக்கு விண்ணப்பித்திருந்தனர். இவற்றில் 126 விண்ணப்பங்கள் நிவாரண வழிமுறைகளுக்காக கவனத்திலெடுக்கபபட்ட வேளையில், எஞ்சிய 4 விண்ணப்பங்களும் கவனத்தின் கீழுள்ளன. 2000 ஆண்டு திசெம்பர் இறுதியில், ரூ.4,004 மில்லியன் கொண்ட வெளிநின்ற மொத்தப்படுகடன் புடவைப்படுகடன் மீட்சி நிதியத்திற்கு மாற்றப்படுவதற்கென அடையாளங் காணப்பட்டுள்ளது. படுகடன் மீட்சிக்கான முத்தரப்பு உடன்படிக்கையின் இறுதி வேலைகள் முற்றுப் பெற்றவுடன் 90 தயாரிப்பாளர்களது, ஏறக்குறைய ரூ.3,106 மில்லியன் கொண்ட வெளிநின்ற மொத்தப்படுகடன் 2000ஆம் ஆண்டு திசெம்பர் இறுதியில் புடவைப்படுகடன் மீட்சி நிதியத்துக்கு மாற்றப்பட்டது. இப்படுகடன் மாற்றலின் பேரில் அரசு கிட்டத்தட்ட ரூ.953 மில்லியனை வங்கிகளுக்கும், நிதி நிறுவனங்களுக்கும் செலுத்தியது. இத்திட்டத்தின் கீழ் 111 தொழில் முயற்சிகள், மீளமைப்பு/ நவீனமயமாக்கல் எடுத்துரைப்புக்களை தமது வங்கிகள்/ நிதியியல் நிறுவனங்களுக்கும் திறைசேரிக்கும் சமர்ப்பித்தன. இவற்றில் 103 தொழில் முயற்சிகள் தமது உத்தேச செயற்றிட்டங்களுக்கான ஏற்பிசைவை வங்கிகள்/ நிதியியல் நிறுவனங்களிடமிருந்து ஏற்கனவே பெற்றுக் கொண்டுள்ளதுடன், 30 தொழில் முயற்சிகள் தமது மீளமைப்பு/ நவீனமயப்படுத்தல் செயற்றிட்டங்களை ஏற்கனவே நடைமுறைப்படுத்தத் தொடங்கியுள்ளன. கைத்தொழில் அபிவிருத்தியமைச்சின் கீழ் இயங்கும் உள்நாட்டுப் புடவை அனுமதிப் பங்கு ஒதுக்கீட்டுக் குழு, 1999இல் கொள்வனவை ஆரம்பித்ததுடன் தொடர்ந்தும் இரண்டாவது ஆண்டாக 2000ஆம் ஆண்டில் புடவை அனுமதிப் பங்கினை ஒதுக்கீடு

அட்டவணை 4.13
உயர் தொழில்நுட்ப ஊக்குவிப்புத் திட்டத்தின்கீழ் ஒப்புதல் வழங்கப்பட்ட செயற்றிட்டங்கள்
2000 இறுதியில் உள்ளவாறு (அ)

| வகை | புதிய | | | ஏற்கெனவேயுள்ள | | | மொத்தம் | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | எண்ணிக்கை | முதலீடு ரூ.மில். | உள்ளார்ந்த தொழில் நிலை | எண்ணிக்கை | முதலீடு ரூ.மில். | உள்ளார்ந்த தொழில் நிலை | எண்ணிக்கை | முதலீடு ரூ.மில். | உள்ளார்ந்த தொழில் நிலை |
| 1. உணவு, குடிபானங்கள், புகையிலை | 28 | 2,623 | 2,486 | 77 | 7,210 | 4,811 | 105 | 9,833 | 7,297 |
| 2. புடவைகள், அணியும் ஆடைகள், தோல் உற்பத்திகள் | 14 | 761 | 1,178 | 47 | 1,895 | 2,948 | 61 | 2,656 | 4,126 |
| 3. மர, மர உற்பத்திகள் | 8 | 283 | 665 | 11 | 565 | 574 | 19 | 848 | 1,239 |
| 4. தாளும் தாள் உற்பத்திகளும் | 11 | 721 | 818 | 39 | 2,171 | 1,790 | 50 | 2,892 | 2,608 |
| 5. இரசாயனம், பெற்றோலியம், இறப்பர், | | | | | | | | | |
| பிளாத்திக்கு உற்பத்திகள் | 60 | 2,963 | 3,725 | 138 | 5,936 | 7,407 | 198 | 8,899 | 11,132 |
| 6. உலோகமல்லாக் கனிப்பொருள் உற்பத்திகள் | 12 | 2,654 | 1,232 | 13 | 1,411 | 753 | 25 | 4,065 | 1,985 |
| 7. அடிப்படை உலோக உற்பத்திகள் | 7 | 1,066 | 798 | 19 | 1,188 | 1,190 | 26 | 2,254 | 1,988 |
| 8. உருவமைக்கப்பட்ட உலோக உற்பத்திகள் | | | | | | | | | |
| பொறிகளும் போக்குவரத்துக் கருவிகளும் | 23 | 1,091 | 1,537 | 53 | 2,815 | 3,179 | 76 | 3,906 | 4,716 |
| 9. வேறு எங்கும் குறிப்பிடப்படாத தயாரிக்கப்பட்ட | 22 | 1,779 | 1,843 | 25 | 837 | 1,005 | 47 | 2,616 | 2,848 |
| உற்பத்திகள் | 14 | 585 | 901 | 26 | 4,077 | 1,581 | 40 | 4,662 | 2,482 |
| 10. பணிகள் | | | | | | | | | |
| மொத்தம் | 199 | 14,526 | 15,183 | 448 | 28,105 | 25,238 | 647 | 42,631 | 40,421 |

(அ) தற்காலிகமானவை.

மூலம்: கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சு.

செய்தது. இவ்வாண்டில், ஏறக்குறைய 3.6 மில்லியன் மீற்றர்கள் கொண்ட சீத்தைத் துணிக்காக ஆறு உள்நாட்டுப் புடவைத் தயாரிப்பாளர்களுக்கு அளவுப் பங்கு ஒதுக்கீடு செய்யப்பட்டது. மீளமைப்பு நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் எந்தவித நிவாரணத்துக்கும் தகுதியற்ற புடவைத் தயாரிப்பாளர்கள், செயற்றிட்டத்தோடு தொடர்புடைய பொறி, உதிரிப்பாகங்கள் மற்றும் துணைக் கருவிகள் ஆகியவற்றை தீர்வையற்ற அடிப்படையில் இறக்குமதி செய்ய அனுமதிக்கப்பட்டுள்ளன. மேலும் உள்நாட்டு மற்றும் ஏற்றுமதிச் சந்தை சார்ந்த செயற்றிட்டங்களைக் கையேற்கும் புடவை மற்றும் துணைப் பொருள் கைத்தொழில்கள் ஆகக் குறைந்த முதலீட்டுத் தேவைப்பாட்டினை பூர்த்தி செய்யுமிடத்து முதலீட்டுச்சபை அந்தஸ்துக்குத் தகுதியுடையனவாகும். சிறிய அளவுச் செயற்றிட்டத்துக்கான ஆகக் குறைந்த முதலீட்டுத் தேவைப்பாடு ரூ. 5 மில்லியனாகக் குறைக்கப்பட்டது.

## தேசிய உற்பத்தியாக்க பத்தாண்டு நிகழ்ச்சித் திட்டம்

தனியார்துறை மற்றும் அரசதுறை ஆகிய இரண்டினதும் உற்பத்தியாக்கத்தை அதிகரிக்கும் நோக்குடன் 1997இல் தொடங்கப்பட்ட தேசிய உற்பத்தியாக்க பத்தாண்டு நிகழ்ச்சித் திட்டம் (1997 - 2006) 2000ஆம் ஆண்டிலும் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டது. இந்நிகழ்ச்சித் திட்டம், சமூகத்தின் அனைத்துப் பிரிவினருக்கிடையேயும் உற்பத்தியாக்கக் கோட்பாடு மற்றும் உற்பத்தியாக்க நுணுக்கங்கள் பற்றிய தெரிநிலையை உருவாக்குவதில் கவனத்தைச் செலுத்தியதுடன் இந்நோக்கத்துக்காக வானொலி நிகழ்ச்சிகள், தொலைக்காட்சி நிகழ்ச்சிகள், விரிவுரைத் தொடர்கள் ஆய்வரங்குகள் மற்றும் செயலமர்வுகள் தேசிய உற்பத்தியாக்கச் செயலகத்தினால் ஒழுங்கு செய்யப்பட்டன. 2000ஆம் ஆண்டில் 63 ஆங்கில, 62 சிங்கள மற்றும் 22 தமிழ் வானொலி நிகழ்ச்சிகள் ஒலிபரப்பப்பட்டதுடன் 76 தொலைக்காட்சி நிகழ்ச்சிகளும் ஒலிபரப்பப்பட்டன. ஆய்வின் கீழான காலப்பகுதியில் அமைச்சுக்கள் மற்றும் ஏனைய அரசதுறை அமைப்புக்களின் அலுவலர்களுக்காக 23 செயலமர்வுகளும் விரிவுரை நிகழ்ச்சிகளும் திட்டங்களும் நடத்தப்பட்டதுடன் உற்பத்தியாக்கக் கோட்பாட்டின் அடிப்படையில் 3 நிகழ்ச்சித் திட்டங்கள் பாடசாலைகளுக்காக ஒழுங்கு செய்யப்பட்டன. மேலும் தேசிய உற்பத்தியாக்க வழிப்படுத்தற் குழுவின் 15 கூட்டங்களும், இணைப்பு அலுவலர்களது 13 கூட்டங்களும், உற்பத்தியாக்க நடவடிக்கைகளின் கண்காணிப்பு மற்றும் மீளாய்வு நோக்கங்களுக்காக இக்காலப்பகுதியில் நடைபெற்றன. இவ்வாண்டில் கட்டுநாயக்க மற்றும் பியகம ஏற்றுமதிப்பதனிடல் வலயங்களில் தொழில்புரியும் மேற்பார்வை அலுவலர்கள் மற்றும் கனிஷ்ட நிறைவேற்று அலுவலர்களுக்காக 2 நிகழ்ச்சித் திட்டங்கள் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தன. மேலும் உற்பத்தியாக்கம் மீதான மாதாந்த விரிவுரைகள்

தனியார்துறை முகாமையாளர்களுக்காக ஒழுங்கு செய்யப்பட்டதுடன், உற்பத்தியாக்கக் கோட்பாடுகளின் பரந்தளவிலான பிரயோகம் பற்றிய அனுபவமுடையோரின் கருத்துக்கள் பங்கு பற்றியோரிடையே பரிமாறிக் கொள்ளப்பட்டன. இம்மாதாந்த விரிவுரை நிகழ்ச்சித் திட்டத்தின்கீழ், உற்பத்தியாக்கம் தொடர்பான பல விடயங்கள் பற்றி 6 விரிவுரைகள் நடைபெற்றன.

## 4.8 கைத்தொழில் அமைவிடம்

நாட்டின் பின்தங்கிய பகுதிகளில் கைத்தொழில்கள் நிறுவப்படுவதை ஊக்குவிக்கும் முகமாக அரசு அண்மைய ஆண்டுகளில் பல கொள்கை வழிமுறைகளை மேற் கொண்டதுடன் இறை ஊக்குவிப்புக்களையும் வழங்கியிருந்தது. 2000ஆம் ஆண்டின் இறுதியளவில், முதலீட்டுச்சபைச் சட்டத்தின் 16ஆம் பிரிவின் கீழும் 17ஆம் பிரிவின் கீழும் பதிவு செய்யப்பட்ட தொழில் முயற்சிகளுள் 76 சதவீதமானவையும், கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சில் பதிவு செய்யப்பட்ட கைத்தொழில்களும் கம்பகா மற்றும் கொழும்பு ஆகிய இரண்டு மாவட்டங்களிலும் அமைந்திருந்தன. இவ்விரு மாவட்டங்களிலும் கைத்தொழில் அதிகளவில் குவிந்திருந்தமை, தொழிலாளர் பற்றாக்குறை, வீதி நெருக்கடி, உண்மைச் சொத்துக்களின் அதிகரிப்பு, இம் மாகாணங்களிலுள்ள முக்கிய நகரங்களில் சூழல் மாசடைதல் போன்ற பிரச்சனைகளை உருவாக்கின. ஏனைய மாவட்டங்களில் உட்கட்டமைப்பு வசதிகள் போதியளவில் காணப்படாமையே, தயாரிப்பாளர்கள் தமது தொழிற்சாலைகளை கொழும்பு மற்றும் கம்பகா மாவட்டங்களில் அமைப்பதற்கான முக்கிய காரணமாகும். எனவே அரசானது கைத்தொழில் பூங்காக்கள்/ பேட்டைகள், அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள், அதற்கேயான பொருளாதார நிலைய நிகழ்ச்சித் திட்டம், ஐம்பது ஆடைத் தொழிற்சாலை நிகழ்ச்சித்திட்டம், கைத்தொழில் நகர நிகழ்ச்சித்திட்டம் மற்றும் சிறிய ஏற்றுமதிப் பதனிடல் வலய நிகழ்ச்சித்திட்டம் ஆகியவற்றின் கீழ் தூரப் பகுதிகளில் அமைந்துள்ள மாவட்டங்களினது உட்கட்டமைப்பு வசதிகளை முன்னேற்றுவதற்கான வழிமுறைகளை மேற்கொண்டது.

அவிசாவலையில் அமைந்துள்ள சீதாவாக்க கைத்தொழிற் பூங்கா, பன்னாட்டுத் தரத்திலுள்ள 10 தொழிற்சாலைகளை உள்ளடக்கி 71 தொழிற்சாலைத் தொகுதிகளுக்கு வசதிகளை வழங்கியது. 2000ஆம் ஆண்டின் இறுதியில் 64 தொழிற்சாலைத் தொகுதிகள் முதலீட்டாளர்களிடையே ஒதுக்கீடு செய்யப்பட்டதுடன் 22 தொழிற்சாலைகள் வர்த்தகத் தொழிற்பாட்டிலீடுபட்டு ஏறக்குறைய 6,000 ஆட்களுக்கு நேரடித் தொழில் வாய்ப்பை வழங்கின. மற்ற 20 செயற்றிட்டங்கள் 2000ஆம் ஆண்டிறுதியில் நடைமுறைப்படுத்தலின் பல்வேறு நிலைகளில் காணப்பட்டன. சீதாவக்க கைத்தொழிற் பூங்கா, ஐக்கிய இராச்சியம், பெல்ஜியம், யப்பான், இந்தியா, கொங்கொங், கனடா, நெதர்லாந்து, கொரியா மற்றும் பிரான்சு ஆகிய நாடுகளிலிருந்து கணிசமான வெளிநாட்டு முதலீடுகளைக் கவர்ந்திருந்தது. சீதாவக்க கைத்தொழில் பூங்காவில் அமைந்துள்ள செயற்றிட்டங்கள் மருத்துவக் கையுறைகள், மென் விளையாட்டுப் பொருட்கள், பெறுமதி கூடிய ஆடைகள், உருக்கு உற்பத்திகள், பின்னப்பட்ட சீத்தைகள், பல்லிணைப்புப் பொருட்கள் இறப்பர் உற்பத்திகள், மர உற்பத்திகள், பதனிடப்பட்ட கனிப்பொருள்கள், மருந்தாக்கங்கள், தையல் நூல் போன்றவற்றை உற்பத்தி செய்கிறது. இப் பூங்காவின் மொத்தத் தொழில்வாய்ப்பு ஏறக்குறைய 50,000 ஆட்களௌன மதிப்பிடப்பட்டது.

பிரதேச கைத்தொழில் பேட்டை அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 2000ஆம் ஆண்டு திசெம்பர் இறுதியில் 11 கைத்தொழில் பேட்டைகள் தொழிற்பாட்டிலிருந்ததுடன் மற்றும் 2 பேட்டைகள் முடிவடையும் நிலையில் இருந்தன. மேலும் 6 கைத்தொழில் பேட்டைகளின் அபிவிருத்தி வேலைகள் 2000ஆம் ஆண்டில் ஏற்கனவே தொடங்கப்பட்டுள்ளன. கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சின்படி அண்மைய எதிர்காலத்தில் கைத்தொழில் பேட்டைகளை அபிவிருத்தி செய்வதற்காக மேலும் 9 அமைவிடங்கள் குறித்தொதுக்கப்பட்டுள்ளன. 2000ஆம் ஆண்டு இறுதியில் உள்ளார்ந்த வாய்ப்பு வளங்களைக் கொண்ட முதலீட்டாளர்கள் தமது கைத்தொழில் பிரிவுகளை ஏற்படுத்த ஏதுவாக தங்கொட்டுவ, மாகந்துற, நூறாணி, குறுவிட்ட, நாலந்தஎல்லாவெல, தம்பதேனியா, கரந்தெனியா, உடுகாவா, மினுவாங்கொட, கோமாகம, பெலியத்தை, மடவள - உல்பத, பட்டஅத்த, பதுளை, லக்சாயுயன, நவகம்புர, கொலன்னாவ, மற்றும் இரத்தமலானை, கைத்தொழில் பேட்டைகளில் ஏறத்தாழ 186 காணித் துண்டங்கள் ஒதுக்கப்பட்டன. ஆண்டின் இறுதியில் பல்வேறு கைத்தொழில் பேட்டைகளிலும் 56 கைத்தொழில் செயற்றிட்டங்கள் வர்த்தகத் தொழிற்பாட்டில் ஈடுபட்டிருந்து 6,791பேருக்குத் தொழில் வாய்ப்புக்களை வழங்கியதுடன், மேலும் 57 தொழிற்சாலைகள் நிருமான வேலைகளின் கீழ் இருந்தன. குறிக்கப்பட்ட பொருளாதார நடவடிக்கைகளுக்காக பிரதேசமொன்றினை விரிவாக்கி மேம்படுத்துவதனை நோக்கமாகக் கொண்ட அதற்கேயான பொருளாதார நிலைய நிகழ்ச்சித் திட்டம் மேற்கொள்ளப்படட வேளையில் மற்றைய இணைப்புக்களைக் கட்டியெழுப்பும் வேலைகளும் 2000ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்டன. கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சின்படி, தம்புள்ளை அதற்கேயான பொருளாதார நிகழ்ச்சித் திட்டத்தின் கட்டம் IIஇன் வேலைகள் 2000ஆம் ஆண்டில் தொடங்கப் பட்டுள்ளதுடன் கெப்பட்டிபொலா அதற்கேயான பொருளாதார நிலைய நிகழ்ச்சித் திட்டத்தின் நிருமான வேலைகள் ஏற்கனவே முற்றுப்பெற்றுவிட்டன. எம்பிலிப்பிட்டியா, மொனராகலை, மற்றும் பமுணுகம ஆகிய இடங்களில் அதற்கேயான பொருளாதார நிலைய நிகழ்ச்சித் திட்டங்களை ஏற்படுத்தவதற்குரிய

சாத்தியங்களைக் கண்டறிவதற்கான ஆரம்ப ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மொரட்டுவப் பிரதேசத்தில் தளபாடக் கைத்தொழிலுக்கு உதவும் பொருட்டு அங்கு அதற்கேயான பொருளாதார நிலைய நிகழ்ச்சித் திட்டத்தினை ஏற்படுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இருநூறு ஆடைத் தொழிற்சாலை நிகழ்ச்சித் திட்டத்தின்கீழ் 2000ஆம் ஆண்டு இறுதியில் 21 மாவட்டங்களில் 164 ஆடைத் தொழிற்சாலைகள் வர்த்தகத் தொழிற்பாட்டிலீடுபட்டிருந்தன. இந்த 164 தொழிற்சாலைகளில் 143 தொழிற்சாலைகள் (அல்லது 87 சதவீதம்) கொழும்பு கம்பகா மாவட்டங்களுக்கு வெளியே அமைந்திருந்தன. இந் நிகழ்ச்சித் திட்டத்தின் குறிப்பிடத்தக்க பண்புயாதெனில் வவுனியா, மட்டக்களப்பு, திருகோணமலை, அம்பாறை மற்றும் பொலனறுவை போன்ற கடினமான பிரதேசங்களில் தொழிற்சாலைகளை நிறுவ நடவடிக்கைகள் எடுக்கப்பட்டமையேயாகும். 2000ஆம் ஆண்டு இறுதியில் 14 தொழிற்சாலைகள் அநுராதபுரம் மற்றும் கொழும்பு மாவட்டங்களிலும் 16 தொழிற்சாலைகள் இரத்தினபுரி மாவட்டத்திலும் 11 தொழிற்சாலைகள் புத்தளம் குருநாகல் மற்றும் நுவரெலியா மாவட்டங்களிலும் காணப்பட்டன. 1998 வரவு செலவுத் திட்டத்தில் அறிமுகப்படுத்தப்பட்ட ஐம்பது ஆடைத்தொழிற்சாலை நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 2000ஆம் ஆண்டு இறுதியில் 67 தொழிற்சாலைகளுக்கு ஒப்புதல் வழங்கப்பட்டன. இந் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் ஒப்புதலளிக்கப்பட்ட செயற்றிட்டங்களுக்கு ஆடை அனுமதிப் பங்கும் முதலீட்டுச்சபை ஊக்குவிப்புக்களும் வழங்கப்பட்டன. இச் செயற்றிட்டங்களை தெரிவு செய்வதற்கான பிரமாணங்கள் செயற்றிட்டங்கள் அமையப்படவுள்ள பிரதேசத்தின் தொழிலின்மை அளவை அடிப்படையாகக் கொண்டிருந்தன. 25 தகைமைபெற்ற செயற்றிட்டங்கள் தென்மாகாணத்திலும் எஞ்சியவை கொழும்பு, கம்பகா தவிர்ந்த மற்றைய மாவட்டங்களிலும் காணப்பட்டன. இந்நிகழ்ச்சித் திட்டத்தின் கீழான செயற்றிட்டங்களின் மொத்த முதலீடு ரூ.2,927மில்லியன் என மதிப்பிடப்பட்டுள்ளது. இச் செயற்றிட்டங்கள் ஏறத்தாழ 72,000 ஆட்களுக்கு நேரடி மற்றும் மறைமுக தொழில் வாய்ப்புக்களை வழங்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது. இந் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 2000ஆம் ஆண்டு இறுதியில் 18 மாவட்டங்களில் 50 தொழிற்சாலைகள் வர்த்தக உற்பத்தியில் ஈடுபட்டு ஏறத்தாழ 20,014 பேருக்கு நேரடித் தொழில் வாய்ப்புக்களை வழங்கியுள்ளதுடன் 9 தொழிற்சாலைகள் நிருமாணிக்கப்பட்டு வருகின்றன.

பிரதேச கைத்தொழில் மயமாக்கலை மேம்படுத்துவதற்காகவும் முதலீட்டாளர்களுக்கு மாற்று அமைவிடங்களை வழங்குவதற்காகவும் முதலீட்டுச்சபை தொடர்ந்தும் கொழும்பிற்கு வெளியே சிறிய ஏற்றுமதிப் பதனிடல் வலயங்களை நிறுவிவருகிறது. கொறண, பொல்காவலை, மாவத்தகம, மற்றும் வதுப்பிட்டிவல ஆகிய இடங்களில் சிறு ஏற்றுமதிப் பதனிடல் வலயங்களையும் மிரிஜ்ஜவில்ல மற்றும் கன்வெல்லவில் கைத்தொழில் பேட்டைகளையும் முதலீட்டுச்சபை ஏற்படுத்தியுள்ளது. 70 ஏக்கர்களை உள்ளடக்கிய கொறண ஏற்றுமதிப் பதனிடல் வலயத்தின் கட்டம் II இன் கீழான உட்கட்டமைப்பு அபிவிருத்தி வேலைகள் ஏற்கனவே தொடங்கியிருப்பதுடன் இவ்வேலைகள் 2001 யூனில் முடிவடையும் என எதிர்பார்க்கப்படுகின்றது. ஏழு செயற்றிட்டங்களைத் தொடங்குவதற்கு கைத்தொழில் காணித் துண்டுகள் ஒதுக்கப்பட்டுள்ளதுடன் தொழிற்சாலையின் நிருமானத்தினை 2001ஆம் ஆண்டுத் தொடக்கத்தில் ஆரம்பிப்பதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது. 22 ஏக்கர் பரப்பளவை உள்ளடக்கிய பொல்காவெல ஏற்றுமதிப் பதனிடல் வலயத்தின் கட்டம் I இன் உட்கட்டமைப்பு அபிவிருத்தி வேலைகள் ஏற்கனவே முடிவடைந்திருப்பதுடன் ஆறு முதலீட்டாளர்களுக்கு தொழிற்சாலை அமைவிடங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன. தொழிற்சாலைகளின் கட்டுமான வேலைகள் நடைபெற்று வருவதுடன் இத் தொழிற்சாலைகள் 2001ஆம் ஆண்டில் இரண்டாம் காலாண்டுப்பகுதியில் வர்த்தகத் தொழிற்பாட்டைத் தொடங்கும் எனவும் ஏறத்தாழ 1,125 ஆட்களுக்கு தொழில் வாய்ப்புக்களை வழங்கும் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது. 20 ஏக்கர் நிலத்தினை உள்ளடக்கிய மாவத்தகம ஏற்றுமதிப் பதனிடல் வலயத்தின் கட்டம் I இல் உட்கட்டமைப்பு வசதிகள் ஏற்கனவே அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளன. ஐந்து தொழிற்சாலைகளின் கட்டுமான வேலைகள் நடைபெற்று வருவதுடன் 2001ஆம் ஆண்டின் இரண்டாம் காலாண்டில் வர்த்தகத் தொழிற்பாட்டினை தொடங்கும் இக்கைத்தொழில் சாலை ஏறத்தாழ 1,350 ஆட்களுக்கு தொழில் வாய்ப்பை வழங்கும் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது. வத்துப்பிட்டிவல ஏற்றுமதி பதனிடல் வலயத்தில் தொகுதி "பீ" பகுதியின் அபிவிருத்தியில் உள்ளக வீதிகள், நீரை அகற்றும் வசதிகள் மற்றும் சுற்றுப்புற நிருமாண வேலைகள் தொடங்கப்பட்டுள்ளன. முதலீட்டுச்சபையினால் நடைமுறைப்படுத்தப்பட்ட இறப்பர் ஊக்குவிப்புத் திட்டத்தின் கீழ் நில அபிவிருத்தி மற்றும் தொழிற்சாலை நிருமாண வேலைகளுடன் கொக்கல ஏற்றுமதிப் பதனிடல் வலயத்தின் உட்கட்டமைப்பு அபிவிருத்தி வேலைகள் தொடர்ந்தும் மேற்கொள்ளப்பட்டன. இவ்வலயத்தில் 2000ஆம் ஆண்டில் 12 புதிய முதலீட்டுச் செயற்றிட்டங்கள் நடைமுறைப்படுத்திலின் கீழ் இருந்தன. பாதுகாப்புடன் தொடர்பான பொருட்களை தயாரிக்கின்ற தொழில் முயற்சிகளுக்கு ஒதுக்குவதற்கு கைத்தொழில் பூங்காக்களை ஏற்படுத்துவதற்காக முதலீட்டுச்சபை கன்வலவில சலாவ கைத்தொழில் பேட்டையில் 50 ஏக்கர் நிலங்களை அடையாளங் கண்டிருக்கிறது. இப்பூங்காவின் உட்கட்டமைப்பு அபிவிருத்தி வேலையை 2001ஆம் ஆண்டில் தொடங்குவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.